# பவளம்
# 2005

15120

## 75ஆவது ஆண்டு நிறைவு விழா
## சிறப்பு மலர்




யா/புன்னாலைக்கட்டுவன்
அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை

உளக் கருத்தை வெளிப்படையாகத் தாங்கி வரும்
"பூவளவிழா" மலர் வெளிவர எமது நல்லாசிகள்

சித்தி விநாயகர்
பல்பொருள் வாணிபம்



அனைத்து அத்தியாவசிய பொருட்கள்,
பிளாத்திக் பொருட்கள், மற்றும்
அழகுசாதனப் பொருட்கள் என்பனவற்றைத்
தரமாகவும், மலிவாகவும் நீங்கள்
பெற்றுக் கொள்ளலாம்.

உரிமையாளர்
ந. கண்ணன்

பலாலி வீதி,
புன்னாலைக்கட்டுவன்.

15120

உ

சிவமயம்

## யா/புன்னாலைக்கட்டுவன்
## அரசினர் தமிழ் கலவன் பாடசாலை

# பவளவிழாச் சிறப்புமலர்

# பவளம்



பொது நூலகம்
வலி. தெற்கு சுன்னாகம்
வரவு பதிவு எண் 15120
வகுப்பு எண்

வெளியீடு

11.09.2005

1927 2005



# தமிழ்மொழி வாழ்த்து



வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே

வான மளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழியவே

ஏழ்கடல் வைப்பினுந் தன்மணம் வீசி
இசைகொண்டு வாழியவே

எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழியவே

சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையகமே

தொல்லை வினைதரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ்நாடே

வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ்மொழி
வாழ்க தமிழ் மொழியே


வானம் அறிந்த தனைத்து மறிந்து
வளர்மொழி வாழியவே

– சுப்பிரமணிய பாரதியார்

15120

உ

கணபதி துணை



“சித்திவிநாயகனே புன்னாலைக்
கட்டுவன் வாழ் இறையே
பக்தியாய் நாம் பணிந்தோம் - எமைவந்து
பாலிக்க வேண்டும் அப்பா”

பொது நூலகம்
வலி. தெற்கு சுன்னாகம்
வரவுப் பதிவு எண் 15120
வகுப்பு எண்

# சமர்ப்பணம்



தமிழ் கூறும் நல்லுலகிற்
தமிழ்த் தொண்டாற்றித்
தனித்துவமான முத்திரை பதித்த
தமிழ்ப் பேரறிஞர்
புன்னாலைக்கட்டுவன்
**வித்துவசிரோண்மணி**
**சி. கணேசையர் அவர்களது**
திருவடிகளில் இம்மலரினைச்
சமர்ப்பணம் செய்கின்றோம்.

மலர்க்குழுவினர்



# பாடசாலைக் கீதம்



என்நாளும் வாழியவே
எங்கள் புன்னாலைக்கட்டுவன்
அரசினர் பாடசாலை
என்னாளும் வாழியவே.

பொன்னரும் மேனியனைப் பூசிக்கும் சைவத்தமிழ்
நன்மகள் உறையும் நல்ல திருக்கோயில்
(என்னாளும் வாழியவே)

எழுத்தறிவித்திடும் இறையவரைப் பணிவோம்
வழுத்தியே மறைநூலோர் வாழத்தியே துதிப்போம்
பழுத்த செந்தமிழின் பழச்சுவை நுகர்வோம்
செழித்திடக் கலைக்கல்வி சீர்வளம் கொழித்திட
(என்னாளும் வாழியவே)

எண்ணும் எழுத்தறிவும் கண்ணெனத் தரும் வண்ணம்
நண்ணும் கலைக்கல்வி கல்வியருளும் பள்ளி
வண்ணத் தமிழ்க் கலை கல்வி அழகே அழகு
மண்ணினத்தின் ஞானம் மகிழ்ந்தூட்டும் கல்விக்கூடம்.
(என்னாளும் வாழியவே)



# வாழ்த்துரை

"உயர்க உயர்க
மென்மேலும் உயர்க"

மேற்படி பாடசாலை ஆரம்பமாகி எழுபத்தைந்து ஆண்டுகள் நிறைவுபெறுகின்றது. மனிதனாகப் பிறந்தவன் இறையன்போடும் கல்வி மேம்பாட்டோடும் வாழ்வதற்கு உறுதுணையாக அமைவன கல்விக் கழகங்களே என்றால் அதில் மிகையொன்றுமில்லை. ஆண்டுகள் பல சென்றுவிடலாம். ஆனால் குறிப்பிட்ட கல்விச் சமூகத்தில் இருந்து பெற்ற அனுபவங்கள் என்றும் உள்ளத்தைவிட்டு நீங்கா. இதனை முன்னிட்டு அவ்வக் காலத்தில் கடமைபுரிந்த அதிபர்களையும், ஆசிரியர்களையும் பாடசாலைச் சமூகம் பாராட்டுகிறது. புன்னாலைக்கட்டுவன் என்றால் ஆயாக்கடவைப் பிள்ளையாரின் திருவருள் முழுமையாகச் செறிந்த இடமாகும். எனவே விநாயகனின் அருளும் நலன் விரும்பிகளின் ஆதரவும் ஒன்றாகச் சேர்ந்து இப் பாடசாலையை மேலும் உயர்த்த வேண்டும் என்று துர்க்கை அம்பாளைப் பிரார்த்திக்கிறேன்.

கலாநிதி.செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி J.P
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை.

# ஆசியுரை

## வாழ்க! வளர்க! இவ்வறிவாலயம்

சித்திவிநாயகரது திருவருள் பெற்ற இவ்வறிவாலயத்திற் கல்வி கற்று பல மாணவர்கள் பொறியியலாளர்களாக, வைத்திய கலாநிதிகளாக, ஆசிரிய மணிகளாக உயர்வடைந்து, பெரும் பெரும் பதவிகளைப் பெற்று வருகின்றனர். நானும் இங்கு பழைய மாணவன். இன்றைய பவளவிழா நாளில் எனது நல்லாசியைத் தெரிவிக்கும் அளவிற்கு என்னையும் உயர்த்திவிட்டமை இப்பாடசாலை எனக்களித்த பேறே ஆகும். இவ்வறிவாலயம் மென்மேலும் வளர எனது நல்லாசிகள்.

பிரதம சிவாச்சாரியார்,
சித்திவிநாயகர் ஆலயம்,
ஆயாக்கடவை.

சோதிட கலாநிதி, கிரியாதத்துவநிதி
சிவஸ்ரீ. தி. கெங்காதரக்குருக்கள்

# எனது பிரார்த்தனை

கடந்த பல ஆண்டுகளாக நலிவடைந்திருந்த இப்பாடசாலை தற்போது நல்ல ஆசிரியர் குழாமுடனும் நல்ல பௌதீகவளங்களுடனும் இயங்கி வருகிறது. இவற்றுக்கெல்லாம் மூலகாரணமானவர்களான இப்பாடசாலை அதிபரும், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினரும், பழையமாணவர் சங்கத்தினரும் பாராட்டுக்குரியவர்கள். இவர்களது முயற்சி மென்மேலும் விரிவடைந்து யாழ். மண்ணில் ஒரு மாதிரிப் பாடசாலையாக இப்பாடசாலை திகழ வேண்டும் எனச் சித்தி விநாயகனைப் பிரார்த்திக்கின்றேன்.

சித்தி விநாயகர் ஆலயம்,
ஆயாக்கடவை,
புன்னாலைக்கட்டுவன்.

பிரம்மஸ்ரீ.சோ. பாலகிருஷ்ணன் ஐயர்
பூசகர்.

# வாழ்த்துரை



பவள விழா ஆண்டில் கால்பதித்துள்ள யா/ புன்னாலைக்கட்டுவன் அ.த.க பாடசாலை வெளியிடும் மலருக்கு வாழ்த்துரை வழங்குவதில் பேருவகையடைகின்றேன். ஆயக்கடவை சித்தி வீநாயகர் ஆலய வீதியில் உள்ள மடத்தில் ஆரம்பித்த இவ்வித்தியாலயம் 1927 இல் சேர்.பொன். இராமநாதன் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டு உரிய கட்டடங்கள் அமைக்கப்பட்டு சீரோடும், சிறப்போடும் வளர்ச்சி பெற்று வந்தது.

கடந்த இரு தசாப்பதங்களாக நிலவிவரும் போர்ச்சூழலினால் பாதிக்கப்பட்ட இவ் வித்தியாலயம் மீளவும் துடிப்புடன் வளர்ச்சி பெற்று வருவது யாவரும் அறிந்ததே. புன்னாலைக்கட்டுவன் மக்கள் தமது வீடு வாசல்களை விட்டு இடம்பெயர்ந்து அனுபவித்த நிலையிலும் சித்தி வீநாயகர் ஆலயத்தினதும், இவ்வித்தியாலத்தினதும் வளர்ச்சியில் காட்டும் அக்கறை பாராட்டுதற்குரியது.

பொருளாதார வசதி குறைந்த பிள்ளைகள் முழுமையாகப் படிக்கும் பிள்ளைநேயப் பாடசாலையான இவ்வித்தியாலயத்தின் கல்வி வளர்ச்சியில் அதிபரும், ஆசிரியர்களும் காட்டும் அக்கறை பாராட்டுக்குரியது. இவ்வித்தியாலயம் மேலும் பல வளர்ச்சிகளைப் பெற ஆயக்கடவை சித்தி வீநாயகப் பெருமானை இறைஞ்சுகின்றேன்.


வலிகாமம்
வலயக் கல்வி அலுவலகம்,
சுன்னாகம்.

ப. விக்னேஸ்வரன்
வலயக்கல்விப் பணிப்பாளர்,
வலிகாமம்.

# வாழ்த்துச் செய்தி



வளரும் குழந்தைகளை எதிர்கால உலகிற்கும் பொருத்தமானவர்களாகவும் நாட்டிற்கும் சமூகத்திற்கும் பயனுடையவர்களாகவும், அறிவு, ஆற்றல், ஆன்மீகம் நிறைந்த ஒருமாணவ சமுதாயத்தை உருவாக்கும் இச்சீரிய பணியில் பாடசாலைகள் உயர்ந்து நிற்கின்றன. அவ்வகையில் புன்னாலைக்கட்டுவன் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை எழுபத்தைந்து வருடங்கள் தனது கல்விச்சேவையில் உயர்ந்து நிற்கின்றது.

அதனை வெளிப்படுத்தும் வகையில் பவளவிழாவைக் கொண்டாடும் முகமாக ஓர் கல்வி மலரை வெளியிடுவதற்கு முன்வந்தமையையிட்டு மகிழ்ச்சியடைவதுடன் அதற்கு வாழ்த்துச் செய்தியினை வழங்குவதையிட்டு மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

"கண் உடையார் என்போர் கற்றோர் முகத்திரண்டு புண் உடையார் கல்லாதார்" எனக் கூறிய வள்ளுவப் பெருமான் வாக்கிற்கிணங்க பாடசாலை வளர்ச்சியில் சகலரையும் அரவணைத்து தற்போதைய அதிபர், ஆசிரியர்கள் தமது நற்பணியைச் செய்து வருகின்றமை பாராட்டிற்குரியது. இதன் மூலம் பாடசாலை கற்றல், கற்பித்தல், இணைபாடவிதான செயற்பாடுகள் பௌதீக வளம் முதலாம் துறைகளில் முன்னேற்றப் பாதையில் வீறுநடை போடுகின்றது.

மேலும் பிள்ளைநேயப் பாடசாலை என்ற கட்டமைப்பின் கீழ் சகலரதும் ஒன்றிணைந்த செயற்பாடுகள் மூலம் உயர்வு பெற்றும் முன்மாதிரியாகவும் திகழ்ந்து வருகின்றமையும் போற்றுதற்குரியது.

இப்பாடசாலை கல்வி அபிவிருத்தியிலும் ஏனைய துறைகளிலும் வளர்ச்சியடைந்து மென்மேலும் பெருமையடைய வேண்டுமென ஆயக்கடவை சித்தி விநாயகப் பெருமானின் பாதார விந்தங்களை பணிந்து அவனருள் பெற வாழ்த்துகின்றேன்.

உடுவில் கோட்டம்,
சுன்னாகம்.

திரு.செ. குபேரநாதன்
கோட்டக்கல்விப் பணிப்பாளர்.

# ஆசிச்செய்தி



புன்னாலைக்கட்டுவன் அரசினர் தமிழ்கலவன் பாடசாலை எழுபத்தைந்தாவது ஆண்டு நிறைவு குறித்துப் பவளவிழாச் சிறப்பு மலர் வெளியிடுவது அறிந்து பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

இப்பாடசாலையின் வளர்ச்சிக்கு அயராது உழைத்து வரும் அதிபரும். திரு. மணியம் மற்றும் அவருக்குப் பக்கபலமாக நின்று பணிசெய்து வரும் ஆசிரியர்களும் பாராட்டிற்குரியவர்கள். இவர்களின் காலப்பகுதியில் இப்பாடசாலையில் பௌதீக வளங்களில் நிறைவும். கல்விச் செயற்பாடுகளில் பெருவளர்ச்சியும் பெற்றுள்ளமை சிறப்பான அம்சமாகும்.

இப்பாடசாலை துரித வளர்ச்சி கண்டு வரும் இவ்வேளையில் தனது 75ஆவது நிறைவு விழாவையும் பரிசளிப்பு விழாவையும் சிறப்புறக் கொண்டாட நடவடிக்கை எடுத்துவருவது பொருத்தமான ஒன்றாகும்.

இப்பாடசாலையின் வளர்ச்சிக்குப் பெற்றோரும் பழைய மாணவர்களும், நலன்விரும்பிகளும் தமது அக்கறையையும் ஒத்துழைப்பையும் தொடர்ச்சியாக வழங்கி வருவது பாராட்டிற்குரியது.

இப்பாடசாலை மென்மேலும் வளர்ச்சி பெற்று இப்பிரதேச மாணவர்களின் நிறைவான கல்விக்கு பக்கபலமாக இருக்க வேண்டுமென மனமார வாழ்த்தி எனது ஆசியுரையை நிறைவு செய்கின்றேன்.

வலயக்கல்வி அலுவலகம்,
வலிகாமம்.

வி.எம். முத்துராஜா
உதவிக்கல்விப் பணிப்பாளர் (ஆங்கிலம்),

# ஆசியுரை



மனித சமூகத்தின் ஆளுமைப் பரிணாமங்களைக் கட்டியெழுப்புகின்ற சமூக மைய ஸ்தாபனங்களாகப் பாடசாலைகள் விளங்குகின்றன. கால நதியோட்டத்தில் கலக்குகின்ற மனிதச் செயற்பாடுகளின் புதிய பரிமாணங்களையும் வளர்ச்சிகளையும் உள்வாங்கிப் புது மெருகுடனும், செழிப்புடனும், வளத்துடனும், அறிவியல் தொகுதியினை கையளிப்பதனூடாகக் காத்திரமான கனதியான சமூகப் பங்களிப்பை ஆற்றுகின்ற கல்விச்சாலைகளில் ஒன்றாகச் செயற்பட்ட இப்பாடசாலையினைப் பாராட்டுவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

75 வருட காலங்களாகத் தன்னுடன் ஒட்டி உறவாடிய மழலைச் செல்வங்களின் மனத்தில் அழிக்கலொண்ணாத இடம் பிடித்து அவர்கள் தம் ஆயுட்காலம் வரைக்கும் இப்பாடசாலை அன்னையின் நாமத்தை மறக்கமுடியாத அளவிற்கு அவர்களின் வளர்ச்சிக் கூறுகளில் பின்னிப் பிணைந்துள்ளது.

அறிவியற் கல்வியுடன் ஆன்மீகக் கல்வியையும் இணைத்து வழங்கும் வகையில் புகழ்மிக்க ஆலயச்சூழலில் இப்பாடசாலை அமைக்கப்பட்டுள்ளமையானது இக்கல்விச் சாலையினைத் தூர திருஷ்டி மிக்க தீர்க்கதரிசனப் பார்வையினைப் பிரதிபலித்து நிற்கின்றது. புதியகல்விச் சீர்திருத்த நடைமுறைகளினை வெற்றிகரமாகப் பின்பற்றுவதில் ஏனைய வலிகாமம் வலய ஆரம்பப் பாடசாலைகளுக்கு முன்னுதாரணமாகச் செயற்படுகின்றது. அமைதியும், பொறுமையும் தீர்க்கதரிசனப் பார்வையும், செயற்றிறனும் கொண்ட தற்போதைய அதிபர் திரு.எஸ். மணியம் அவர்களுடைய காலத்தில் இப்பவளவிழா நடைபெறுவது இப்பாடசாலையின் எதிர்கால நல்வளர்ச்சிக்குக் கட்டியங் கூறுகின்ற ஒரு நல் அறிகுறி நிகழ்வாக அமைகிறது. இப்பாடசாலையெனும் கற்பக விருட்சம் மேன்மேலும் பரந்து விரிந்து வளர்ச்சியடையந்து சைவத்திற்கும் தமிழுக்கும் நற்பணியாற்றுவதற்கு இறைவனின் பெயரால் எனது நல்லாசியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நன்றி

வலிகாமம் கல்வி வலயம்,
சுன்னாகம்.

சு. சுந்தரசிவம்
பிரதிக்கல்விப் பணிப்பாளர்.

# வாழ்த்துச் செய்தி



இலங்கையின் மணிமுடியான யாழ்ப்பாணத்தில் சிறப்பான மண்வளத்தையும் மக்கள் வளத்தையும் கொண்ட சிற்றூர் புன்னாலைக்கட்டுவன். இராணுவத்தின் உயர்பாதுகாப்புக் கட்டுப்பாட்டில் இருந்து விடுபடும் எல்லைக் கிராமமாக இது இருப்பதால் பல இழப்புக்களை கடந்த காலங்களில் சந்தித்திருந்த போதும் தம் முயற்சியைக் கைவிடாத சிறப்பைக் கொண்ட மக்கள் வாழும் நற்பூமி இது.

இங்கு கல்விப் பணிபுரிந்து அறிவையும், அறத்தையும், வளர்க்கும் புன்னாலைக்கட்டுவன் அ.த.க. பாடசாலை இன்று பவளவிழா எடுத்துப் பெருமை கொள்கிறது.

சோதனைகளின் மத்தியில் சாதனை புரியும் இக் கல்விக்கூடம் தனது கல்விச் சேவையில் தடைகளை எல்லாம் வெற்றி கொண்டு இன்னும் பல தலைவர்களை இந்நாட்டுக்குத் தந்துதவ இறைவனை வேண்டி வாழ்த்துகிறேன்.

பிரதேச செயலகம்,
உடுவில்.

சி. திருவாகரன்
பிரதேச செயலாளர்,

# வாழ்த்துச் செய்தி



மாணவச் செல்வங்களின் அறிவுப் பசிக்கு ஏற்ற வகையில் கல்வி அமுதூட்டிக் கலை, பண்பாடு, விளையாட்டு போன்ற துறைகளிலும் சிறப்பாக விளங்கி இப்பாடசாலை அன்னையானவள் இவ்வாண்டு தனது பவளவிழாவைக் கொண்டாடுவதையொட்டி வாழ்த்துரை வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

கடந்த காலங்களில் நாட்டில் ஏற்பட்ட இடையூறுகள் மத்தியிலும் தமது பணியை இடைவிடாது தொடர்ந்து சிறப்புடன் கல்விச் செல்வத்தை வழங்கிய அதிபர், ஆசிரியர்களுக்கு எனது இதயபூர்வமான நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவிக்கின்றேன்.

இப்பாடசாலையானது மேன்மேலும் தலைசிறந்த நற்பிரஜைகளையும், கல்விமான்களையும் விளைவிக்கும் களமாக அமைந்து தனது கல்விப்பணியில் தொடர்ந்து சிறக்கவும், இம்மலர் வெளியீடு சிறப்புற நிறைவேறவும் என்றென்றும் எனது நல்வாழ்த்துக்கள்.

வலிகாமம் கிழக்கு,
கோப்பாய்.

திருமதி. அஞ்சலிதேவி சாந்தசீலன்
உதவிப் பிரதேச செயலர்.

# எமது நல்லாசிகள்



மக்களது வாழ்வு ஈடேற்றம் காண்பதற்கு இறை ஆலயங்கள் எவ்வளவு அவசியமோ அந்த அளவுக்கு அறிவாலயங்களும் அவசியமானவையாகும். இந்த உண்மையை எமது முன்னோர்கள் நன்கு உணர்ந்து சிரமேற் கொண்டனர்.

ஆயாக்கடவையிற் திருவருள் சுரக்கும் சித்திவிநாயகர் ஆலயமும் அறிவருள் சுரக்கும் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையும் அருகருகே அமைக்கப்பட்டுள்ளமை இதற்குத் தக்கசான்றாகும். இவ்விரண்டு ஆலயங்களினதும் சம நிலையான வளர்ச்சியே எமது கிராமத்தின் உயர்ச்சியாகும். பவளவிழா நடைபெறும் இன்றைய நன்னாளில் இப்பாடசாலையின் தேவைகள் அனைத்தையும் நிறைவு செய்து இதனை அபிவிருத்தியடையச் செய்ய நாம் ஒவ்வொருவரும் எமது பங்களிப்பைச் செய்வோம் என உறுதி பூண்போமாக.

இப்பாடசாலையினது வளர்ச்சியில் மிகுந்த அக்கறை காட்டிவரும் இன்றைய அதிபர், ஆசிரியர்கள், போற்றப்பட வேண்டியவர்கள். சகல வளங்களும் பெற்று நிறைந்த கல்விச் சேவையை இப்பாடசாலை எமது சிறார்களுக்கு வழங்க எல்லாம் வல்ல சித்திவிநாயகன் திருவருள் கிட்ட வேண்டும் என இறைஞ்சுகின்றேன்.

பரிபாலனசபை,
சித்திவிநாயகர் ஆலயம்,
ஆயாக்கடவை.

ந. ஜெயகுமாரன்
செயலாளர்,
(பரிபாலனசபை சார்பில்).

## பல படிகள் வளர்ந்துயர்க

இன்றைய அதிபரது அயராத உழைப்பினால் தற்போது தரம் 9 வகுப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையிலும் வருடாவருடம் மாணவர் சித்தியடைவது அதிகரித்து வருகிறது. இங்கு கல்விகற்று மேற்படிப்புக்காக ஏனைய பாடசாலையில் சேரும் மாணவர்கள் சிறப்பான பெறுபேறுகளை ஈட்டி வருவதும் கண்கூடு. மென்மேலும் பலபடிகள் இப்பாடசாலை வளர்ந்துயர வேண்டும் என இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

அ.த.க. பாடசாலை,
ஈவினை.

ச. சண்முகலிங்கம்
அதிபர்.

# இந்த மலர்

புன்னாலைக்கட்டுவனின் கல்வி வளர்ச்சிக்கும் சமூக எழுச்சிக்கும் பண்பாட்டின் உயர்ச்சிக்கும் வித்தாகி, விருட்சமாகித் தண்ணிழல் தந்துவரும் இவ்வறிவாலயம் 1927.09.12 இல் ஆரம்பமாகியது. இவ் அறிவாலயத்தில் 78 ஆண்டுகளின் பின்பு முதன் முறையாக ஒரு மலர் மலர்ந்து இங்கு தங்கள் கரங்களிலே விரிகின்றது.

75 ஆண்டு நிறைவில் மலரவேண்டிய இந்தப் பவளவிழா மலர் மூன்று ஆண்டுகள் காலதாமதமாகி வெளிவருகின்றது. உள்நாட்டுப் போரினால் ஏற்பட்ட இடர்ப்பாடுகளே இதற்குக் காரணமாகும்.

இந்த மலரை வெளியீடுவதும், பவளவிழா நிகழ்வைக் கொண்டாடுவதும் வெற்று ஆரவாரத்துக்காகவல்ல, பாரம்பரிய சடங்கு ஆசாரங்களிலொன்று என்பதற்காகவும் அல்ல. இப்பாடசாலையிலுள்ள பின்னடைவுகளை நீக்கி, இதனை உயிர்த்துடிப்புடன் இயங்கச் செய்ய வேண்டும், கடந்த காலத்தில் இருந்த உன்னத நிலையை மீண்டும் எட்டிப் பிடிக்க வேண்டும், போரினால் ஏற்பட்ட பின்னடைவுகளை நீக்குவதற்கு உதவுங்கரங்களாக இப்பாடசாலையின் பழையமாணவர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகளை அணி திரட்ட வேண்டும் என்பதே எமது நோக்கமாகும்.

இவ்வாறான ஒரு மலரை வெளியீடுவது என்பது இலகுவான காரியமல்ல. ஏழைச் சிறார்கள் கல்வி கற்கும் இத்தரம் 2 பாடசாலையினது ஆற்றலுக்கு அப்பாற்பட்ட விடயம் இதுவாகும். எனினும் ஒரு வரலாற்றுக் கடமை விடுத்த அழைப்பைத் தட்டிக் கழிக்க எம்மால் முடியவில்லை.

பாடசாலை கடந்து வந்த பாதை, இன்றைய நிலை என்பவற்றை வெளிக்கொணர்ந்தால் தான் எதிர்கால வளர்ச்சிக்கு ஆரோக்கியமான வழிதிறக்கும். அந்த வகையில் இயன்ற அளவில் இம்மலர் உருவாக்கப்பட்டுள்ளது. ஏதாவது தவறுகள் தவிர்ப்புகள் திரிபுகள் இதிற் காணப்படின் தயங்குவது சுட்டிக்காட்டி எமது பணிக்கு உற்சாகம் தரும்படி கேட்டுக் கொள்கின்றோம். பிறிதொரு சந்தர்ப்பத்தின் அவை நிறைவு செய்ய வழி அமைக்கும்.

இம்மலருக்கான ஆக்கங்களைத் தந்தவர்கள், மலர்வெளிவருவதற்கு ஆதார சக்திகளாக விளங்கிய வர்த்தகப் பெருமக்கள் அனைவருக்கும் எமது உளங் கனிந்த நன்றிகள் உரித்தாகுக.

மலர்க்குழுவினர்.

# மலரின் உள்ளே


| | | |
|---|---|---|
| 1. | அதிபரின் அறிக்கை | 01 |
| 2. | எனது சேவைக்கால நினைவுகள் | 06 |
| 3. | எமது கல்விப் பாரம்பரியமும் இப்பாடசாலையினது வகிபாகமும் | 08 |
| 4. | எங்கள் பாடசாலை | 13 |
| 5. | அமரர். இரத்தினசோதி நினைவு அருள் ஆலயம் | 15 |
| 6. | அமரர். க. தங்கராசா நினைவு சிறுவர் விளையாட்டு முற்றம் | 16 |
| 7. | பாடசாலை இடவிளக்கப்படம் | 16A |
| 8. | நூலகமும் கோயிலாரும் | 16 B |
| 9. | உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் வர்ணஓவியங்களும் வள்ளுவர் சிலையும் | 16 C |
| 10. | புன்னாலைக்கட்டுவன் கிராமப் படம் | 16 D |
| 11. | மக்கள்சேவையில் மனநிறைவு கண்ட மாமனிதர் நா. திருநாவுக்கரசு | 17 |
| 12. | எங்கள் கிராமம் | 18 |
| 13. | தொல்காப்பியக் கடல் வித்துவசிரோமணி சி. கணேசையர் | 20 |
| 14. | பிறந்த மண்ணுக்குப் பெருமை சேர்த்துவரும் கலாபூசணம் தி.ஞானசேகரன் ஐயர் அவர்கள் | 21 |
| 15. | மாணவர் பகுதி | 22 |
| 16. | ஆபத்து நோக்கிச் செல்லும் யாழ். மாவட்டக் கல்வி | 40 |
| 17. | நகையும் நங்கையரும் | 46 |
| 18. | கண்கண்ட தெய்வங்கள் | 51 |
| 19. | மாணவர் கல்வியும் பெற்றோர் ஆசிரியர், பங்களிப்பும் | 53 |
| 20. | விந்தை செய்த விஞ்ஞானிகள் | 56 |
| 21. | உளநெருக்கீடும் சிறுவர்களும் | 58 |
| 22. | மாணவர் உடல் உளச் சுகாதாரம் | 60 |
| 23. | வாசிப்பதால் மனிதன் பூரணமடைகிறான் | 62 |
| 24. | The Importance of English | 64 |
| 25. | உயர்வு எமக்கு வேண்டும் | 65 |
| 26. | இப்பாடசாலையில் கற்பித்த ஆசிரியர்கள் விபரம் | 66 |
| 27. | இப்பாடசாலையில் கடமையாற்றும் ஆசிரியர் விபரம் | 67 |
| 28. | ஒழுக்காற்றுக்குழு, மன்றங்கள் | 68 |
| 29. | பரிசுபெறும் மாணவர்களின் விபரம் | 71 |
| 30. | அன்பளிப்புகள் வழங்கியோர் விபரம் | 79 |

பொது நூலகம்
வலி. தெற்கு சுன்னாகம்
| வரவுப் பதிவு எண் | |
|---|---|
| வகுப்பு எண் | |

# எமது முதல்வர்



திரு. சி. மணியம் (S.L.P.S.2.1)

புன்னாலைக்கட்டுவன்

அரசினர் தமிழ்கலவன் பாடசாலை

# பவளவிழாவும் பரிசளிப்பு நிகழ்வும்

இடம் : பாடசாலைத் திறந்த வெளிஅரங்கு

காலம் : 11.09.2005 ஞாயிறு காலை 9.30 மணி

தலைமை : **திரு.சி. மணியம் (அதிபர்) அவர்கள்**

*பிரதம விருந்தினர்*

**திரு.ப. விக்னேஸ்வரன் அவர்கள்**

(வலயக் கல்விப் பணிப்பாளர். வலிகாமம் வலயம்)

*சிறப்பு விருந்தினர்கள்*

**திரு.செ. குபேரநாதன் அவர்கள்**

(கோட்டக் கல்விப் பணிப்பாளர். உடுவில்)

**திரு.பொன். பூலோகசிங்கம் J.P.U.M அவர்கள்**

(சட்டத்தரணி, பழைய மாணவர்)

**திரு.சி. தனேஸ்வரன் அவர்கள்**

(முகாமையாளர், தேசியசேமிப்பு வங்கி, கிளிநொச்சி, பழைய மாணவர்)

*கௌரவ விருந்தினர்கள்*

**திரு.V.M. முத்துராசா அவர்கள்**

(உதவிக்கல்விப் பணிப்பாளர், ஆங்கிலம், வலிகாமம் வலயம்)

**திரு.கா.ஆ. திருநாவுக்கரசு அவர்கள்**

(பழைய மாணவர்)

**பண்டிதை, திருமதி. பார்வதிப்பிள்ளை தங்கராசா அவர்கள்**

(ஓய்வுபெற்ற ஆசிரியை, நீர்வேலி)

**திரு.து.செம்பரிதி (கிரி) அவர்கள்**

(அரசியல் துறைப்பொறுப்பாளர், வலிகிழக்கு, நீர்வேலி)

**பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள்**
**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

01.09.2005
புன்னாலைக்கட்டுவன் அ.த.க.பா

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்.

# நிகழ்ச்சி நிரல்

1. மங்கள விளக்கேற்றல்
2. இறைவணக்கம்
3. கொடியேற்றல்
4. தமிழ்த்தாய் வாழ்த்து
5. பாடசாலை நூலகத்தை ஆரம்பித்து வைத்தல்
**ஆரம்பித்து வைப்பவர் :** ***திரு. ஏ. உதயகுமார் அவர்கள்***
(தலைவர், பரிபாலனசபை, ஆயாக்கடவை சித்திவிநாயகர் ஆலயம்)
6. வரவேற்புரை
7. வாழ்த்துரை
***திரு. ஐ. இராமசாமி அவர்கள்***
(ஓய்வுபெற்ற ஆசிரியர், பழைய மாணவர்)
***திரு. ந. ஜெயகுமாரன் அவர்கள்***
(அதிபர், சாவகச்சேரி றோ.க.த.க. பாடசாலை)
8. விருந்தினர்கள் உரை
9. பவளவிழா மலர் வெளியீடு
**வெளியீட்டுரை :** ***திரு. ச. முருகநேசன் அவர்கள்***
(பொறியியலாளர், இ.போ.ச. கோண்டாவில்)
**மதிப்பீட்டுரை :** ***திரு. தா. பாலசுப்பிரமணியம் அவர்கள்***
(பழைய மாணவர், உதவிக்கல்விப் பணிப்பாளர், வடகிழக்கு மாகாண கல்வி அமைச்சு)
10. சேவை நயப்பும் கௌரவிப்பும்
**கௌரவிக்கப் பெறுநர்கள் :**
***கலாபூஷணம், வைத்தியகலாநிதி, தி. ஞானசேகரன் J.P அவர்கள்***
(பழைய மாணவன்)
***திரு. அ. துரைராசா அவர்கள்***
(செயலாளர், பாடசாலை அபிவிருத்தி சங்கம்)
***திரு. செ. செல்வரத்தினம் J.P அவர்கள்***
(நலன்விரும்பி, பா.அ. சங்கச் செயலவை உறுப்பினர்)
***திரு. க. தர்மலிங்கம் J.P அவர்கள்***
(நலன்விரும்பி, பா.அ.சங்கச் செயலவை உறுப்பினர்)
11. **சேவை நயப்புரை :** ***திரு. ஆ. சி. நடராஜா அவர்கள்***
(போஷகர், பழைய மாணவர்சங்கம்)
12. பரிசளிப்பு
13. மாணவர் கலை நிகழ்ச்சிகள்
14. நன்றியுரை
***திரு. சி. ஜெயவரதன்***
(செயலாளர், பழையமாணவர் சங்கம்)

# அதிபரின் அறிக்கை

பேரன்புக்குரிய பிரதம விருந்தினர் அவர்களே! சிறப்பு விருந்தினர்களே! கௌரவ விருந்தினர்களே! பெற்றோர்களே! பழைய மாணவர்களே! நலன்விரும்பிகளே! ஆசிரியர்களே! எனது மாணவச் செல்வங்களே! இன்றைய திருநாளில் தங்கள் அனைவரையும் வரவேற்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். இப்பாடசாலையின் எழுச்சிக்கும் வளர்ச்சிக்கும் தங்கள் ஆதரவு உண்டு, என்பதை இன்றைய வருகை வெளிப்படுத்தியுள்ளது.

இன்றைய காலகட்டத்தில் ஒரு பாடசாலையின் எழுச்சியும், வீழ்ச்சியும் அப்பாடசாலை சார்ந்த சமூகத்திலேயே தங்கியுள்ளது. அரசாங்கம் அனைத்து தேவைகளையும் செய்து தருவதிற்கில்லையென்பது யாவரும் அறிந்ததே. இதனை நாம் ஒவ்வொருவரும் உணர்ந்து கொள்ள வேண்டும். பாடசாலைக்கும், சமூகத்திற்கும் உள்ள உறவு நிலையும், ஊடாட்டமும் எந்த அளவுக்கு உறுதி அடைகின்றனவோ அந்த அளவிற்கு அதன் கல்விச் செயற்பாடுகள் மேம்பாடடையும்.

நான் இங்கு அதிபராகப் பதவியேற்ற போது இப்பாடசாலைக்கும் சமூகத்திற்கும் அற்ப தொடர்பு கூட இல்லாதிருந்தமை கண்டேன். எனது சேவையை இங்கு தொடரலாமோ என்பது கேள்விக் குறியாகியது. இக்கிராம மக்கள் அனைவரும் இப்பாடசாலையிலேயே கல்வி கற்றனர் என்பதை நானறிவேன். ஆனால் இவர்களுடைய பிள்ளைகளிற் பலர் ஆரம்பக் கல்வியைப் பெறுவதற்கும் கூட வேறு இடங்களுக்குச் செல்வதையும் அவதானிக்க முடிந்தது.

"முயற்சி திருவினை ஆக்கும்" என்ற மனஉறுதியோடு மேற்கண்ட சூழல்களுக்கு முகங்கொடுத்துப் பார்ப்பது என்ற முடிவுக்கு வந்தேன். அது வீண்போகவில்லை என்றே நம்புகிறேன். பெற்றோர்கள், பழைய மாணவர்கள் நலன் விரும்பிகளது உணர்வுபூர்வமான ஒத்துழைப்பு நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. சிறப்பாகப் பழைய மாணவர்களது பங்களிப்பு ஒரு திருப்திகரமான திருப்பு முனையாக அமைந்து வருகிறது. அந்த உந்துதலாலேயே இன்று எமது பழைய மாணவர்கள் பலரையும் இன்றைய விழாவின் பங்காளிகளாகக் கொண்டு மகிழ்கின்றோம்.

இன்று இப்பாடசாலை பெற்றுவரும் பௌதிகவள அபிவிருத்திகள் எல்லாம் இப்பாடசாலைச் சமூகம் தந்த உணர்வுபூர்வமான ஒத்துழைப்பின் விளைவே ஆகும். மேலும் பல பெற்றோர்கள் தமது பிள்ளைகளை இங்கேயே கற்பிக்கலாம் என்று எண்ணத் தொடங்கிவிட்டமையால் மாணவர்தொகை அதிகரித்து மனநிறைவைத் தருகின்றது.

## மாணவர் விபரம் :

இன்று ஒன்று முதல் தரம் 5 வரை 156 மாணவர்கள், 6 முதல் தரம் 9 வரை 123 மாணவர்கள், ஆக மொத்தம் 279 பேர் கல்வி கற்கின்றனர்.

## ஆசிரியர் விபரம் :

இப்பாடசாலையில் நிரந்தர ஆசிரியர்களாக 14 பேர் உள்ளனர். அழகியல் பாட ஆசிரியர் இருநாட்கள் இங்கு வருகின்றார். 28.07.2005 ஆங்கில ஆசிரியர் ஒருவர் புதிதாக நியமனம் பெற்று வந்துள்ளார். எனவே இங்கு நிறைவான ஒரு ஆசிரிய வளம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

2001 இல் நான் கடமையேற்பதற்கு முன்பு இங்கு ஆசிரியர் பற்றாக்குறை மிக அதிகமாக இருந்தது. எனவே அன்றைய அதிபர். திரு.சி.சிவகுமார் நான்கு தொண்டர் ஆசிரியர்களை நியமித்து பாடசாலையை நடாத்தி வந்தமை இங்கு நன்றியுணர்வுடன் சுட்டிக் காட்டப்பட வேண்டியதாகும்.

## பௌதிக வளஅபிவிருத்தி

நான் பதவியேற்றபோது முதல் வேலையாக இருந்தது பாடசாலைக்குப் பாதுகாப்பான வேலி அமைத்தல் ஆகும். பொதுமக்களின் ஒத்தழைப்புடன் 70 அடி மதில் கட்டப்பட்டதோடு மதில் அற்ற பகுதிகளுக்கு முட்கம்பி வேலி போடப்பட்டது. முட்கம்பி வேலி போடப்பட்ட வேலியில் 250 அடி நீளமான மதில் நலன்விரும்பி கப்பூது திரு. நவரத்தினம் J.P அவர்களால் அண்மையில் கட்டித் தரப்பட்டுள்ளது. சிரமதானமாக நலன்விரும்பிகளும், பழைய மாணவர்களும், கணேச சனசமூக அங்கத்தவர்களும் அதிபர் விடுதி அழிபாடுகளை அகற்றி தந்ததோடு விளையாட்டு மைதானங்களையும் சீராக்கி தந்தனர். அமரர். சி. இரத்தினசோதி நினைவாக அவரது குடும்பத்தினர் வழிபாட்டு பீடம் ஒன்றை அமைத்து தந்தனர். இப்பாடசாலையின் முன்னாள் அதிபர் அமரர்.க. தங்கராசா அவர்களின் நினைவாக ரூபா 1 இலட்சம் ரூபா செலவில் விளையாட்டு முற்றம் ஒன்றினை அவரது குடும்பத்தினர் ஏற்படுத்தி தந்தனர். ஓவியமணி செ. வரதராஜன் யாழ் வலய சித்திரப்பாட முதன்மையாசிரியர் சுவரோவியங்களை வரைந்து தந்தார். வாயிற்கதவு திரு. ஸ்ரீஸ்கந்தராசா அவர்களின் பங்களிப்புடனும் பழைய மாணவர்களின் பங்களிப்புடனும் செய்யப்பட்டது.

திருமதி.ந. கணேசலிங்கம் 26 150 ரூபா பங்களிப்புடன் மின்இணைப்பினைச் செய்து உதவியுள்ளார். திரு.ச. மனோகரன் (கனடா) பாடசாலை பெயர் வளைவினை செய்வித்து உதவியுள்ளார். முன்னாள் பதில் அதிபர் அமரர். க. சோமசுந்தரம் நினைவாக அவரது மகன் கணேஸ்வரன் திருவள்ளுவர் சிலையை நிறுவி உதவினார். இவற்றோடு அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் வழங்கிய உதவிகளையும் குறிப்பிட முடியும்.

- கல்வித்திணைக்கள அனுசரணையுடன் ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம் 60 அடிx20அடி வகுப்பறைக் கட்டிடம் ஒன்றை நிறுவியுள்ளது.
- அதேபோல் Unicef நிறுவனம் நீர்த்தாங்கியையும், குழாய் நீர் விநியோகத்தையும் நிறுவித் தந்ததுடன் மாதிரி வகுப்பறைகளையும் அமைப்பதற்கு உதவியுள்ளது.
- சர்வோதய நிறுவனம் கிணற்றினை புனரமைப்புச் செய்து தந்தது.
- கல்வித் திணைக்களம் 80அடிx20அடி, 40அடிx20அடி ஆகிய இரு வகுப்பறைக் கட்டிடங்களின் கூரைகளை திருத்தி அமைக்க உதவியுள்ளது.
- பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்தின் கீழ் பாராளுமன்ற உறுப்பினர் N.ரவிராஜ் அவர்களால் அலுவலக தளபாடங்கள் நிதி ஒதக்கீட்டில் இருந்து பெறப்பட்டுள்ளன.
- வடகிழக்கு மாகாண கல்வி அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் புதிய மாடிக்கட்டிடம் ஒன்று பவளவிழா ஆண்டில் அமைக்கப்படவுள்ளது.

## இணைப்பாடவிதானச் செயற்பாடுகள் :

வருடந்தோறும் இல்ல மெய்வல்லுநர் விளையாட்டுக்கள் நடைபெறுகின்றன. கோட்ட மட்ட, வலய மட்ட போட்டிகளிலும் மாணவர்கள் பங்குபற்றி வெற்றிகளை ஈட்டி வருகின்றனர். தமிழ் மன்றம், ஆங்கில மன்றம், இந்து மாணவர் மன்றம், கணித விஞ்ஞான மன்றம், சமாதான மன்றம் முதலானவை உரிய முறையில் மாணவர்களால் செயற்படுத்தப்படுகின்றன. மாணவர்களிடம் சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்கும் நோக்கோடு மக்கள் வங்கி, தேசிய சேமிப்பு வங்கி என்பவற்றில் மாணவர் சேமிப்புக் கணக்குகள் திறக்கப்பட்டுள்ளன.

## ஆசிரியர் கழகம் :

ஆசிரியர்களிடையே நட்புறவையும், புரிந்துணர்வையும் ஏற்படுத்தி, சுமூகமான செயற்பாடுகளை முன்னெடுக்கும் நோக்குடன் ஆசிரியர் கழகம் அமைக்கப்பட்டுள்ளது. இக்கழகம் ஆசிரியர்களின் நலனை கவனிப்பதோடு அவர்களின் இன்பதுன்ப நிகழ்வுகளிலும் கலந்து கொள்கிறது. மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளுக்கு பங்களிப்புச் செய்து வருவதுடன் ஆசிரியர் இடமாற்றம் ஆசிரியர் பதவி உயர்வு, ஆசிரியர் ஓய்வு நிகழ்வுகளின் போது ஆசிரியர்களை கௌரவிக்கின்றது.

## பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

பாடசாலையின் தேவையை அறிந்து அதன் வளரச்சிக்கு உறுதுணையாக இருந்து செயற்பட்டு வருகின்றது. பௌதீக வளத்தேவைகளுக்கு ஒதுக்கப்படும் நிதியினை இச்சங்கம் பொறுப்பேற்று குறித்த வேலையை நிறைவேற்றி வருகின்றது. பாடசாலையின் சகல நிகழ்வுகளிலும் அங்கத்தவர்கள் பங்குபற்றி வருகின்றனர்.

## பழைய மாணவர் சங்கம்

இப்பாடசாலைக்கென பழைய மாணவர்சங்கம் என்ற அமைப்பு நான் பதவியேற்கும் வரை இருக்கவில்லை. அக்குறைபாடு நீக்கப்பட்டது. இச்சங்கம் உதயமாகியமை இப்பாடசாலையின் வளர்ச்சிக்கு மிகுந்த பயனளித்து வருகின்றது. தற்போது இச்சங்கத்தின் மூலம் பல வேலைகளையும் நிறைவு செய்யுப்படுகின்றன.

## பாடசாலையின் தேவைகள்

1. மாணவர் தொகைக்கு ஏற்ப தளபாடங்கள் வேண்டும். ஆரம்பப்பிரிவில் 75 மாணவர்களுக்கும், இடைநிலைப் பிரிவில் 50 மாணவர்களுக்கும் மேசைகள், கதிரைகள் உடன் தேவை.
2. வகுப்பறைப் பற்றாக்குறையை நீக்குவதற்கு புதிய மாடிக் கட்டடம் அமையவுள்ளது. ஆனால் ஆய்வுகூடம், கணனித்தொகுதி, நூலகம் என்பனவும் உடனடித் தேவைகளாக உள்ளன.
3. பாடசாலையின் பாதுகாப்பு கருதி எஞ்சியுள்ள் பகுதிகளுக்குச் சுமார் 450 அடி மதில் கட்டப்பட வேண்டும்.
4. விளையாட்டு மைதானம் சீரமைக்கப்பட வேண்டும்.

## மாடிக்கட்டிடம் :

75 ஆண்டுகளுக்கு முன் அமைக்கப்பட்ட பாடசாலைக் கட்டிடம் பாவிக்க முடியாதுள்ளதாலும் வகுப்பறைகள் போதாமையாலும், 10 வகுப்பறைகள் கொண்ட ஓர் மாடிக்கட்டிடம் அமைக்கப்படவுள்ளது. இதன் ஒரு பகுதியைச் செய்வதற்கு வடகிழக்கு மாகாண கல்வி அமைச்சு ரூபா 10 லட்சம் வழங்கியுள்ளது. என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றேன். இவ்வேலைகள் தற்போது ஆரம்பிக்கப்படவுள்ளன.

## போஷாக்கு உணவுத் திட்டம் :

அரசசார்பற்ற நிறுவனத்தின் உதவியுடனும் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடனும் தரம் 1 மாணவர்களுக்கு போசாக்கு உணவு வழங்கப்பட்டு வருகின்றது. இவ் போசாக்கு உணவை தயாரித்து வழங்குவதற்கு பெற்றோர்கள் உதவுகின்றனர்.

## நன்றியுரை:

பவளவிழாவிலும், பரிசளிப்பு விழாவிலும் கலந்து சிறப்பிக்கும் பிரதம விருந்தினர், சிறப்பு விருந்தினர், மலர் வெளியீட்டுரை நிகழ்த்தியோர் மற்றும் பெற்றோர்கள், பழையமாணவர்கள், நலன்விரும்பிகள் அனைவருக்கும் எனது உளமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். இப்பாடசாலையின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும் எமது உபஅதிபர் திருமதி பாக்கியநாதன் அவர்களுக்கும் உடன் பிறப்பாக குடும்ப உணர்வோடு நற்சேவை ஆற்றும் எனது ஆசிரியர்கள் அனைவருக்கும் இன்றைய இனிய நன்னாளில் எனது உளமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதில் உளம் மகிழ்கின்றேன்.

இப்பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் திரு.அ. துரைராஜா அவர்கள் தனது நேரத்தின் பெரும் பகுதியை பாடசாலையின் வளர்ச்சிக்கு அர்ப்பணித்து வருகிறார். பழைய மாணவர்சங்கத்தின் போஷகராகவும், முன்னாள் வயாவிளான் மத்திய மகா வித்தியாலய அதிபராகவும தற்போது தினக்குரல் முகாமையாளராகவும் உள்ள திரு.ஆசி. நடராஜா அவர்கள் நான் இப்பாடசாலையில் அதிபர் பதவியை ஏற்ற நாள் முதல் இதன் வளர்ச்சிக்காக என்னுடன் இணைந்து செயற்பட்டு வருகின்றார். மேலும் எனது கிராமத்தைச் சேர்ந்த திரு. தர்மலிங்கம் J.P அவர்களும், ஈவினை செ. செல்வரத்தினம் JP அவர்களும் இப்பாடசாலையின் வளர்ச்சிக்கு நலன்விரும்பிகளாக இருந்து செயற்பட்டு வருகின்றனர். இப்பாடசாலையின் பழைய மாணவனும் வடக்கு கிழக்கு மகாண கல்வி அமைச்சின் திட்டமிடல் உதவியாளராக கடமையாற்றுபவருமான திரு.தா. பாலசுப்பிரமணியம் இப்பாடசாலையின் வளர்ச்சிக்கு தேவையான உதவிகளை செய்து வருகின்றார். எமது பழைய மாணவர்கள் அனைத்து நிகழ்வுகளிலும், எமது பாடசாலை நிகழ்விலும் பங்கு கொண்டு துடிப்புடன் செயற்பட்டு வருகின்றார்கள். இவர்கள் அனைவருக்கும் எனது நன்றிகள்.

இறுதியாக எமது பாடசாலைக்கு பல்வேறு வகையிலும் ஒத்துழைப்பு வழங்கி வரும் கல்விப் பணிப்பாளர், உதவிக்கல்விப் பணிப்பாளர், கல்வித்திணைக்கள அலுவலர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள், அனைவருக்கும் எனது நன்றிகள் உரித்தாகட்டும்.

# எனது சேவைக்கால நினைவுகள்

*சி. சிவகுமார் அதிபர்,*
*குப்பிளான் விக்னேஸ்வர ம.வி.*

யான் இப்பாடசாலையில் 27.02.2002 இல் அதிபராகக் கடமையேற்றேன். அக்காலத்தில் இப்பாடசாலை வசாவிளான் கொத்தணியில் இயங்கிக் கொண்டிருந்தது. 480 மாணவர்கள் தரம் 1 தொடக்கம் 8 வரை கற்றுக் கொண்டிருந்தார்கள். கட்டட, தளபாட, ஆசிரியர் பற்றாக்குறை இக்கால கட்டத்தில் மிகையாகக் காணப்பட்டது. பின்னர் தொண்டர் ஆசிரியர்கள் இப்பாடசாலையிற் சேவையாற்றினர். இதனால் கல்வியில் தொய்வு நிலை ஏற்படாமல் பாடசாலையை நடாத்திச் செல்ல முடிந்தது. இப்பாடசாலையிற் கல்வி கற்கும் மாணவர்களில் அநேகர் மிகவும் வறிய குடும்பத்தவர்களின் பிள்ளைகளாகவே இருந்தனர். குறிப்பாக வலிதெற்குப் பிரதேசச் செயலர் பிரிவில் மிகவும் பின்தங்கிய கிராமமான மத்தாளோடைக் கிராமத்துப் பிள்ளைகளே அதிகமாக இருந்தனர். அத்துடன் கப்பம்புலம், குப்பளான் தெற்கு(சேச்சடி) மாணவர்களுடன் பாடசாலைச் சூழலில் ஒரு சில குடும்பத்தினரின் பிள்ளைகளும் கற்றுக் கொண்டிருந்தனர்.

1992 இல் எனது மனைவி புற்றுநோய் அவதிப்பட்டு 1993 இல் அவர் காலமான காலப்பகுதியென்பதால் எனது வாழ்வில் மிகவும் துன்பஞ் சூழ்ந்த நாளாகவே இருந்தது. இருந்தும் அப்பாவி மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்காக என்னால் இயன்றவரை பாடசாலைக்குச் சென்று கற்றல், கற்பித்தல் நடவடிக்கைகளை மேற்பார்வை செய்து, சுமுகமான சூழலில் பாடசாலை நடைபெறுவதை உறுதிப்படுத்தினேன்.

1994ம் ஆண்டில் மத்தாளோடைக் கிராமத்தில் முறைசாராக்கல்விப் பிரிவு உதவிக்கல்விப் பணிப்பாளர் திரு. S.C.S சிதம்பரநாதன் அவர்களின் உதவியுடன் வலிதெற்கு (உடுவில்) பிரதேசச் செயலர் அமரர்.ஆ. மகாலிங்கத்தின் அனுசரணையுடன் பிரதேசச் செயலக நிதி ஒதுக்கீட்டில் "முதியோர் கல்விச் செயற்திட்டம்" செயற்படுத்தப்பட்டு, அதில் வெற்றியும் காணப்பட்டது.

இதன் விளைவாக அப்பெற்றோர் பிள்ளைகளின் கல்வியில் அதிகம் ஊக்கம் எடுத்ததையும் காணமுடிந்தது. 1995இன் ஆரம்பத்தில் கைகுலுக்கல் இராணுவ நடவடிக்கையால் அப்பிரதேச மக்கள் இடம்பெயர்ந்து வாழவேண்டிய நிலை ஏற்பட்டது. இச்சூழலில் இப் பாடசாலையைக் கல்விப் பணிப்பாளரின் அனுமதியுடன் சிறிதுகாலம் ஊரெழு தனியார் கல்வி நிலையத்திலும் பின்னர் ஊரெழு சீ.சீ.த.க பாடசாலையிலும் நடாத்தி 1995 அக்டோபர் மாத சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கையின் போது இடம்பெயர்ந்து உசன் இராமநாதன் கல்லூரியில் பகுதிநேரப் பாடசாலையாக இயங்கிக் கொண்டிருந்தது.

1996ம் ஆண்டு மீண்டும் நாம் பாடசாலைக்கு வந்தபோது காரியாலயக் கட்டடம் உடைக்கப்பட்டும் தளபாடங்கள் இல்லாமலும் காணப்பட்டது. மீண்டும் பாடசாலையை இயக்குவதற்காகப் பல்வேறு இடங்களில் கிராமசேவையாளர் திரு. சீ. லம்போதரனினதும் மாணவர்களினதும் உதவியுடன் தளபாடங்கள் வெவ்வேறு இடங்களில் எடுக்கப்பட்டு பாடசாலை இயங்க வைக்கப்பட்டது. மாணவர் முழுவதாகவும் வந்துசேராநிலையில் பாடசாலை இயங்கிக் கொண்டிருந்ததுடன் பின்னர் மாணவர் தொகை அதிகரித்துக் காணப்பட்டது. ஆனாலும் முன்னைய மாணவர் தொகையை விடக் குறைவாகவே இருந்தது. ஆசிரியர் பற்றாக்குறையும் இருந்தது. 1999ஆம் ஆண்டு ஆசிரியர் நியமனம் பெற்று வந்தனர். இதனால் ஆசிரியர் பற்றாக்குறை நீங்கியது. ஆனால் 2000ம் ஆண்டு அவர்களில் எல்லா ஆசிரியர்களும் பயிற்சிக்குச் சென்றதால் மீண்டும் ஆசிரியர் பற்றாக்குறை ஏற்பட்டது. இதனால் நாலு தொண்டர் ஆசிரியர்களைச் சேவையில் ஈடுபடுத்தி 2001.08.15 இல் இப்பாடசாலையில் கடமையேற்கும் வரை எனது சம்பளப் பணத்திலேயே அவர்களுக்கும் சம்பளம் வழங்கினேன். அவர்களின் அளப்பரிய சேவையாலும் மீண்டும் பயிற்சிமுடித்த ஆசிரியர்கள் அப்பாடசாலைக்கே நியமிக்கப்பட்டதாலும் தற்போதைய அதிபர் திரு.சி. மணியம் அவர்களின் அயராத முயற்சியாலும் ஆசிரியர்களின் அர்ப்பணிப்பாலும் இன்று அப்பாடசாலை கல்வி வளர்ச்சியில் உயர்ந்து நிற்பதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

நான் பதவி வகித்த 1992 முதல் 14.08.2001 வரையான காலப் பௌதிக, கல்வி அபிவிருத்தி.

பௌதிக வளம்

1. தரம் 1 செயற்பாட்டறை
2. ஆரம்பக்கல்வி வகுப்பறைகள் வலையடித்தல்
3. அதிபர் அறை
4. அரங்கமேடை
5. G.T.Z மலசலகூடம்

கல்வி அபிவிருத்தி :

1. 25 ஆண்டுகளின் பின் ஆண்டுகளில் புலமைப் பரிசில் சித்தி
2. இணைப்பாடவிதானச செயற்பாடு - 1992 இல் இருந்து நீண்டகால இடைவெளியின் பின் இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் நடைபெற்றமை போன்றனவாகும்.

நன்றிகள் :

பாடசாலையின் வளர்ச்சிக்காக எனது காலத்தில் கல்வித் திணைக்களத்தினர் பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகளுக்கு உளமார்ந்த நன்றி.

# எமது கல்விப் பாரம்பரியமும் இப்பாடசாலையின் வகிபாகமும்

*கலாபூஷணம்*
*டாக்டர். தி. ஞானசேகரன் ஐயர்* J.P

புன்னாலைக்கட்டுவன் கிராமம் சைவமும் தமிழும் செழித்தோங்கும் பாரம்பரியத்தை உடையது. இக்கிராமத்தின் கேந்திர ஸ்தானமாக விளங்குவது ஆயாக்கடவை சித்திவிநாயகர் ஆலயமும் அதன் சுற்றுப்புறச் சூழலும் ஆகும்.

இற்றைக்கு ஏறத்தாழ 200 வருடங்களுக்கு முன்னர் ஆயாக்கடவைச் சித்தி விநாயகர் ஆலயத்தின் பிரதம குருவாக விளங்கியவர் பிரம்மஸ்ரீ சங்கர ஐயர் அவர்கள். இவர் தமிழிலும் சமஸ்கிருதத்திலும் பாண்டித்தியம் பெற்றவராக இருந்தார். இவரது மகனான பிரம்மஸ்ரீ கதிர்காம ஐயர் அவர்களே புன்னாலைக்கட்டுவன் கிராமத்தின் கல்விப் பாரம்பரியத்தின் ஊற்றுக்கண்ணாக விளங்கியவர். ஆரம்பத்தில் கதிர்காம ஐயர் அவர்கள் ஆலயச் சூழலில் ஒரு திண்ணைப் பள்ளிக்கூடத்தை அமைத்து நடத்தி வந்தார். அக்காலத்தில் பெரும் பண்டிதராக விளங்கிய காசிவாசி செந்திநாத ஐயர் (1848 - 1924) அவர்கள் இவரது மருமகனாவார். காசிவாசி செந்திநாத ஐயர் அவர்கள் இவரிடத்தில் தமிழையும் சமஸ்கிருதத்தையும் கற்றார். அதேபோன்று அக்காலப் புலவர்களில் புகழுடன் திகழ்ந்த ஊரெழு சரவணமுத்துப் புலவர் அவர்களும் கதிர்காம ஐயரின் மாணவராவார்.

கதிர்காம ஐயர் அவர்கள், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலருடன் (1822 - 1874) பரீட்சயம் உள்ளவராக இருந்தார். அக்காலகட்டத்தில் ஐரோப்பியர் வருகையை ஒட்டி நிறுவன ரீதியிலான பாடசாலைகள் ஸ்தாபிக்கப்பட்டன. ஐரோப்பியர்கள் இப்பாடசாலைகளில் கல்வி கற்பிப்பதோடு தமது மதத்தினையும் பரப்புவதில் அக்கறையுள்ளவர்களாக இருந்தனர். அதனை எதிர்த்து சைவமதம் அழிந்துவிடாதிருக்க அரிய பெரிய பணிகளை ஆற்றியவர் ஆறுமுகநாவலர். அவருடைய பணிகளில் கிராமங்கள் தோறும் சைவப் பாடசாலைகளை அமைக்க வேண்டும் என்ற உணர்வினை மக்களிடையே ஏற்படுத்துவதும் ஒன்றாக இருந்தது. அதன் பயனாகப் பல இந்துக்கல்லூரிகள் கிராமங்கள் தோறும் உருவாகின. இத்தகைய முயற்சிகளின் உணர்வால் உந்தப்பட்டுப் புன்னாலைக்கட்டுவனிலும் ஒரு தனியார் பாடசாலையைக் கதிர்காம ஐயர் அவர்கள் ஸ்தாபித்தார்கள். இப்பாடசாலையில் ஊரெழு, அச்செழு, ஏழாலை, குப்பிளான், புத்தூர், சிறுப்பிட்டி, மயிலிட்டி, தையிட்டி, மாவிட்டபுரம், வயாவிளான், பலாலி போன்ற அயலூர்களில் இருந்தும் பலர் வந்து கல்வி கற்றனர்.

ஐரோப்பியரின் நிறுவன ரீதியான பாடசாலைகளை வேதப் பள்ளிக்கூடம், ‘‘பாதிரிப் பள்ளிக்கூடம்’’ என அக்கால மக்கள் அழைத்தனர். வேதப் பள்ளிக்கூடத்துப் பாடத்திட்டத்திற்கும், சுதேசிகள் நிறுவிய சைவ வித்தியாலயங்களின் பாடத்திட்டத்திற்கும் வேறுபாடுகள் இருந்தன. ஆனாலும் கல்வி போதிக்கும் முறைகளில் அதிக வித்தியாசம் இருக்கவில்லை. கதிர்காம ஐயரின் சைவவித்தியாசாலையில் ஒவ்வொரு வருடமும் வகுப்பேற்றும் பரீட்சைகள் நடைபெறும். அப்பரீட்சையை நடத்துபவர்கள் வெளியிடங்களில் இருந்தே வருகை தந்தவர்கள். நீண்ட காலமாக ஆறுமுகநாவலரது தமக்கையாரின் மகன் பொன்னம்பலப்பிள்ளை (1878 - 1958) அவர்களே அப்பாடசாலையில் பரீட்சகராக விளங்கினார். பொன்னம்பலப்பிள்ளை அவர்கள் ஒரு சிறந்த கல்விமான். வித்துவசிரோமணி கணேசையர் அவர்கள் கதிர்காம ஐயரின் பெறாமகன். அவர் தனது ஆரம்பக்கல்வியில் இருந்து எட்டாம வகுப்பு வரை அப்பாடசலையிலே கல்வி கற்றார். அப்போது பன்னிரெண்டு மாணவர்கள் அவ்வகுப்பில் இருந்தனர். ஓருமுறை பொன்னம்பலப்பிள்ளை பரீட்சகராகப் பாடசாலைக்கு வந்தபோது கணேசையரைப் பரீட்சித்தார். அவ்வேளையிலேதான் அவரது புலமையை கணேசையர் அறிந்துகொள்ள நேரிட்டது. அதன்பின் கணேசையர் பொன்னம்பலம்பிள்ளையிடமும் கற்றுத்தேறிப் பெரும் கல்விமானானார்.

பாடசாலையின் அன்றைய சுற்றுப்புறச் சூழல் மிகவும் ரம்மியமானது. பாடசாலையின் தெற்குப் புறமாக ஒரு கேணி தூர்ந்த நிலையில் இருந்தது. அக்கேணியில் முட்புதர்கள் நிறைந்து காணப்படும். கேணியின் வடபுறத்துக் கரையில் ஒரு நெல்லிமரம் ஓங்கி வளர்ந்திருக்கும். கேணியின் கிழக்குப் புறமாக ஒரு பெரிய சவுக்குமரம் கம்பீரத்துடன் சடைத்து நிற்கும். தெருவின் மறுபுறத்தில் வேறொரு சவுக்குமரம் ஓங்கி உயர்ந்து நிற்கும். இந்தச் சவுக்கு மரங்களின் கிளைகளில் ஆயாக்கடவை ஐங்கரனின் மயில்கள் அமர்ந்திருந்து அகவும் ஒலி கேட்கும். சிலவேளைகளில் அவை கீழே இறங்கிவந்து தோகை விரித்து ஆடும். கேணியின் உள்ளே வளர்ந்திருக்கும் பனை வடலிகளும் செடிகொடிகளும் கேணியின் தொன்மையையும் ஆயாக்கடவை ஐங்கரன் அக்கேணியிலே தீர்த்தமாடிய முன்னைச் சிறப்பையும் பறைசாற்றி நிற்பவை. தெருவோரமாக இருமருங்கிலும் சவுக்குமரங்கள் காணப்பட்டமையால் அப்பகுதி ‘‘சவுக்குமரத்தடி’’ என்ற காரணப்பெயரால் வழங்கப்பட்டது.

பிற்பட்ட காலத்தில் கதிர்காம ஐயரின் பாடசாலைக்கு அரசாங்கத்தினால் மானியம் வழங்கப்பட்டது. பின்னர் அரசாங்கத்தினாரால் பொறுப்பேற்கப்பட்டு அரசினர் தமிழ்ப் பாடசாலை என்ற பெயருடன் இயங்கப் பெற்றது. இற்றைக்கு மூன்று தசாப்தங்களுக்கு முன்பு வரை கோவிலின் முன்புறமாக, வலப்பக்கத்தில் ஏறத்தாழ நான்கு அடிச் சுற்றளவும் ஐந்தடி உயரமும் கொண்ட இரு தூண்கள் பழுதடைந்த நிலையில் காணப்பட்டன. அத்தூண்கள் வித்துவசிரோமணி கணேசையர் கல்வி கற்ற, கதிர்காமஐயரால் ஸ்தாபிக்கப்பட்ட பாடசாலையின் நினைவுச்சின்னங்களாக விளங்கின. அத்தூண்களும் கோவிலின் சுற்றாடல் நிர்மாணத்தின் போது அகற்றப்பட்டுவிட்டன.

சென்ற நூற்றாண்டின் முற்பகுதியில் ஏறத்தாழ 1908 ஆண்டளவில் கணேசையரின் மைத்துனரான பிரம்மஸ்ரீ ஐயாத்துரை ஐயர் துரைச்சாமி ஐயர் என்பார் தற்போதுள்ள தமிழ்ப்பாடசாலை அமைந்துள்ள இடத்தின் வடக்குப்பகுதியில் நூறு யார் தூரத்தில் தெருவின் கிழக்குப் புறமாக வேறொரு பாடசாலையை அமைத்து அதன் ஸ்தாபகராகவும் முகாமையாளராகவும் இருந்து ஆசிரியர்கள் பலரை நியமித்துக் கல்விப் பணிபுரிந்தார். பாடசாலையை நடத்துவதற்குத் தனது சொந்த நிலபுலன்களை ஈடுவைத்தே செயற்பட்டார். இப்பாடசாலையில் ஆங்கிலமும் கற்பிக்கப்பட்டது, தனது நாற்பத்தோராவது வயதில் துரைச்சாமி ஐயர் இறந்ததும் அப்பாடசாலையும் செயல் இழந்தது. இவரது இம்முயற்சி புன்னாலைக்கட்டுவன் கல்விப பாரம்பரியத்தின் தொடர்ச்சியைப் பேணிப் பாதுகாப்பதில் பங்காற்றியது எனலாம். துரைச்சாமி ஐயரால் நிறுவப்பட்ட பாடசாலை அவர் இறந்ததும் நிர்வகிக்கமுடியாத நிலையில் அவரது மைத்துனர் கதிர்காம ஐயர் செல்லையா ஐயர் அவர்களால் மிஷனரிமாருக்கு விற்கப்பட்டுவிட்டது. அதுவே பின்னர் அங்கிருந்து இடமாற்றப்பட்டு தற்போதுள்ள ஆங்கிலப் பாடசாலையாக புன்னாலைக்கட்டுவன் வடக்கில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

தற்போதுள்ள அரசினர் தமிழ்ப் பாடசாலைக் கட்டிடத்திற்கு 1927ம் ஆண்டு புரட்டாதி மாதம் 12ம் திகதி சேர்.பொன். இராமநாதன் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டது. இந்தப் பாடசாலை, காலத்துக்குக் காலம் சிறந்த ஆசிரியர்களைக் கொண்டு விளங்கியது, ஆசிரியர்கள் பலர் சமூகப் பணிகளிலும் தமது பங்களிப்பைச் செய்து வந்துள்ளனர்.

முன்னாளில் தலைமை ஆசிரியராக இருந்த முருகேசு வாத்தியார் தமது கல்விப் பணிகளில் மட்டும் நின்றுவிடாது மாணவரிடையே கலை உணர்வுகளை ஊட்டுவதில் ஊக்கம் காட்டினார். அவர் அக்காலத்தில் கூத்துப்பழக்கி அவற்றை பாடசாலை அரங்கில் மேடையேற்றினார். விடிய விடிய நடக்கும் அந்தக் கூத்துக்களைப் பார்த்து இரசிப்பதற்கென அயற் கிராமங்களில் இருந்து பெருந்திரளான மக்கள் எமது கிராமத்துக்கு வருவார்கள். அக்கூத்துக் கலைஞர்களின் நாடகப் பெயர்கள் அவர்களது இடுகுறிப் பெயர்களாக வெகுகாலம் நிலைத்தன. ‘சிவபெருமான்’, ’கோவலர்’, ‘ஐயனார்’, ‘கந்தரம்மான்’ என்ற பெயர்களில் அக்கலைஞர்கள் நமது கிராமத்தில் உலாவி வந்ததை தற்போது முதியர்வகளாக இருப்பவர்கள் பலர் நன்கு அறிவர்.

பாடசாலை மண்டபம் புன்னாலைக்கட்டுவனின் சகல நிகழ்வுகளுக்கும் ஒரு கேந்திர நிலையமாக வெகுகாலம் விளங்கி வந்தது. அங்குதான் வாசிகசாலையின் வருடாந்த விழாக்கள் வெகுகோலாகலமாகக் கொண்டாடப்பட்டன. தமிழகத்திலிருந்து நமது நாட்டிலிருந்தும் பெரும் அறிஞர்கள் பலர் வந்து விழாக்களில் கலந்து சிறப்பித்தது இந்தப்பாடசாலை மண்டபத்திலேதான். இத்தகைய பொதுநிகழ்வுகளை நடத்துவதற்கு வேறெந்த இடமும் அக்காலத்தில் புன்னாலைக்கட்டுவனில் இருக்கவில்லை என்பதும் கவனத்தில் கொள்ளத்தக்கது. முருகேசு வாத்தியாரும் அவரது மனைவியும் ஏறத்தாழ பதின்நான்கு வருடங்கள் எமது தழிழ்ப்பாடசாலையில் பெரும்பணி ஆற்றினார்கள் என்பது இங்கு நன்றியறிதலுடன் குறிப்பிடத்தக்கது.

ஏறத்தாழ ஐம்பது வருடங்களுக்கு முன்னர் இப்பாடசாலையில் இரவுப் பள்ளிக்கூடங்களும் நடந்தன என்பது இங்கு நினைவு கொள்ளத்தக்கது. அரிக்கன் லாம்பு ஒன்றை வைத்து அதனைச் சுற்றி மாணவர்கள் வட்டமாக அமர்ந்து கல்வி கற்பர். இத்தகைய இரவுப்பாடசாலையில் அப்போதிருந்த ஆசிரியர்களும் மாணவர்களின் முன்னேற்றங்கருதி இலவசமாகக் கல்வி கற்பித்து வந்தனர். இவ்வாறு கல்வி கற்பித்தவர்களில் தங்கசாமி ஐயர், துரைச்சாமி ஐயர், குமாரசாமி ஐயர் எனபோர் முக்கியமானவர்கள். இத்தகைய இரவுப்பாடசாலைகள் பின்னர் ஆயாக்கடவை ஆலயத்தின் முன்னால் அமைந்திருந்த கோயிலார் மடத்திலும் அதன் பின்னர் கோவில் மண்டபத்திலும் நடைபெற்றன. மேலே குறிப்பிட்ட ஆசிரியர்கள் இருவரும் தமது இல்லங்களிலும் சிறிய அளவில் இத்தகைய இரவுப் பாடசாலைகளை நடத்திக் கல்விப்பணி ஆற்றினார்கள்.

புன்னாலைக்கட்டுவன் கிராமத்தின் கல்விப் பாரம்பரியத்தைப் பரந்த அளவுக்கு இட்டுச்சென்றவர்களில் வேலுப்பிள்ளை இராசம்மா தம்பதிகள் முக்கியமானவர்கள். அவர்களது பொறுப்பில் பாடசாலை இருந்தபொழுது தாழ்த்தப்பட்ட சாதியினரும் கல்வி பெறவேண்டும் என்ற நோக்குடன் செயற்பட்டார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. சாதிக்கட்டுப்பாடுகள் மிகவும் இறுக்கமாக இருந்த அவர்களது காலகட்டத்தில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு கல்வி மறுக்கப்பட்டிருந்தது. அவர்கள் எழுத்தறிவற்றவர்களாக இருந்தார்கள். வேலுப்பிள்ளை வாத்தியார் தாழ்த்தப்பட்ட சாதியினரது குடிசைகளுக்கு வீடு வீடாகச் சென்று அவர்களது பிள்ளைகளை பாடசாலையில் சேர்க்கும்படி ஊக்கிவித்து அவர்களது சமூகத்தினரும் எழுத்தறிவுபெறக் காரணராய் விளங்கினார்.

இளவாலையைச் சேர்ந்த கார்த்திகேசு வாத்தியார் தலைமை ஆசிரியராக இருந்த காலத்தில் அவரும் மனைவியும் மாணவரிடையே மதப்பற்றையும் விழுமியங்களையும் ஊக்குவிப்பதில் முயற்சி உடையவராக இருந்தார்கள். செவ்வாய், வெள்ளி தினங்களில் மாணவர்களை அருகிலுள்ள ஆயாக்கடவை ஐங்கரன் ஆலயத்திற்கு அழைத்துச் சென்று கூட்டுப் பிராத்தனை நடத்தியும் ஆலயச் சூழலைத் துப்புரவு செய்து கிரியைத்தொண்டை ஊக்கிவித்தும் பலகாலம் மாணவர்களிடையே மதப்பற்றை வளர்ப்பதில் அக்கறையுடன் செயற்பட்டார்கள்.

வேலுப்பிள்ளை வாத்தியாரின் காலத்தில் வருடந்தோறும் எலிசபெத் மகாராணியின் பிறந்ததின விழா பாடசாலையில் மிகவும் கோலாகலமாக நடைபெறும். நாடு சுதந்திரமடையும் வரை மகாராணியின் பிறந்த தினங்களே பாடசாலைகளில் வருடாந்த விழாக்களாகக் கொண்டாடப்பட்டு வந்தன. அன்றைய தினம் மாணவர்களிடையே விளையாட்டுப்போட்டிகள் நடைபெற்று பரிசுகள் வழங்கப்பட்டதோடு மாணவர்கள் எல்லோருக்கும் இனிப்புப் பண்டங்களும் வழங்கப்பட்டன.

நமது கிராமத்துத் தமிழ்ப் பாடசாலையில் காலத்துக்குக் காலம் எமது ஊரைச் சேர்ந்த பலரும் ஆசிரியர்களாகக் கடமையாற்றி வந்துள்ளனர். இவ்வாறு முதலில் கடமையாற்றியவர் பிரம்மஸ்ரீ துரைச்சாமி ஐயர் குமாரசாமி ஐயர் ஆவார். இவர் தண்ணீரூற்றுக் கிராமத்திலிருந்து இப்பாடசாலைக்கு மாற்றம்பெற்று வந்து ஓய்வு பெறும்வரை இப்பாடசாலையிலேயே கடமையாற்றினார். பின்னர் வந்த காலப்பகுதியில் அ. முதலித்தம்பி, க. சோமசுந்தரம், திரு. கனகசபை, தேவி ரீச்சர், சரோஜா பாக்கியநாதன், திருமதி. வேலாயுதம் ஆகியோர் கடமையாற்றியுள்ளனர்.

எமது கிராமத்தின் கல்வி முன்னெடுப்புக்களில் தனியார் கல்வி நிறுவனங்களும் 1977 முதல் பங்களிப்புச் செய்துள்ளன. விக்னேஸ்வர மணிமண்டபத்தில் காலத்துக்காலம் தனியார் கல்வி நிறுவனங்கள் இயங்கி எமது கிராமத்து மாணவர்களுக்கும் அயற்கிராமத்து மாணவர்களுக்கும் கல்விச் செயற்பாடுகளில் உதவியுள்ளன. 1990 வரை இந்நிறுவனங்கள் சிறந்த முறையில் இயங்கி வந்துள்ளன. இடப்பெயர்வின் பின்னர் இந்நிறுவனங்கள் செயலிழந்து போயின. கணேச சனசமூக நிலையத்தினரால் க.பொ.த சாதாரண மற்றும் உயர்தர வகுப்புகளில் தோற்றும் மாணவர்களுக்கு கணிதம், விஞ்ஞானம், வர்த்தகம், ஆங்கிலம் போன்ற பாடங்களுக்கு இலவச வகுப்புகள் மாலை நேரங்களில் நடத்தப்பட்டு வந்தன.

எமது கிராமத்தில் இயங்கிவரும் கணேச முன்பள்ளியின் செயற்பாடுகள் குறிப்பிடத்தக்கவை. ஆரம்பத்தில் தனியார் பொறுப்பில் இயங்கிவந்த இந்த முன்பள்ளி பின்னர் பிரதேசசபையின் கீழ் மானியம் பெற்று, கணேச முன்பள்ளி என்ற பெயரில் இப்போது கணேச சனசமூக நிலையத்தின் மேற்பார்வையில் சிறப்பாக இயங்கி வருகிறது. இந்த முன்பள்ளியில் உரிய காலங்களில் பரீட்சைகள் நடத்தப்பட்டுத் தேர்ச்சி அறிக்கைகள் வழங்கப்படுவதோடு வாணி விழா, வருடாந்த விளையாட்டுப் போட்டி போன்றவைகள் சிறப்பான முறையில் நடைபெற்று வருகின்றன. வருடாவருடம் 25 முதல் 30 வரையிலான சிறார்கள் இங்கு கல்வி கற்று வருகிறார்கள். தற்போது விக்னேஸ்வர மணிமண்டபத்தில் இந்த முன்பள்ளி இயங்கி வருகிறது, இந்த முன்பள்ளிக்குத் தனியானதொரு கட்டடம் அமைப்பதற்கென இக்கட்டுரையாசிரியர் குடும்பத்தினர் சார்பில் மணிமண்டபத்தின் அருகே காணி ஒன்றினை ஒரு இலட்சம் ரூபா செலவில் வாங்கி வழங்கியுள்ளார். இதனை, தமது பேரர் பிரம்மஸ்ரீ. ஐயாத்துரை ஐயர் துரைச்சாமி ஐயர் அக்காலத்தில் பாடசாலை ஒன்றை நிறுவி கல்விப் பணியாற்றியமையின் ஞாபகார்த்தமாக, அவர் வழங்கியுள்ளார்.

அரசினர் தமிழ்ப் பாடசாலையின் முன்னேற்றத்தில் கிராம மக்களும் அதிக அக்கறையுடன் செயற்பட்டு வந்துள்ளனர். பாடசாலையின் நடுவே அமைந்துள்ள கட்டடத்தை அரசினால் வழங்கப்பட்ட பண உதவியுடன் சிறந்த முறையில் நிர்மாணிக்க உதவியவர் திரு. ச. இராசரத்தினம் அவர்கள்.

போர் காரணமாக இரண்டு தசாப்தகாலம் பாடசாலையின் செயற்பாடுகளில் தேக்க நிலை ஏற்பட்டபோதும் தற்போது மீண்டும் புது உற்சாகத்துடன் எமது கிராம மக்கள் பாடசாலை முன்னேற்றத்தில் பெரிதும் பங்குகொள்வது வரவேற்கக் கூடிய விடயமாகும்.

எமது ஊர்ப்பாடசாலை பவளவிழாக்காணும் இவ்வேளையில் பாடசாலையின் வளர்ச்சிக்காக பல்வேறு கட்டங்களிலும் உழைத்த பெருமக்களை வாழ்த்தி, பாடசாலை அதிபரையும், பவளவிழாக் குழுவினரையும் பாராட்டி, பாடசாலைக்கு ‘நயனகடாட்சம்’ வழங்கிக் கொண்டிருக்கும் ஆயாக்கடவைச் சித்தி விநாயகரின் பாதார விந்தங்களை பணிவோமாக!

# ஆசிரியர் குழாம்



**இருப்பவர்கள் (இடமிருந்து வலம்)**

திரு. ச. சிவசிவா, திரு. ச. சுபாஸ்கரன், திரு. ந. சந்திரகாந்தன், திரு. சி. மணியம் (அதிபர்), திருமதி. ச. பாக்கியநாதன் (உபஅதிபர்), திருமதி. இ. விக்னேஸ்வரன், திருமதி. கு. வைத்தியநாதன்

**நிற்பவர்கள் (இடமிருந்து வலம்)**

திருமதி. அ. சிவகுமார், செல்வி. யே. அருள்ராணி, திருமதி. மை. சிவநாதன், திருமதி. ப. ஸ்ரீகுமாரன், செல்வி. இ. சந்திரலேகா, திருமதி. கோ. அருட்பிரகாசம், திருமதி. மே. ஜெ. கிறிஸ்ரோபால், செல்வி. தி. விஜிதா



# எங்கள் பாடசாலை



*சி. ஜெயவரதன்*

*செயலாளர், ப.மா. சங்கம்.*

எமது கிராம மக்களது வாழ்வியலை வழிப்படுத்தி, வளப்படுத்தி வந்ததில் இப்பாடசாலைக்குப் பெரும்பங்கு உண்டு. உள்நாட்டுப் போர் உக்கிரமடைந்த கால கட்டமான 1990 க்கு முன் எமது மக்களில் மிகப் பெரும்பான்மையினர் இங்கேயே தமது ஆரம்பக் கல்வியைப் பெற்று வந்தனர்.

போராட்டம் ஏற்படுத்திய பாதிப்புகளில் ஒன்று எமது கிராமப் பிள்ளைகள் தமது ஆரம்பக் கல்வியைப் பெறுவதற்கு வேறு பாடசாலைகளை நாட வேண்டிய நிலைமையை ஏற்படுத்தி விட்டமையாகும். எமது பாடசாலை பலாலி இராணுவ முகாம் சார்ந்த போராட்ட முனையில் இயங்கியதனால் கற்றல், கற்பித்தற் செயற்பாடுகளில் ஏற்பட்டு வந்த பின்னடைவுகள் இதற்கான முக்கிய காரணி ஆகும். போர் ஓய்ந்த பின்பும் எமது பிள்ளைகள் தொடர்ந்தும் வெளிப் பாடசாலைகளுக்குச் செல்வது பரிதாபகரமாகவுள்ளது.

இன்றைய சமூகத்தில் ஏற்பட்டுவரும் சூழல் மாற்றங்கள், நெருக்குதல்கள் மத்தியில் தூர இடங்களுக்குப் பிள்ளைகளை ஆரம்பக் கல்வி பெற அனுப்பி வைப்பது ஆரோக்கியமானதன்று என்பதை இங்கு எடுத்து விளக்க வேண்டியதில்லை. சுதந்திரமாகவும், சுயாதீனமாகவும், பாதுகாப்பாகவும் சின்னஞ் சிறார்கள் பாடசாலைக்கு மகிழ்வோடு சென்று சீரான கல்வியைப் பெறவேண்டும். அதற்கான இடமாகக் குடும்பச் சூழலிலுள்ள பாடசாலை மட்டுமே அமைய முடியும். ஆனால் அப்பாடசாலை போதிய வளங்களை உடையதாகவும் இருக்க வேண்டும்.

போர் ஓய்ந்த கையோடு 2001 இல் புதிய அதிபர். சி. மணியம் இங்கு கடமையேற்றார். பாடசாலையில் காணப்பட்ட பின்னடைவுகளைச் சீராக்குவதற்குத் துரித நடவடிக்கைகளை எடுத்தார். இதனாற் இப்பாடசாலை அடைந்துவரும் விரைவான அபிவிருத்தியை நாம் கண்முன்னே காணுகின்றோம். ஏனைய பாடசாலைகள் பலவற்றிற் காணமுடியாத கைங்கரியங்கள் இங்கு நிறைவேறி வருகின்றன.

அதிபர் தனது செயற்பாடுகளுக்கு உதவுங்கரங்களாக பழைய மாணவர்கள் இருப்பார்கள். என்ற நம்பிக்கையோடு இப்பாடசாலையில் முதன்முறையாக 2003 ஆம் ஆண்டின் பழைய மாணவர் சங்கம் ஒன்றினை உருவாக்கினார். அவரது நம்பிக்கை நல்ல பயனைத் தந்துள்ளது. தம்மை உருவாக்கிய தமது கல்வித் தாய்க்கு நன்றி

செலுத்தும் வகையிலும் தமது கிராமச் சிறார்கள் வளமான கல்வியைப் பெற்று எதிர்காலத்தில் நற்பிரஜைகளாக வாழ்க்கையில் வெற்றி காண வேண்டும் என்ற நோக்கிலும் பழைய மாணவர்கள் எமது சங்கத்தின் மூலமும் நேரடியாகவும் உதவ முன்வந்துள்ளனர். தேவையான நிதியை இயன்றளவில் வழங்குவதோடு சிலர் தமது உடல் உழைப்பை நல்கிச் சிரமதானப் பணிகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.

பழைய மாணவர்சங்கம் ஆரம்பிக்கபட்ட நாளிலிருந்து இன்றுவரை இதன் செயலாளராக நான் செயற்படுவதற்குச் சந்தர்ப்பம் கிடைத்தமையை ஒரு பெரும் பேறேனக் கருதுகின்றேன். ஆயிரம் ஆலயங்கள் நிறுவுவதை விட ஏழை ஒருவனுக்கு எழுத்தறிவு ஏற்பட உதவுவது கோடி மடங்கு புண்ணியமான செயல் என்பது ஆன்றோர் வாக்கு. இச் சத்திய வாக்கை நித்திலம் சிந்தித்து நாம் செயற்படவேண்டும். எமது கிராமப் பிள்ளைகள் எமது பாடசாலையை விரும்பி, இங்கேயே கற்கும் சூழலை உருவாக்குவதில் வெற்றி காண்போம்.

எமது சங்கத்தின் ஆரம்ப நாளிலிருந்து உபதலைவராகச் செயற்பட்டு நல்வழிகாட்டி, நாளும் இப்பாடசாலையின் உயர்வுக்குழைத்த கல்வியாளர், கணக்காளர் நா. திருநாவுக்கரசு அமரத்துவம் எய்தியமை எமக்கும் சமூகத்திற்கும் பேரிழப்பாகும். அவரது சிந்தனைகளைச் செயற்படுத்துவதே அவருக்கு நாம் செய்யும் பிரார்த்தனையாகும்.

இப்பாடசாலையின் அபிவிருத்திக்கு மென்மேலும் உதவிடப் பழைய மாணவர்கள், சிறப்பாக உலக நாடுகளில் வாழும் பழைய மாணவர்கள் முன்வர வேண்டும். என்று ஆராமையுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

வாழ்க! வளர்க! எமது அறிவாலயம்!




சேர். பொன் இராமநாதன் இப்பாடசாலையின் முதற் கட்டிடத்திற்கான அத்திவாரக் கல்லை நாட்டிய போது வைக்கப்பட்ட நினைவுக் கல்.

# அமரர் சி. இரத்தினசோதி நினைவு அருள் ஆலயம்

*திரு. மு. சிவானந்தன்*

இப்பாடசாலை அதிபர் இங்கு பதவியேற்ற கையோடு முதன் முதற் செய்த பணிகளிலொன்று வழிபாட்டுப்பீடம் ஒன்றினை அமைத்ததாகும். அமரத்துவம் அடைந்த சி. இரத்தினசோதி (பெரியராசு) நினைவாக இப்பணியைச் செய்து தருமாறு அன்னாரது குடும்பத்தினரை அவர் அணுகிக் கேட்டுக்கொண்டபோது அவர்கள் மனமுவந்து ஏற்றுக் கொண்டார்கள். 2002 ஆம் ஆண்டில் இதனை நிறைவு செய்து தந்ததோடு மற்றுமொரு அரும்பெரும் சிவத்தொண்டையும் பெரியராசு குடும்பத்தினர் செய்து வருகின்றனர். வருடம் வருடம் தமது இல்லத் தலைவரின் ஆண்டுத் திதியின் போது இவ்வாலயத்தில் அமுது செய்து இப்பாடசாலை மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் பரிமாறிப் பிரார்த்திக்கின்றனர்.



அமரர். இரத்தினசோதி ஒரு புண்ணியம் செய்த நல் ஆத்மா. அதனாலன்றோ மேற்கண்டவாறு அவரது வருடாந்த நினைவு நாளில் 300 க்கும் மேற்பட்ட சிறார்கள் பங்குபற்றுகின்றனர். அதுமட்டுமா? இவ்வழிபாட்டுப்பீடத்தைப் புனிதமாகப் பேணிப் பாடசாலை நாட்களில் ஒன்றுகூடி மாணவர்கள் பக்தி சிரத்தையோடு காலை ஆராதனைகள் செய்து வருகின்றனர்.

தொண்டு என்றால் எப்படி இருக்க வேண்டும் என்பதற்குப் பெரியண்ணை குடும்பத்தினர் இலக்கணம் வகுத்துள்ளனர். இப்படியான புண்ணிய கருமங்களை ஏனையோரும் செய்ய முன்வருவார்களானால் எமது சமூகத்திற்கு சன்மார்க்க நெறி மேலோங்கும்.



# அமரர்.க. தங்கராசா நினைவு சிறுவர் விளையாட்டு முற்றம்

*திரு. தா. பாலசுப்பிரமணியம்*

நீர்வேலி க. தங்கராசா அவர்கள் இப்பாடசாலையில் 1983 முதல் 1991 வரை 8 ஆண்டுகள் அதிபராகக் கடமையாற்றிய பின் அச்செழு சைவப் பிரகாச வித்தியாலத்துக்கு மாற்றலாகியவர். மண்ணையும் மக்களையும் நேசித்துக் கல்விச் சேவைகயைக் கண்ணியம் மிக்க சேவையாகக் கொண்டு கடமையாற்றியவர்.

2002 இல் அன்னார் அமரத்துவம் அடைந்தார். அவரது ஆன்மா சாந்தியடைவதற்கு அவரது சிந்தைக்குகந்த கல்விச் சேவைக்கு ஏதாவது செய்தாக வேண்டும் என அவரது குடும்பத்தினர் முடிவு செய்தனர். வயாவிளான் ம.ம.வி முன்னாள் அதிபர் ஆ.சி. நடராஜாவிடம் அப்பணிக்கென ரூபா ஒரு லட்சம் வழங்கினார்.

அதிபர் சி. மணியம் அவர்கள் இதனை அறிந்து உரிய முறையில் அணுகி அமரரது நீண்டகாலக் கல்விச் சேவை இப்பாடசாலையிலே அமைந்திருந்ததனால் இங்கே ஒரு சிறுவர் விளையாட்டு முற்றத்தை அமைத்துத்தரும்படி கேட்டுக் கொண்டார். குடும்பத்தினர் இவ்வேண்டுகோளை ஏற்றுக் கொண்டமையால் பூரணத்துவமான ஒரு விளையாட்டு முற்றம் இப்பாடசாலை வளாகத்தில் நிர்மாணிக்கப்பட்டது.


தங்கராசா குடும்பத்தினரது இக்கொடை ஓர் அரும்பெரும் சேவையாகும். இதனால் விளையாட்டின் மூலம் கல்வி என்ற ஆரம்ப வகுப்புக் கற்றல் செயற்பாடுகளை மேற்கொள்ளத் தேவையான இத்தளம் இப்பாடசாலையில் உரிய முறையில் உருவாகிவிட்டது.

தங்க மனத்தினரான தங்கராசா என்பதனால் மாணவர்கள் குதூகலமாகத் தினமும் இவ்விளையாட்டு முற்றத்தைப் பயன்படுத்தும் பேறினைப் பெற்றனர்.

எப்படியான பணிகளைச் சமூகத்தில் மேற்கொள்ள வேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டாக இத் திருப்பணியைத் தங்கராசா குடும்பத்தினர் இங்கு செய்து தந்துள்ளனர். எமது சமூகம் இவ்வாறான பணிகளைச் செய்ய முன்வர வேண்டும்.

15120

# புன்னாலைக்கட்டுவன் அ.த.க. பாடசாலை
# இடவிளக்கப் படம்



# நூலகமும் கோயிலாரும்

*திரு. ஏ. உதயகுமார்,*
*தலைவர், பரிபாலன சபை,*
*சித்திவிநாயகர் ஆலயம்.*

அதிபரது வேண்டுகோளுக்கமைய இப்பாடசாலையில் நூலகம் இல்லா ஒரு குறையை நீக்கிவைக்க எமது பரிபாலனசபை முடிவு செய்தது. இன்றைய பவள விழா நன்னாளில் இதற்கான ஆரம்பத்தைச் செய்து வைப்பதனையிட்டுப் பெரு மகிழ்ச்சியடைகின்றோம். தற்போது ரூபா 10,000 பெறுமதியான நூல்கள் எம்மால் வழங்கப்படுகின்றன. ஆண்டுதோறும் இந்நூலக விருத்திக்கு எமது சபை உதவவேண்டும் என்பது எனது பெருவிருப்பமாகும்.

இந்த நற்பணியை நாம் மேற்கொள்வதற்கு, எமது ஆலயத்தோடு இரண்டறக் கலந்த, கடந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் வாழ்ந்து வந்த கோயிலார் என்ற பெரியாரே தூண்டுகோலாக அமைந்தனர். எமது ஊரவரான தேவேந்திர முதலி வழிவந்த கயிலாயபிள்ளை என்பவர் எமது மக்களால் "கோயிலார்" என்று வாஞ்சையோடு அழைக்கப்பட்டவர். இவர் எமது ஆலயத்தோடு இரண்டறக் கலந்து வாழ்ந்து வந்தமையால் "கோயில் ஆள்" என்று அழைக்கப்பட்டார் என்றும் நாளடைவில் அப்பெயர் "கோயிலார்" என்று திரிபடைந்துவிட்டது என்றும் கூறப்படுகின்றது.

இவர் எமது ஆலயத்தின் தென்கிழக்குப் பகுதிகளில் ஆலயத்தின் நன்மை கருதியும் ஊர்மக்களது பொதுத் தேவைகள் கருதியும் ஒரு கட்டிடத்தைக் கட்டினார். இது கோயிலார் மடம் என அழைக்கப்பட்டது. பிற்பட்ட காலத்தில் இக்கட்டிடம் ஆலய விஸ்தரிப்புக்காக இடிக்கப்பட்டது.

1910 ஆம் ஆண்டில் இக்கட்டிடத்திற் கோயிலார் ஒரு பாடசாலையை உருவாக்கி அந்தணர்களைக் கொண்டு கல்வி போதிக்கச் செய்தார். இப்பாடசாலையே 1927 இல் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையாக மாறி இன்றைய இடத்தில் நிலைபெற்றது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

முக்கிய குறிப்பு :

எமது பாடசாலையினது உண்மையான ஆரம்பம் 1910 ஆண்டாகக் கொள்ளப்பட வேண்டும் என்ற ஒரு முக்கிய கருத்தை மேலுள்ள கட்டுரை முன்வைக்கின்றது. இதனை ஏற்றுக் கொள்ளக்கூடியதற்கான ஆவணச் சான்றுகள் கிடைக்கப்பெறின் 2010 ஆம் ஆண்டு இப்பாடசாலையின் நூற்றாண்டு நிறைவாக அமையும். எனவே சரியான தகவல்களை யாராவது தந்துதவினால் நன்றியுடையவர்களாவோம்.

அதிபர்.

# உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் வர்ண ஓவியங்களும் வள்ளுவர் சிலையும்

*திரு. எஸ். கஜந்தன்*



"ஓவியமணி" செ. வரதராஜன் யாழ். கல்வி வலயச் சித்திரக் கல்வி ஆலோசகராகப் பணியாற்றி வருபவர். வடக்குப் புன்னாலைக்கட்டுவனைத் தனது நிரந்தர வசிப்பிடமாகக் கொண்டவர். எமது மத்தியில் வாழ்ந்து வரும் ஒரு சகலகலாவல்லவர். சித்திர, சிற்பக் கலைகளில் மட்டுமன்றி, சங்கீதம், நாடகம் முதலான துறைகளிலும் சிறந்த ஈடுபாடு உடையவர்.

ஓவிய மணியின் சுவர்ச் சித்திரங்கள் குடாநாட்டின் பல பகுதிகளிலும் ஆலயங்கள், பாடசாலைகளில் முருகியல் சுவையுடனும், தெய்வீகக் களையுடனும் காட்சி தருவதைக் காணலாம். தெய்வ உருக்களைச் சித்திரமாகவோ, சிற்பமாகவோ வடிப்பதில் இவருக்கு நிகர் இவரே தான்.


இவரது புலமை மிக்க சேவை எமது பாடசாலைக்கும் கிடைக்கப் பெற்றமை எமக்குப் பெருமை தருவதாகும். தனது பிரதேசப் பாடசாலை என்பதனால் பாசவூணர்வுடன் சிறந்த சுவர் ஓவியங்களை இங்கு வரைந்து எமது மாணவச் செல்வங்களின் கற்றல் செயற்பாடுகளுக்கு உதவியுள்ளார்.

வரதராஜன் இங்கு வடித்த வள்ளுவர் சிலையின் வனப்பை வாயாரப் புகழாதவர் இல்லை. குடாநாட்டிலுள்ள ஏனைய சிலைகளோடு இதனை ஒப்பீட்டு நோக்கும் போது இச்சிலையினது மேன்மையை உணர்ந்து கொள்ளலாம்.

## சித்தி விநாயகர் வித்தியாலயம்

இப்பாடசாலையினது, பெயரைச் "சித்திவிநாயகர் வித்தியாலயம்" என மாற்றுவதற்கு எமது பாடசாலை அபிவிருத்திச்சங்கம் கடந்த பொதுக்கூட்டத்தில் ஏக மனதான தீர்மானம் ஒன்றினை நிறைவேற்றியது. உரிய அங்கீகாரத்தினைப் பெறுவதற்காக மாகாணக்கல்வி அமைச்சுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. இதற்கான அங்கீகாரம் வெகுவிரைவிற் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

# புன்னாலைக்கட்டுவன் தெற்குக் கிராமம்



# மக்கள் சேவையில் மனநிறைவு கண்ட மாமனிதர் நா. திருநாவுக்கரசு

*திரு. மு. கணேசானந்தன்*

இன்றைய அதிபர் இப்பாடசாலையில் 2003 ஆம் ஆண்டில் முதன்முறையாகப் பழைய மாணவர்சங்கம் ஒன்றினை உருவாக்க முற்பட்ட போது அதற்கு உற்சாகந் தந்து தானும் பங்கு கொண்ட பெரியார் நா. திருநாவுக்கரசு அவர்கள். அதன் உபதலைவராகத் தெரிவு செய்யப்பட்டபோது மகிழ்வோடு ஏற்றுச் செயற்பட்டவர்.



பிறந்த மண்மீதும் மக்கள் மீதும் ஆராப்பற்றுடன் வாழ்ந்த இப்பெரியார் தமது சமூகத்தின் வளர்ச்சி கல்வியிலேயே தங்கியுள்ளது என்பதில் மிக்க நம்பிக்கை கொண்டவர். எனவே தான் இப்பாடசாலையை எந்த அளவுக்கு வளர்த்தெடுக்க முடியுமோ அந்த அளவுக்குச் சமூகம் உயரும் என்று சிந்தித்தார். எனவே பாடசாலையின் வளர்ச்சிக்குப் பயன்மிகு ஆலோசனைகளை வழங்கி வந்ததோடு தேவைகளைக் கேட்டறிந்து உரியவர்களிடம் அணுகி அவற்றை நிறைவேற்றும் வரை ஓயாது செயற்பட்டார்.

கல்வித் திணைக்களத்திற் கணக்காளராகக் கடமையாற்றிய திருநாவுக்கரசு அவர்கள் ஓய்வு பெற்றபின் தானுண்டு தன் குடும்பமுண்டு என்று வாழாது சமூக மேம்பாட்டுக்காக உழைத்து வந்த பிதாமகர். போராட்ட காலத்தில் மக்களைப் பாதுகாப்பதில் தன்னிலை மறந்து செயற்பட்டவர். கணேச சனசமூகத்தின் தலைவராக இருந்து தொண்டாற்றியவர்.

இறுதிக்காலம் வரை தன்னலமற்ற சேவையாற்றிய அவர் தனது 77 ஆவது வயதில் சிவப்பேறு எய்தினார். அன்னாரது உயர்ந்த இலட்சியங்களை நாம் தொடர்ந்து மேற்கொள்வதே அவருக்கு நாம் செய்யும் பிரார்த்தனையாக அமையட்டும். அவர் வழியில் எம்மை உருவாக்கிய இப்பாடசாலையின் உயர்வுக்கு உழைப்பதே எமது சமுதாயத்துக்கு நாம் செய்யக் கூடிய மிகப் பெரும் பணியாகும்.

# எங்கள் கிராமம்

*திரு. து. கிருபாகரன்*
*ஆசிரியர்.*

யாழ்ப்பாண நகரத்திலிருந்து பலாலி வீதி வழியாகச் சுமார் 10 கிலோமீற்றர் தூரம் சென்றால் இக் கிராமத்தை அடையலாம். புன்னாலைக்கட்டுவன் தெற்கு, புன்னாலைக்கட்டுவன் வடக்கு என இரு தனித்தனியான கிராமங்கள் அருகருகே உள்ளன. வரலாற்றுப் பழைமையிலிருந்தே இவை தனித்தனி அலகுகளாக வளர்ச்சி பெற்றுவந்துள்ளன.

புன்னாலைக்கட்டுவன் தெற்குக் கிராமத்தின் கிழக்கெல்லையாக ஈவினையும், தென்கிழக்கு எல்லையாக அச்செழுவும், தென்எல்லையாக ஊரெழுவும், தென்மேற்கு எல்லையாக மயிலங்காடும் (எழாலை), மேற்கெல்லையாக குப்பிழானும், வடக்கெல்லையாக புன்னாலைக்கட்டுவன் வடக்கும் அமைந்துள்ளன.

சுமார் 1 1/2 சதுரக் கிலோமீற்றர் பரப்புடைய இக்கிராமம் ஒரு விவசாயக் கிராமமாகத் தோன்றி வளர்ந்ததென்று தெரிகிறது. வளமான செம்மண்ணும் தரைக்கீழ் நீரும் இங்கு காணப்படுகின்றமையே இதற்குக் காரணமாகும்.

இன்று 348 குடும்பங்களைச் சேர்ந்த 1188 மக்கள் இங்கு வசிக்கின்றனர். இவர்களுள் 49 குடும்பங்களைச் சேர்ந்த 184 பேர் புலம்பெயர்ந்து வந்து தற்காலிகமாக குடியேறியவர்கள் ஆவர். கிராமத்தின் மத்தி, வடகிழக்குப் பகுதிகளிற் குடித்தொகை நெருக்கமாகவும், ஏனைய இடங்களில் ஐதாகவும் காணப்படுகின்றது.

சந்தடிமிக்க இடமாக இங்கு அமைந்துள்ளது தெற்குப் புன்னாலைக்கட்டுவன் சந்தியாகும். கிராமத்தின் தென் எல்லையைச் சார்ந்து இச் சந்தி அமைந்துள்ளது. பலாலி யாழ்ப்பாண வீதியும், புத்தூர் - சுன்னாகம் வீதியும் சந்திக்கும் இடம் இதுவாகும். கிராமத்தின் மிகப் பெரும்பான்மையான வர்த்தக நிலையங்கள் இச்சந்தியைச் சார்ந்தே அமைந்துள்ளன.

இக்கிராம மக்களது பிரதான தொழில் விவசாயமாகும். வெங்காயம், புகையிலை, வாழை, மிளகாய் மற்றும் காய்கறி வகைகள் இங்கு நன்கு விளைகின்றன. விவசாயிகள் கால்நடை வளர்ப்பிலும் ஆர்வமாக ஈடுபடுகின்றனர்.

348 குடும்பங்களில் 85 விவசாயக் குடும்பங்களும் 146 விவசாயக் கூலிக் குடும்பங்களும் உள்ளன. ஏனைய தொழில்கள் செய்வோரை நோக்கின் அரசதுறையில் 23 பேரும், கூட்டுறவுத் துறையில் மூன்று பேரும், தனியார் துறையில் 07 பேரும் ஓய்வூதியம் பெறுவோர் 24 பேருமாக மொத்தம் 57 பேர் உள்ளனர்.

இக்கிராமத்தில் பொது நிறுவனங்களாக உள்ளவை,

| | | | |
|---|---|---|---|
| பாடசாலை | - 1 | உப தபாலகம் | - 1 |
| முன்பள்ளி | - 1 | மருந்தகம் | - 1 |
| ஆலயங்கள் | - 6 | ஆயுர்வேத மருந்தகம் | - 1 |
| சனசமூக நிலையம் | - 1 | ப.நோ.கூ.சங்கம் கிளை | - 1 |

என்பனவாகும்.

இவற்றுள் பாடசாலை, சித்திவிநாயகர் ஆலயம், கணேச சனசமூக நிலையம், கணேச முன்பள்ளி என்பன ஒரே இடத்தில் அமைந்துள்ளன. ஆயாக்கடவை என்ற குறிச்சிப் பெயருடன் அமைந்திருக்கும் இவ்விடம் கிராமத்தின் மத்தியில் சிறிது மேற்காக அமைந்துள்ளது. பலாலி வீதி ஊடறுத்துச் செல்லும் இவ்விடம் நாளாந்தம் பொதுமக்கள் கூடும் இடமாக அமைந்துள்ளது. பிரதான வீதியை மூடியவாறு பாரிய மரங்கள் காணப்படுவது இவ்விடத்தின் சிறப்பம்சமாகும். இவ்வாறான ஒரு வீதியோரச் சூழலைக் குடாநாட்டில் வேறு எங்காவது காண்பது அரிது.

எங்கள் கிராமத்தில் வாழ்ந்த தமிழ்ப் பேரறிஞர்களில் முதன்மையானவர் வித்துவ சிரோமணி சி. கணேசையர் ஆவார். இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்த இவரது புகழ் தமிழ் உள்ளவரை நிலைக்கும். இன்று எம்முடன் வாழ்ந்து கொண்டிருக்கும் இலக்கிய வித்தகர் கலாபூசணம் தி. ஞானசேகரன் ஐயா அவர்கள் ஈழத்து இலக்கிய வானிற் சுடர்விடும் ஒரு நட்சத்திர எழுத்தாளரான இவர் எமது மண்ணுக்குப் பெருமை சேர்த்து வருகிறார்.

## பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

| | | |
|---|---|---|
| **காப்பாளர்** | : | **திரு. த. மகேஸ்வரன்** |
| **தலைவர்** | : | **திரு.சி. மணியம் (அதிபர்)** |
| **உபதலைவர்** | : | **திருமதி.ச. பாக்கியநாதன் (உபஅதிபர்)** |
| | | **திரு.சி. பாலசிங்கம் (இளைப்பாறிய ஆசிரியர்)** |
| **செயலாளர்** | : | **திரு.அ. துரைராசா** |
| **உதவிச் செயலாளர்** | : | **திரு. செ. செல்வரத்தினம் (J.P)** |
| **பொருளாளர்** | : | **திரு. ச. சுபாஸ்கரன் (ஆசிரியர்)** |

## செயற்குழு உறுப்பினர்கள்

1. **திரு. க. தர்மலிங்கம் (J.P)**
2. **திரு. வே. மகாதேவன்**
3. **திரு. பொ. மதிவண்ணன்**
4. **திருமதி. இ. விக்கினேஸ்வரன் (ஆசிரியர்)**
5. **திருமதி. க. இராசேந்திரம்**
6. **திருமதி. ச. உதயரஞ்சனி**
7. **திருமதி. சா. ஜெகராசா**

# "தொல்காப்பியக் கடல்"
# வித்துவ சிரோமணி கணேசையர்

*கலாபூசணம்*
*தி. ஞானசேகரன் ஐயர்* J.P




எமது ஊருக்குப் பெருமை தேடித்தந்த கல்விமான்களில் முதன்மையானவர் வித்துவசிரோமணி சி. கணேசையர் அவர்கள். தமிழின் பல்வேறு துறைகளிலும் தமது ஆற்றலையும் ஆளுமையையும் வெளிப்படுத்தியவர். தமிழ் கூறும் நல்லுலகு எங்கும் தனது புகழை நிலைநாட்டியவர். இலக்கணவித்தகராகவும், கட்டுரையாளராகவும், பாடபேத ஆய்வாளராகவும், விவாத அறிஞராகவும், கவிஞராகவும், சிறந்த போதனாசிரியராகவும் விளங்கினார்.

கணேசையர் 18 நூல்களை எழுதி வெளியிட்டார். இந்தியாவிலிருந்து வெளிவந்த 'செந்தமிழ்' என்னும் சஞ்சிகையில் 1903 - 1950 காலப்பகுதியில் அறுபதுக்கும் மேற்பட்ட கட்டுரைகளை எழுதினார். சுன்னாகத்திலிருந்து வெளிவந்த ஈழகேசரிப் பத்திரிகையிலும் 1932 - 1957 காலப்பகுதிகளில் 15 க்கு மேற்பட்ட கட்டுரைகளை எழுதினார்.

கணேசையரது பணிகளிலே உயர்ந்து நிற்பது அவர் செய்த தொல்காப்பியம் உரைவிளக்கமே ஆகும். இதனால் அவர் "தொல்காப்பியக்கடல்" எனப் போற்றப்பட்டார்.

ஐயரது 60 ஆண்டு நிறைவினை ஈழத்தமிழ் அன்பர்கள், அறிஞர்கள் யாழ் வைத்தீஸ்வராக் கல்லூரியில் பெருவிழாவாகக் கொண்டாடிப் அன்னாருக்குப் பொற்கிழி வழங்கிக் கௌரவித்தனர். 1952 இல் யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாவிருத்திச் சங்கத்தினர் அன்னாருக்கு 'வித்துவசிரோமணி' என்னும் பட்டம் வழங்கிக் கௌரவித்தனர். 1980 இல் ஆயாக்கடவை சித்தி விநாயகர் ஆலய முன்றிலில் சிலை ஒன்று நிறுவும் பணியில் யான் பங்குகொள்ள முடிந்தமை ஒரு பெரும்பேறாகும்.

# பவளவிழா நன்னாளில் பாராட்டுப் பெறுநர்கள்




**1. கலாபூசணம் தி. ஞானசேகரன் ஐயர் J.P அவர்கள்**

ஆக்க இலக்கியங்கள் படைத்து ஈழத்து இலக்கியவானின் தனிமுத்திரை பதித்து எமது மண்ணுக்குப் பெருமை சேர்த்து வருபவர். இப்பாடசாலையின் பழைய மாணவர்.




**2. திரு.ஆ. துரைராசா அவர்கள்**

30 ஆண்டுகளுக்கு மேலாக இப்பாடசாலையின் பாடசாலை அபவிருத்திச் சங்கத்தின் செயலாளராகவும், உறுப்பினராகவும், இருந்து அயராது உழைத்து வருபவர். இப்பாடசாலையின் பழையமாணவர்.



**3. திரு.செ. செல்வரத்தினம் J.P அவர்கள்**

அயற்கிராமமான ஈவினையைச் சேர்ந்தவர். இன்றைய அதிபரது செயற்பாடுகளுக்கு தோன்றாத் துணையாக இருப்பவர். இப்பாடசாலையின் அபிவிருத்திச் சங்க உபசெயலாளர்.



**4. திரு.க. தர்மலிங்கம் J.P அவர்கள்**

நீர்வேலியைச் சேர்ந்த இவர் “எல்லா மக்களும் எனது மக்களே” என்ற கொள்கையுடையவர். தன்னொத்த இயல்பினருடன் சேர்ந்து சமூகப்பணி புரிபவர். இப்பாடசாலையின் அபிவிருத்திச் சங்க உறுப்பினர்.

# திருவள்ளுவர் சிலை




இப்பாடசாலையின் ஆசிரியராகவும், பதில் அதிபராகவும்
கடமையாற்றிய அமரர்.க. சோமசுந்தரம் நினைவாக
அன்னாரது குடும்பத்தினர் வழங்கிய
நினைவு அன்பளிப்பு

# பிறந்த மண்ணுக்குப் பெருமை சேர்த்துவரும் கலாபூசணம் தி. ஞானசேகரன் ஐயர் அவர்கள்

*திரு. ம. துஸ்யந்தன்*



தமிழ் இலக்கிய உலகில் தனித்துவமான சேவைகளை ஆற்றி வித்துவ சிரோமணி கணேசையர் எமது கிராமத்துக்குப் பெருமை சேர்த்துக் தந்த பேரறிஞர் ஆவார். அவரது வழி பற்றி இன்று இத்துறையில் தனித்துவமான முத்திரை பதித்து நிற்பவர் கலாபூசணம் தி. ஞானசேகரன் அவர்கள். இவரது இலக்கியப்பணி பல பரிமாணங்களைக் கொண்டது. சிறுகதை, நாவல், விமர்சனம், கட்டுரை முதலான எல்லா இலக்கிய வகைகளிலும் ஆக்க இலக்கிய கர்த்தாவாக திகழ்கின்றார்.

இவரது முதலாவது சிறுகதைத் தொகுதியான கால தரிசனம் 1973 இல் வெளிவந்தது. இவரது நாவல்களில் புதிய சுவடுகள் (1977) குருதிமலை (1979) என்பன இலங்கை அரசின் சாகித்திய மண்டலப் பரிசைப் பெற்றன. அவரது இலக்கியப் படைப்புகளிற் சில பல்கலைக்கழகப் பாட நூல்களாக உள்ளன. 'ஞானம்' என்னும் கலை இலக்கிய, மாதாந்த ஏட்டினைத் தானே ஆசிரியராகவிருந்து வெளியிட்டு வருகிறார். 63 ஆவது ஏடு கடந்த மாதம் வெளிவந்துள்ளது.

எமது மண்ணின் கல்விப் பரம்பரையில் தோன்றிய இவ்விலக்கிய வித்தகர் இந்தப் பாடசாலையின் பழையமாணவர். இளமைப் பருவத்திலேயே சமூக ஈடுபாடு கொண்டு புன்னாலைக்கட்டுவன் கணேச சனசமூகநிலையத்தில் இணைந்து கொண்டு செயற்குழு உறுப்பினர், செயலாளர், நூலகர் எனப் பல பதவிகளைப் பொறுப்பேற்றுச் சீரிய சேவைகளை ஆற்றியவர்.

1962 இல் உயர்கல்வி பெறுவதற்காக ஞானசேகரன் அவர்கள் கொழும்பு சென்றனர். மருத்துவத் தொழில் புரிந்த அவர் மிக நீண்டகாலம் மலையத்திலே வசித்துவந்தார். கடந்த இரு தசாப்தங்களாக நடைபெற்ற உள்நாட்டுப் போரும் எம் ஊரோடான அவரது தொடர்வுகளுக்குத் தடைக்கல்லாகியது. ஆயினும் தான் தவழ்ந்த மண்ணை அன்னார் என்றும் மறந்திருக்கவில்லை. அவர் எழுதிய முதல் நாவலான புதிய சுவடுகள் எமது கிராமத்தையே பகைப்புலமாகக் கொண்டது. அவரது பல சிறுகதைகளும் எமது மண்வாசனையை வீசுவனவாக உள்ளன.

எமது கிராமத்தில் ஞானசேகரன் செய்த மகத்தான பணிகளில் ஒன்று 1983 இல் வித்துவசிரோண்மணி கணேசையருக்கு சித்தி விநாயகர் ஆலய வளாகத்தில் சிலை நிறுவுவதில் தனது மாமனாரோடு முக்கிய பங்காளியாக நின்று செயற்பட்டமையாகும்.

எமது சிறார்களுக்கென சிறந்த ஒரு முன்பள்ளியை அமைக்க வேண்டுமெனக் கணேச சனசமூ நிலையத்தினர் முடிவு செய்த போது, அதற்கான காணி ஒன்றினை ரூபா ஒரு லட்சத்துக்குக் கொள்வனவு செய்து உதவிய பெருந்தகையாளர் இவர். இவரது கலை இலக்கிய சேவைகயைப் பாராட்டி இலங்கை அரசு 'கலாபூசணம்' விருது வழங்கிக் கௌரவித்துத்துள்ளது.

# கிளி



கிளி பச்சை நிறம்.
கிளி கீக்கீ என்று கத்தும்.
கிளியின் சொண்டு சிவப்பு.
கிளி பழங்கள் சாப்பிடும்.
கிளி அழகான பறவை.

***கு. பார்த்தீபன்***

***தரம் – 1***

# எமது பாடசாலை



எமது பாடசாலையின் பெயர் : யா/புன்னாலைக்கட்டுவன் அரசினர் தமிழ்கலவன் பாடசாலை.
எமது பாடசாலை அதிபரின் பெயர் : திரு. சி. மணியம்.
எமது பாடசாலையில் தரம் 1 முதல் 9 வரை வகுப்புகள் நடைபெறுகின்றன.
எது பாடசாலையில் 300 மாணவர்கள் கல்வி கற்கிறார்கள்.
எனது பாடசாலையில் 15 ஆசிரியர்கள் கல்வி கற்பிக்கின்றனர்.

***யதுர்ஷா***

***தரம் – 2***

## மிகச்சிறிய பறவை

- *உலகிலேயே மிகவும் சிறிய பறவை கியூபா நாட்டைச் சேர்ந்த "பீஹம்மிங்" பறவையாகும்.*
- *அலகு முதல் வால்வரையிலான இதன் நீளம் 57 மில்லிமீற்றர் மட்டுமே. நிறை 16 கிராம்.*
- *இது தன் சிறகை அசைத்துப் பறப்பதும் மலர்களில் இருந்து தேன் உறிஞ்சுவதும் அற்புதக் காட்சி ஆகும்.*

15120

## உங்களுக்குத் தெரியுமா?

01) எட்டு மாதங்கள் தொடர்ந்து பறக்கும் பறவை எது? **சூட்டி டெர்ன்**

02) சுவாசிக்காமல் உயிர் வாழும் ஒரே இனம் எது? **ஈஸ்ட்**

03) பாதரச தெர்மா மீற்றரைக் கண்டுபிடித்தவர் யார்? **பாரன்கீட்**

04) நீலநிறமாகக் காட்சியளிக்கும் கிரகம் எது? **நெப்டியூன்**

05) இலங்கையின் ரயர் தொழிற்சாலை அமைந்துள்ள இடம் எது? **களனி**

06) இலங்கையின் நிலக்கரி கிடைக்கும் இடம் எது? **முத்துராஜவெல**

07) 12 ஆண்டுக்கு ஒருமுறை மலரும் குறிஞ்சி மலரின் நிறம் என்ன? **நீலம்**

08) மழைநீரிலுள்ள விட்டமின் சத்து எது? **விட்டமின் பி$_{12}$**

09) செவ்வாய், சுக்கிரன் கிரகங்களிற்கிடையே உள்ள கிரகம் எது? **பூமி**

10) இலங்கைப் பாராளுமன்றத்திற்குத் தெரிவான முதல் பெண்மணி யார்? **புளோரன்ஸ் சேனநாயக்கா**

11) இலக்கம் 13ஐ அதிர்ஷ்ட எண்ணாக கருதும் நாடு எது? **இத்தாலி**

12) இலங்கையின் இயற்கைத் துறைமுகம் அமைந்துள்ள இடம் எது? **திருகோணமலை**

13) இலங்கையின் சர்வதேச விமானநிலையம் எது? **கட்டுநாயக்கா**

16) இரவு நேரத்தில் மிகவும் பிரகாசமாகத் தெரியும் கிரகம் எது?**வீனஸ் (சுக்கிரன்)**

17) விட்டமின் A,B,D க்களைக் கண்டுபிடித்தவர் யார்? **வி. மெக்காலோம்**

18) இலங்கையின் சர்வஜன வாக்குரிமை வழங்கப்பட்ட ஆண்டு யாது? **1931**

19) இலங்கை தேசியகீதத்தை இயற்றியவர் யார்? **ஆனந்தசமரக்கோன்**

20) உலகின் முதலாவது பெண்பிரதமர் யார்? **ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா**

*செல்வி. செ. சத்தியா*
*தரம் – 3*

# வாழ்க்கையின் வழிகளே பிள்ளையின் கல்வியாம்



- கண்டனத்திடையே வாழும் பிள்ளை கண்டனம் செய்யவே கற்றுக் கொள்ளும்.
- பகைமையினிடையே வாழும் பிள்ளை பலரையும் எதிர்க்கப்பழகிக் கொள்ளும்.
- கேலிகளிடையே வாழும்பிள்ளை வெட்கமும், நாணமும் கொள்ளப் பழகும்.
- பொறாமையினிடையே வாழும் பிள்ளை குற்றுணர்வு கொண்டிடப் பழகும்.
- சகிப்புச் சூழலில் வாழும்பிள்ளை பொறுமையுணர்வினால் போற்றப்படும்.
- ஊக்குதலிடையே வாழும்பிள்ளை தன்னம்பிக்கை தான் கொள்ளப் பழகும்.
- பாராட்டுச் சூழலில் வாழும் பிள்ளை நயக்கும் திறமையை நன்கு வளர்க்கும்.
- நீதியின் வழியே வாழும் பிள்ளை நியாய புத்தியைக் கற்றுக் கொள்ளும்.
- காப்புணர்வுடன் வாழும் பிள்ளை விசுவாத்தினை விளங்கிக் கொள்ளும்.
- ஒப்புதலிடையே வாழும் பிள்ளை தன்னை மதிக்கும் தன்மையிற் சிறக்கும்.
- மற்றையோர் மதித்திட நட்பில் வாழும் பிள்ளையே இப்புவி தன்னில் இரங்குதல் காண்.

(யுனெஸ்கோ வெளியீட்டிலிருந்து திரட்டியது)

***செல்வி. கி. நர்மதா***

## உலகின் மிகப்பெரிய செல்வந்தர் பில்கேட்ஸ்

- *2005ம் ஆண்டிலும் 11வது தடவையாக உலகின் முதலாவது தனிப்பெரும் செல்வந்தராக பில்கேட்ஸ் கணிக்கப்படுகிறார்.*
- *இவர் உலகப் புகழ், கணனி உற்பத்தி நிறுவன உரிமையாளர் ஆவார்.*
- *இவரது மொத்தச் சொத்தின் பெறுமதி 46.5 பில்லியன் அமெரிக்க டொலராகும். இது இலங்கை நாணயத்தின் 450.000 கோடி ஆகும்.*

# புலமைப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள்



தி. துளசிகா
2002



இ. சசிரேகா
2003



தி. சுதர்ஷினி
2003



ஜனோபா
2004



சி. சரணிகா
2004



உ. நிசாந்தன்
2004



பவளவிழா மலர்க்குழுவினர்



பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர்

15120

# மான்கள் சொல்லும் கதைகள்



மான்கள் பிராணிகளிலேயே சற்று வித்தியாசமானவை; அழகானவை; மானின் உடலில் உள்ள அழகான புள்ளிகள் அதன் வடிவான குட்டிக்கண்கள், பார்ப்போரை வரவேற்பது போல வரிந்து பின் ஒடுங்கி வளைந்து நிற்கும் அதன் கொம்புகள், அது ஓடும் போது கம்பிபோல் பலமாக நிற்கும் அதன் வால் எல்லாமே பார்த்ததும் பரவசமூட்டும் அழகுகள். மான்களிலே மூஸ் என்ற இனம் தான் மிகவும் பெரியது. இது சுமார் இரண்டரை மீற்றர் வரை உயரமாக இருக்கும். மிகச் சிறிய மான்கள் சிலி நாட்டிலேயே அதிகம் வாழ்கின்றன. இவை சுமார் 30 செ.மீ உயரம் உள்ளவை.

"கஸ்தூரி மான் குட்டியாம்" என்று தொடரும் ஒரு பாடல் கூட நமக்குத் தெரியும். கஸ்தூரி புள்ளிமான் கவரிமான், கரிபோ பனிமான், செம்மான், காம்பர், யாரா, கிருங்கம் முதலியன முக்கிய இனங்களாகும். ஆடு, மாடுகளைப் போன்று மானும் அசைபோடக் கூடிய பிராணியாக இருந்தாலும் அவற்றிலிருந்து மான் சற்று வித்தியாசமானது. புல் இலைகளை உண்பதோடு இளம் தளிர்களை விரும்பி உண்ணும். நிறையச் சாப்பிடும் இயல்புடையவை பெரும்பாலும் நீர் நிலைகளையண்டிய பிரதேசங்களிலேயே உயிர் வாழும். பசுமையான நிலப்பரப்புகளில் இன்பமாக காலம் கடத்தும். பகை விலங்குகள் பாசாங்கு புரிவதையும் பதுங்கிக் கொண்டு தூரத்தில் வைத்தே துல்லியமாக அறிந்து கொள்ளும் இயல்புடைய மான்கள் பகை விலங்குகள் பக்கத்திற்கு வந்துவிட்டாலும் பாய்ந்தோடித் தப்பித்து விடும். ஆண் மான்களிடம் ஒரு சிறப்பம்சமுண்டு என்னவென்றால் அவற்றிற்குத் தலையிலே கொம்புகள் இரண்டு இருக்கும். பனிமான், நீர்மான் போன்றவற்றில் பெண்மான்களும் கொம்புடன் திகழும். புள்ளி மான்களுக்கு கொம்புகள் கிடையா. மரத்தின் கிளைகளைப் போலத்தான் மானின் கொம்புகளும். ஆயுள்கெட்டி வருடந்தோறும் உதிர்ந்தது மீண்டும் முளைக்கும். மான் முதுமையுடைய கொம்புகளின் வளர்ச்சி குறைந்து கொண்டே போகும். மான் கொம்புகளில் பாம்புக் கடிக்கான மருந்துகள் உண்டு. உரிய காலத்தில் கொம்புகள் உதிர்ந்து போகத் தவறினால் மரங்களில் முட்டியேனும் உடைத்து விடும். மானின் அழகான கொம்புகள் சில நேரம் அழிவையும் தேடிக்கொடுப்பது உண்டு. பகை விலங்குகளுடன் சண்டை போடும் போது கொம்பு சிக்கி வாழ்க்கையே சிக்கலாகிவிடும். பெண்மான் குட்டி ஒரு வருடம் தாயிடம் பால் குடித்த பின்பு தனி வாழ்க்கையை ஆரம்பித்து விடும். ஆண்குட்டிகள் அதைவிட இரண்டு மாதங்கள் முன்னரே பிரிந்து விடும். மான்களிலே மிகவும் அழகானவை புள்ளி மான்தான். இவை நமது நாட்டில் தான் அதிகம் செறிந்து வாழ்கின்றன. இந்தியாவில் ஓரளவு வாழ்கின்றன. இந்தியாவின் காஸ்மீர் மாநிலத்தில் வாழும் கஸ்தூரி மான்களின் வயிற்றிற்கு அருகில் கஸ்தூரி எனப்படும் வாசனை பொருள் சுரக்கும் மான்கள் பெரும்பாலும் 10 ஆண்டுகளுக்கு மேல் வாழ்வதில்லை. பகை விலங்குகள் அதற்கிடையில் பதம் பார்த்து விடுகின்றன.

*செல்வன் ப. கஜீபன்*
*தரம் – 5*

# ஒலிம்பிக்கின் தோற்றமும் வளர்ச்சியும்

- இற்றைக்கு 2500 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த கிரேக்க மக்கள் ஒலிம்பியா என்ற சமவெளியில் நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை விழா எடுத்தனர். இதுவே பின்னர் ஒலிம்பிக் ஆட்டமாக பரிமாணமடைந்தது.

- கி.பி 394 இல் ரோம் மன்னனால் இது தடை செய்யப்பட்டு அன்று முதல் 1500 ஆண்டுகளுக்கு இவ் ஒலிம்பிக் நடைபெறாமல் நின்றுவிட்டது.

- தொல்பொருள் ஆய்வாளர்கள் 1878இல் ஒலிம்பிக் விளையாட்டு அரங்கொன்றை அகழ்ந்தெடுத்தனர். இதனைத் தொடர்ந்து ஒலிம்பிக் ஆட்டங்களைப் புதுப்பிக்க வேண்டுமென ஓர் இயக்கம் தோன்றி 1894 இல் சர்வதேசமாநாடு ஒன்று நடத்தப்பட்டு ஒலிம்பிக் ஆட்டக்குழு (I.O.C) அமைக்கப்பட்டது. தற்கால ஒலிம்பிக் ஆட்டத்தின் முதல் விழா 1896 இல் கிரேக்க நாட்டிலுள்ள எதென்ஸ் நகரில் நடத்தப்பட்டது. அன்று முதல் வெவ்வேறு நாடுகளில் நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை ஒலிம்பிக் நடைபெற்று வருகிறது.

- ஒலிம்பிச் சின்னம், இணைந்த 5 நிற வளையங்கள் இவை ஒலிம்பிக் கலந்து கொள்ளும் 5 கண்டங்களையும் குறிக்கும்.

- இன்னும் விரைவாக இன்னும் உயர்வாக, இன்னும் சக்தியாக (Etius, Altuus, Fortius) இதுவே ஒலிம்பிக்கின் தாரக மந்திரமாகும்.

- 1916, 1940, 1944 இல் உலக மகாயுத்தம் காரணமாக ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறவில்லை.


- 2000 ஆம் ஆண்டு 27 ஆவது ஒலிம்பிக் அவுஸ்ரேலியாவின் சிட்னி நகரில் நடைபெற்றது.

- 2004 இல் ஒலிம்பிக் போட்டி கிரேக்கத்தின் எதென்ஸ் நகரில் நடாத்தப்பட்டது.

- மேலும் 2008 இல் சீனாவிலும், 2012 லண்டனிலும் நடாத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

*செல்வன் மு. கஜன்*
*தரம் – 5*

# காலைக்காட்சி



இயற்கை காட்டும் இன்பக் காட்சிகளில் காலைக் காட்சியும் ஒன்றாகும். வைகறைப் பொழுதில் சூரியனை வரவேற்பது போலச் சேவல் கூவும். காகம் கரையும். குளங்களில் தாமரை மலர்களும் வேறு மலர்களும் மொட்டு விரிந்து தமது மகிழ்ச்சியை சூரிய நாயகனுக்குத் தெரிவிக்கும்.

சோலையில் குருவிகள் கீச்சிடும். பறவைகளும் விலங்குகளும் இரைதேடச் செல்லும். ஆலயமணி “கணீர் கணீர்” என ஒலி எழுப்பும்.

விவசாயிகள் விறுவிறு எனத் தங்கள் தோட்டத்திற்குச் செல்வார்கள். சந்தையை நோக்கிப் பொருள்கள் ஏற்றப்பட்ட வண்டிகள் கட, கட என விரைந்து செல்லும். இல்லத்தரசிகள் தமது இல்லங்களைத் தூய்மைப்படுத்தி விரைவாக உணவு சமைப்பார்கள். மாணவர்கள் பாடசாலைக்குச் செல்ல, பெரியோர்கள் தங்கள் தங்கள் நிறுவனங்களுக்குச் செல்வார்கள். உறங்கி இருந்த உலகம் சுறுசுறுப்பாக இயங்கத் தொடங்குகிறது. உலகம் எங்கும் சூரியனின் பொற்கதிர்களின் ஒளிப் பிரவாகம் உயிரினங்கள் யாவற்றுக்கும் கிடைக்கும் காலை வேளை மனமகிழ்ச்சியும் உற்சாகமும் தரும் ஒரு பொன்னான வேளை ஆகும்.

***செல்வி. சி. மதியா***
***தரம் – 6***

## மிர் விண்வெளி ஆய்வு மையம்

- *இது 1986 பெப்ரவரி 19ம் திகதி ரஷ்ய விஞ்ஞானிகளால் விண்ணிற்கு அனுப்பி வைக்கப்பட்டதில் இருந்து சுமார் 15 வருடங்களாக செயல்பட்டு 2001 மார்ச் 28ல் தனது சேவையை முடித்துக் கொண்டு பசுபிக் சமுத்திரத்துள் வீழ்ந்தது.*
- *“மிர்” பூமியை 86,328 முறை சுற்றி வந்துள்ளது.*
- *மிர் விண்ணாய்வு மையத்தில் பல நாட்டு விண்வெளி ஆய்வாளர்கள் பலகாலம் தங்க வரலாற்று முக்கியத்துவமான கண்டுபிடிப்புக்கள்; ஆய்வுகளை நிகழ்த்தியுள்ளனர்.*
- *இதில் சுமார் 31 விண்கலங்கள் தரையிறங்கியுள்ளன.*
- *மிர் விண்ணாய்வு நிலையத்திற்கு 17 விண்வெளிப் பயணம் நிகழ்ந்துள்ளன.*
- *இதுவரை 12 நாடுகளின் சுமார் 125 விண்வெளி வீரர்கள் இங்கு விஜயம் செய்துள்ளனர்.*

# திருக்குறளின் பெருமை



இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் தமிழ் கூறும் நல்லுலகில் இயற்றப்பட்ட தமிழ் நூலே திருக்குறளாகும். வையத்துள் வாழ்வாங்கு வாழும் நெறிமுறையைக் கூறும் உலகப் பொதுமறையாகப் போற்றப்படுவதும் இத்திருக்குறளேயாகும். திருக்குறள் தமிழ்மொழிக்கும் தமிழர் இனத்துக்கும் அழியாப் பெருமை தேடித்தந்ததென்றால் அது மிகையாகாது.

திருக்குறளை இயற்றியவர் திருவள்ளுவர் எனும் தெய்வப் புலவராவர். இவர் சங்கத் தமிழ்ப்புலவர்கள் காலத்தே வாழ்ந்து நன்மக்களைப் பெற்று இல்வாழ்வில் இனிதே வாழ்ந்த புலவராவர். அழியாப் புகழ் கொண்ட திருக்குறளை இயற்றியதால் இவர் தெய்வப் புலவர், செந்நாப்போதர் என்ற சிறப்புப் பெயர்களால் அழைக்கப்பட்டார். திருக்குறள் என்ற குறும்பா அடிகள் இரண்டினைக் கொண்டு அற்புதமான கருத்துக்களை கூறும் தமிழ் வேதம் என்றும், உலகப் பொது மறை என்றும் உலகத்தோரால் ஏற்றிப் போற்றப்படும் நூலாகத் திகழ்கின்றதை நாம் காணக்கூடியதாக உள்ளது.

திருக்குறள் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் எனும் மூன்று பிரிவுகளைக் கொண்டது. ஒவ்வொன்றும் பத்துக் குறள்களைக் கொண்ட 133 அதிகாரங்களைக் கொண்டது. 1330 குறட்பாக்களைக் கொண்ட திருக்குறளில் முதலாவது குறள் "அகர முதல எழுத்தெல்லாம் ஆதி பகவன் முதற்கே உலகு" என மொழியை இறைபக்தியுடன் இணைத்துச் செல்கிறது. திருக்குறளின் கருத்து, சொல்லாட்சி இவற்றைத் தொட்டுச் செல்லாத தமிழ்ப் புலவர்களே இல்லை எனலாம்.

"வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான் புகழ் கொண்ட தமிழ் நாடு" எனப் பெருமைப்படுகிறார் மகாகவி பாரதியார். "கடுகைத் துளைத்து ஏழ் கடலைப் புகட்டி குறுகத் தறித்த குறள்" என குறளின் கருத்துக் கனத்தை தெளிவுறுத்துகிறார். இடைக்காடர் என்ற புலவர்.

முற்காலத்தில் தோன்றிய திருக்குறள் தற்கால உலக மாந்தர் தம்வாழ்வுக்கும் வழி காட்டுவதாக அமைந்துள்ளது மட்டுமல்லாது எதிர்காலத்து மாந்தர் தம் வாழ்விற்கும் வழிகாட்டும் ஆற்றல் கொண்டுள்ளதை எவரும் மறுக்கமாட்டார்கள். ஒரு இனத்துக்கோ, மதத்திற்கோ சார்பாக இல்லாது உலக மாந்தர் எல்லோருக்கும் பொதுவாக உள்ளதால் திருக்குறளை உலக மொழிகளில் மொழிபெயர்த்து வெளியிட்டுள்ளார்கள்.

"வாழ்க திருக்குறள். வளர்க அதன் பெருமை"

*செல்வி. பா. ஜொய்ஸி*
*தரம் – 7*

# தந்தை, தாய் பேண்

உலகிலே மனிதர்களாகப் பிறந்த ஒவ்வொரு ஜீவன்களும் தாய் தந்தையரைப் பேணிக் காக்க வேண்டும். "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்". அதாவது எந்தவொரு உயிராக இருந்தாலும் அந்த உயிர் இந்த மண்ணிலே பிறக்கின்ற போது அம்மா, அப்பா என்போரையே முதன் முதலில் அறிகின்றது. தாய் தந்தையைப் பேணிக்காக்க வேண்டுமென்று தமிழ் இலக்கிய நூல்களிலும், சமய நூல்களிலும் மிகவும் சிறந்த முறையில் நாம் கற்றுக் கொள்கின்றோம். வானுக்கு இரண்டு தீபங்களாக அமைபவை சூரியனும் சந்திரனுமே ஆகும். அதே போன்று மனிதர்களாகிய எமக்கு அணையாத் தீபமாக அமைபவர்கள் தாயும் தந்தையுமேயாவர். இன்றைய மனிதர்களில் நூற்றுக்கு எழுபத்தைந்து வீதமானோர் தாய், தந்தையரைப் பேணி வருகின்றார்கள். மீதி இருபத்தைந்து சதவீதமான மனிதர்கள் தாய், தந்தையரைப் பேணிக் காப்பது கிடையாது என்றே கூற முடியும்.

சில மனிதர்கள் தாய் தந்தையரின் சிறப்புக்களை வெளிக் கொண்டுவரும் பாடல்கள், கவிதைகள் என்பவற்றை வாசிப்பார்கள், விரும்பிக் கேட்பார்கள். ஆனால் அந்த மனிதர்கள் தாய், தந்தையரை முழுமையாகப் பேணிக் காத்துக் கொள்வது கிடையாது. உலகிலே எல்லாத் தாய் தந்தையரும் தாம் பெற்றெடுத்த செல்வங்களை நன்றாகக் கற்பிக்க வேண்டும், அவர்களை அவர்களின் இலட்சியக் கனவுகள் நிறைவேற்ற வேண்டும் எனக் கற்பனைக் கனவுகள் காண்பார்கள். சில மனிதர்கள் அதனை நிறைவேற்றி விடுகின்றார்கள். சில மனிதர்கள் அவர்கள் கண்ட கற்பனைக் கனவுகளை சின்னாபின்னமாகச் சிதைவடையச் செய்துவிடுவார்கள். இவ்வாறு இந்த உலகிலே பல நன்மைகளும் தீமைகளும் நிகழ்ந்து வருகின்றன.

எந்த மனிதனும் பத்து மாதம் சுமந்து பகல் இரவாகச் சீராட்டிப் பாராட்டித் தனது உதிரத்தை பாலாக்கிய அன்னையின் கடனை ஏழு ஜென்மங்கள் எடுத்தாலும் தீர்த்துக் கொள்ளமுடியாது. தாய், தந்தையரை நாம் சிறந்த முறையில் பேணிக்காக்க வேண்டும். எம் வாழ்வில் ஒளிவீசும் நிலவு போன்று இருக்கும் எம் தாய் தந்தையரை நாம் இறக்கும் வரை அவர்களது தேவைகளை அறிந்து உதவி செய்யப் பழக வேண்டியது கடமையாகும். இதன் மூலம் அவர்களை மகிழ்ச்சிப்படுத்த வேண்டும்.

எனவே ஆறு அறிவு படைத்த மனிதர்களாகிய நாம் ஒவ்வொருவரும் எமது பெற்றோர்களைப் போற்றி அவர்களுக்குக் கிடைத்த அரும்பெரும் செல்வமாகத் திகழ்ந்து அவர்களின் இறுதிக்காலம் வரை பணிபுரிந்து மென்மேலும் அவர்களின் ஆசியைப் பெற்று அவர்களைப் பேணிக்காத்து நலமாக வாழ்வோம்.

*செல்வி. கு. பிரபாஜினி*
*தரம் – 8*

# எல்லாப் பிள்ளைகளுக்கும் கல்வி

கல்விதான் ஒருவனைப் பூரண மனிதனாக்குகிறது. கல்விதான் மனிதனை மனிதப் பண்புகளோடு வாழவைக்கிறது. கல்வி ஒன்றே இவ்வுலகிலும் எவ்வுலகிலும் அழியாத செல்வமாகத் திகழ்கிறது. எனவே தான் கல்வி இன்று உலகில் எல்லோருக்கும் அத்தியாவசியமானதாகக் கட்டாயமான ஒன்றாகக் கருதப்படுகிறது.

உலக நாடுகள் பலவற்றில் இன்று அமைதியின்மையும் பெரும் கிளர்ச்சிகளும் அதிகரித்து காணப்படுகின்றன. சமூகங்களுக்கிடையே பிரிவினையும், சந்தேகமும், வன்முறையும் வளர்ந்து வருகின்றன. இத்தகைய விபரீத நிலைகள் ஏற்படுவதற்குக் காரணம் எது? என ஆராய்ந்த அறிஞர்கள் கல்வியின்மை தான் காரணம் என்கிறார்கள். கல்வி எல்லோருக்கும் சீராக, சமமாகக் கிடைக்காத காரணத்தால் தான் இன்று உலகே அமைதியின்றித் தவிக்கிறது.


ஒரு நாட்டின், சமூகத்தின் எதிர்காலம் இன்றைய பிள்ளைகளிடம் தான் உருவாகிறது. சமூகத்தில் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்துப் புரிந்துணர்வுடன் மற்றவர்களுடன் வாழத் தெரிந்தவனே கற்றவனாவான். இத்தகைய பண்பினால்தான் சமூக அமைதி எதிர்காலத்தில் ஏற்படும். அதுவே முழு நாட்டினது அபிவிருத்திக்கும் மக்கள் விழுமிய உயர்விற்கும் வழிசமைக்கும். எனவே தான் நாளைய நற்பிரஜைகளான இன்றைய பிள்ளைகள் எல்லோருக்கும் கல்வி மிக அவசியமாகிறது.

உலகத்தில் எல்லாக் காலங்களிலும் கல்வி கற்றவர்கள், கல்வியில் சிறந்த அறிஞர்கள், மேதாவிகள் எனப் பலர் வாழ்ந்து சமூகத்துக்குச் சேவை செய்து இருக்கிறார்கள். ஆயினும் என்ன? சமூகப் பிரச்சினைகள் தீர்ந்தனவா? ஒரு சிலர் கல்வி பெறுவதனால் இச்சமூகம் உயரப்போவதில்லை. சமூகத்தில் வாழும் எல்லோரும் கல்வி பெற்றவர்களாக இருந்தால் தான் சமூகம் இயல்பாக்கம் அடைந்து வாழத் தெரிந்த சமூகமாக உருவாகும். சமூகத்தில் செல்வம் இல்லாவிட்டாலும் கல்வி இருந்தால் எந்தப் பிரச்சினையையும் எதிர்க்கொள்ளும் திறன் உள்ளவர்களாக நாம் வாழலாம். கல்வியே ஒருவனை உயர்நிலைக்கு இட்டுச் செல்லும் கருவி. அதனால் தான் சங்ககாலச் சான்றோர் "கற்கை நன்றே கற்கை நன்றே பிச்சை புகினும் கற்கை நன்றே" என கூறி வைத்தார்கள்.

இன்று சமூகத்தில் சிறுவயதில் உள்ளவர்கள் எல்லோருக்கும் கல்வி என்னும் கருப்பொருளின் செயலூக்கம் அதிகரித்து வருகிறது. எமது நாட்டில் எல்லோருக்கும் கல்வி எனும் கருதுகோள் பல காலங்களுக்கு முன்பே தோன்றிவிட்டது. C.W.W கன்னங்கரா அவர்களால் இலவசக் கல்வி முறை கொண்டுவரப்பட்டது. இது மேலும் வலுப்பெற இலவசச் சீருடை, இலவசப் பாடநூல், இலவச சத்துணவு வழங்கல் என வழங்கப்பட்டுள்ள சேவைகளால் எல்லோருக்கும் கல்வி பெற வாய்ப்புக்கள் அதிகரித்தன. மேலும் புதிய கல்வித்திட்டத்தில் கட்டாயக் கல்விமுறையும் புகுத்தப்பட்டுள்ளது. இதன்படி 14 வயதிற்கு உட்பட்ட எல்லா பிள்ளைகளும் கட்டாயமாகப் பாடசாலைக்குச் செல்ல வேண்டும். இல்லையேல் அவர்களது பெற்றார், பாதுகாவலர் மீது



திருவள்ளுவர் சிலை திறப்புவிழா நாளில் பிரதமவிருந்தினர்
M.K. சிவாஜிலிங்கமும், சிலை வடித்த "ஓவியமணி"
செ. வரதராஜனும் வரவேற்கப்படுகின்றனர்



புதிய கட்டிடத்திறப்பு விழாவின் போது பிரதமவிருந்தினர்
பொறியியலாளர் சி. சிவபாலனும், உடுவில் கோட்டக்கல்விப்
பணிப்பாளர் செ. குபேரநாதனும் வரவேற்கப்படுகின்றனர்.


# கிடைக்கப்பெற்ற இப்பாடசாலையின் முன்னாள் அதிபர்களது படங்கள்



P. வேலுப்பிள்ளை




அ. முதலித்தம்பி



க. தங்கராசா



க. சோமசுந்தரம்
(பதில் அதிபர்)



ச. பொன்னம்பலம்



சி. சிவகுமார்

சட்டநடவடிக்கை எடுக்க வழி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இத்தகைய நடவடிக்கைகளால் சிறுவர்கள் வேறு தொழில்களில் ஈடுபடுத்தப்படுவது வெகுவாக குறையுமென எதிர்பார்க்கப்படுகிறது. அண்மைக் காலத்தில் எமது நாட்டில் குறிப்பாக வடக்கு, கிழக்கு வாழ் மக்களிடையே கல்வி பெறும் சந்தர்ப்பங்கள் மறுக்கப்பட்டு வருகின்றன. போரும் அமைதியற்ற சூழ்நிலையும், இடப்பெயர்வும் குடும்பங்களின் பேரழிவுகளும், கல்விக் கூடங்களில் பிள்ளைகளிடம் இடைவிலகல், கல்வியில் ஊக்கமின்மை போன்ற தீமைகள் அதிகரித்துக் காணப்படுகின்றன. கல்வியில் பொறுப்பானவர்களின் பாராமுகமும் பாரபட்சம் காட்டும் தன்மைகளும் இவற்றுக்கு மேலும் காரணிகளாகின்றன.

எனவே எதிர்கால சமூகம் உயர்வானதாகவும் தனிப்பட்ட ஒவ்வொருவரின் வாழ்வு வளமானதாகவும் அமைய வேண்டுமாயின் எல்லோருக்கும் கல்வி, எல்லா பிள்ளைகளுக்கும் கல்வி என்ற நிலை மேம்படுத்தப்பட்டு சகல தரப்பாளர்களாலும் இக்கொள்கை முன்னெடுக்கப்பட வேண்டுமெனலாம்.

சமூகத்தில் எந்தமூலை முடுக்குகளிலும் வாழும் வறிய பிள்ளைகள் எல்லோருக்கும் கல்வி கிடைக்கும் போதே உண்மையில் எல்லோருக்கும் கல்வி என்ற செயற்பாடு நிறைவானதாகும்.

*செல்வி. இ. கனிதா*
*தரம் – 9*

## எமது அதிபர்கள் அன்றிலிருந்து இன்றுவரை

| தொ இல | | பெயர் | சேவைக்காலம் |
|---|---|---|---|
| 01. | திரு. | C. K. காசிநாதர் | 1927 - 1931 |
| 02. | திரு. | V. கணபதிப்பிள்ளை | 1931 - 1933 |
| 03. | திரு. | A. W. முருகேசு | 1933 - 1942 |
| 04. | திரு. | P. வேலுப்பிள்ளை | 1942 - 1951 |
| 05. | திரு. | K. சிவகுரு | 1951 - 1953 |
| 06. | திரு. | A பொன்னையா | 1953 - 1954 |
| 07. | திரு. | S. கார்த்திகேசு | 1954 - 1964 |
| 08. | திரு. | K. கந்தையா | 1964 - 1966 |
| 09. | திரு. | S நடராஜா ஐயர் | 1966 - 1971 |
| 10. | திரு. | A முதலித்தம்பி | 1971 - 1972 |
| 11. | திரு. | S. கனகசபை | 1972 - 1983 |
| 12. | திரு. | K. தங்கராஜா | 1983 - 1991 |
| 13. | திரு. | S. பொன்னம்பலம் | 1991 - 1992 |
| 14. | திரு. | S. சிவகுமார் | 1992 - 2001 |
| 15. | திரு. | S. மணியம் | 2001 - இன்றுவரை |

# "சுத்தவீரன் போரஸ்"

கிரேக்க தேச மன்னன் அலெக்சாண்டர் பல நாடுகள் மீது படையெடுத்துப் போரிட்டு வெற்றியடைந்தவர். அவரை எவராலும் வெற்றி கொள்ள இயலவில்லை. அதன் காரணமாகவே அவரை "மாவீரன்" என்று அனைவரும் போற்றினார்கள். இவ்வளவு வலிமையும் வீரமும் பொருந்திய அலெக்சாண்டரையே எதிர்த்த மன்னர் ஒருவரும் இருந்தார். அவர் தான் போரஸ்மன்னர்.

பல நாடுகளை வென்றுவிட்டு இந்தியா மீது படையெடுத்த போது அவரைத் தைரியமாக சிந்துநதிக் கரையில் எதிர்த்துப் போரிட்ட ஒரே மன்னர் போரஸ் மட்டுமே.

அவரை அலெக்சாண்டர் நேருக்கு நேராகச் சண்டையிட்டு வெற்றிகொள்ள முடியாது போனது. தந்திரமாகவே அவரை வெல்ல முடிந்தது. போரஸ் மன்னரைக் கைது செய்து அலெக்சாண்டர் முன் நிறுத்தினர். இருந்த போதிலும் போரஸின் தைரியத்தை மெச்சிய அலெக்சாண்டர் அவருக்கு உரிய மரியாதை அளிக்க விரும்பினார்.

"வீரரே"! உம்மை நான் எவ்வாறு நடத்த வேண்டும் என விரும்புகிறீர்? நண்பராகவா? அல்லது எதிரியாகவா? என்று வினாவினார்.

அலெக்சாண்டரின் கேள்வியைக் கேட்ட போரஸ் "எதிரியாக நடத்து" என்று கூறினால் தன்னை வெட்டி வீழ்த்திவிடுவார். நண்பனாக நடத்து என்றால் உயிர்ப்பிச்சை கேட்டது போலிருக்கும். என்ன பதில் கூறலாம் என யோசித்து விட்டு "ஒரு சுத்த வீரனை ஓர் சுத்தவீரன் நடத்துவது போல் எம்மை நீர் நடத்திடுக" என்று கூறினான்.

அலெக்சாண்டரின் இடக்கு மடக்கான கேள்விகளுக்குப் புத்திசாலித்தனமாகப் பதிலடி கொடுத்த போரஸின் சாதுர்யத்தை எண்ணி வியந்த அலெக்சாண்டர் அவரைத் தன் நண்பராக ஏற்றுத் தாம் வென்று கைப்பற்றிய போரஸின் நாட்டைத் திருப்பிக் கொடுத்துவிட்டுத் தன் நாடு திரும்பினார். சுத்த வீரனுக்கு எங்கே போனாலும் மதிப்புத்தான்.

*செல்வி. ச. தனுசியா*
*தரம் – 9*

## கண்டுபிடிப்புக்களை அறிவோம்

| கண்டுபிடிப்பு | ஆண்டு | கண்டுபிடித்தவர் |
|---|---|---|
| அணுகுண்டு | 1945 | ஜே.ராபர்ட ஒப்பன் டெய்மர் (அமெரிக்கா) |
| இயந்திரத் துப்பாக்கி | 1718 | ஜேம்ஸ் பக்கின் (பிரிட்டன்) |
| எக்ஸ் கதிர் | 1895 | வில்ஹெல்மகே ராண்ட்ஜங்கன் (ஜேர்மனி) |
| குளிர்சாதனப்பெட்டி | 1850 | ஜேம்ஸ்கரிசன், அலெக்சாண்டர்காட்லின் (அமெரிக்கா) |
| செயற்கை இருதயம் | 1957 | வில்லெம் கோல்ட் (நெதர்லாந்து) |
| தொலைக்காட்சி | 1927 | பி.டி பார்ன்ஸ் வொர்த் (அமெரிக்கா) |
| ஹைட்ரயன் குண்டு | 1952 | எட்வர்டு டெல்லர் (அமெரிக்கா) |

# என்னைப் பெற்ற தாயே



பத்து மாதம் என்னைச் சுமந்து
பாரினிலே பெற்றெடுத்தாய்
சித்தம் குளிர இரத்தப் பாலை
சீராக எனக்களித்தாய்

நித்தம் வாழ்வில் இன்பமுடனே
அன்பாய் என்னை வளர்த்தாய்
வளமோடு நான் வாழ
நாளும் துணை நின்றாய்

பண்பு தந்தாய்
பாசம் தந்தாய்
இன்புடனே நானிருக்க
எல்லாம் செய்தாய்

காலமெல்லாம் நான் சிறக்க
வழிகள் பல சொன்னாய்
கருணை தந்தாய்
கள்ளமில்லா உள்ளம் தந்தாய்

கண்கண்ட தெய்வம் நீயே
என்னைப்பெற்ற தாயே
உன்னைப் பேணிக்
காப்பது எனது பெரும் பணியே.

**செல்வி. இ. நதிகா**
**தரம் – 9**

## முதலாவது விண்வெளிச் சுற்றுலாப் பயணி

- *விண்ணிலே சுற்றுலாப் பயணம் மேற்கொள்ளும் விந்தை விஞ்ஞானத்தின் முன்னேற்றப் படிகளில் ஒன்றாகும்.*
- *விண்வெளியில் முதல் சுற்றுப்பயணம் 2001 ஏப்ரல் 28இல் நடைபெற்றது.*
- *முதலாவது விண்வெளி சுற்றுலாப் பயணியாகப் பேறு பெற்றவர் ''டெனிஸ் டிட்டோ'' ஆவார்.*
- *இப்பயணத்தை மேற்கொண்ட விண்கலம் சோயுஸ் விண்கலம். இது கசாக்ஸ்தானில் இருந்து புறப்பட்டது.*
- *இந்த விண்பயணத்திற்கு டிட்டோ செலுத்திய பணம் சுமார் 20 மில்லியன் டொலர்களாகும்.*
- *விண் பயணி ஒருவருக்குச் சாதாரணமாக விண்வெளி வீரர்களுக்கு வழங்கப்படும் எல்லாப் பயிற்சிகளும் வழங்கப்பட்டது.*

# பாடசாலையில் எனது முதல் நாள்

எனக்கு ஐந்து வயது முடிந்த போது பெற்றோர் என்னைப் பாடசாலைக்கு அனுப்ப விரும்பினார்கள். நான் அவர்களுக்கு ஒரே பிள்ளை. அம்மாவை விட்டு ஒரு நாள் கூடப் பிரிந்திருந்து பழக்கமில்லை. வேறு பிள்ளைகளோடும் நான் அதிகம் சேருவதில்லை. கூச்சம் தான் காரணம். இந்நிலையில் நான் பாடசாலைக்கு போவேனா? போனாலும் அழாமல் இருப்பேனா? பிள்ளைகளோடு சேர்ந்து பழகுவேனா? சந்தேகமும் தயக்கமும் எனக்கு மட்டுமல்ல என் பெற்றோருக்கும் தான்.

நான் பாடசாலைக்குப் போகும் நாளும் வந்தது. அம்மா அழகாக அலங்கரித்து அப்பாவுடன் பாடசாலைக்கு அனுப்பி வைத்தார். பாடசாலையை அடைந்தேன். என்னைப் போலப் பல சிறிய பிள்ளைகளும், பெரிய பிள்ளைகளும் அங்கும் இங்கும் ஓடியாடித் திரிந்தார்கள். அவர்களின் முகங்கள் மலர்ந்தன. அழகாகவும், தூய்மையாகவும் உடையணிந்த ஆசிரியர்கள் ஓர் அறையில் உரையாடிக் கொண்டிருந்தனர். எனக்கு அவர்களைப் பார்க்கப் பயமாக இருந்தது. நெஞ்சு படபட என அடித்துக் கொண்டது. கண்கள் கலங்கின.

அப்பா என்னை அதிபரின் அலுவலகத்திற்கு அழைத்துச் சென்றார். அதிபர் என்னை அன்போடு அழைத்து "உமது பெயர் என்ன?" என்று கேட்டார். நான் மெல்லச் சொன்னேன். சில நிமிடங்களில் பாடசாலை தொடங்கியது. அப்பா என்னை வகுப்பில் விட்டார். புதிதாய் வந்த என்னை மாணவ மாணவிகள் வியப்போடு பார்த்தார்கள். எனக்கு அழுகை வந்தது. அடக்கிக் கொண்டேன். வகுப்பாசிரியர் என்னை கையிற் பிடித்து அழைத்துச் சென்று ஆசனத்தில் இருத்தினார். அப்பா "பிள்ளை பயப்படாதே இருந்து படி" என்று சொல்லிச் சென்றார். அப்போது என் அருகில் இருந்தவர்களைக் கவனித்தேன். அவர்களின் சிலர் பாலர் நிலையத்தில் என்னோடு சேர்ந்து படித்தவர்கள். இதனால் சிறிது மனம் ஆறியது. மேலும் ஆசிரியர்கள் அன்பாக எம்முடன் கதைத்தார். இதனால் என் மனதில் இருந்த பயம் கொஞ்சம் கொஞ்சமாக விலகியது. அன்றைய தினம் மகிழ்வுடன் முடிவுற்றது.

*செல்வன். இ. ஹேமரூபன்*

*தரம் – 4*

15120

# MY BEST FRIEND

My best friend is Priya Sivanesan. She is fair and fat. She is a clever Student. Priya likes reading books and collecting stamps. We go to School together every day. We go to School by bus. She is very pretty. She is the only child to her parents. Her Father works in Kandy as an engineer. Priya's favourite subject is English. She can dance and sing. She lives in a big house.

***K. Kajanthan***
***Grade 3***

# TSUNAMI

Tsunami is a Japanese word. On the 26th of December, 2004 Srilanka, Thailand, Indonesia and India were affected by a havoc of Tsunmi. The destruction in Srilanka was estimated to the value of 10,000 million Dollors and in addition to this 40,000 people lost their lives and more than 100, 000 were injured. The people who died and injured were elders, youths and children. Many people were left homeless and many lost their belongings and they were put in temporary refugee camps and schools. A train which was carrying passengers from Colombo to Matara was washed off by the rushing water and most of the people who travelled in that train died. Boats and catamarans tied in the shores along the seaside were either damaged or washed away into the sea along with fishing nets and ropes put inside the boats. It was a very bad disaster, which cannot to tolerated or imagined.

When this message spread all over the world many countries came forward to help us financially medically bodily and willingly and filled the country's needs without showing any signs of disagreement or prejudice. Financial aids are still flowing in, to rebuild the country, the nation together leaving aside race caste or religion. It is very difficult to say whether it is for the good or bad, god sent this Tsunmi. Put lets not challenge the god's disire or his actions.

***P. Nirojan***
***Grade 9***

# MY PET

My Pet is a puppy. The colour of its coat is black and white. I named it Tommy. He is healthy. He is very beautiful. He is very playful. He listens carefully to strange noises. He moves freely in our house . He plays with small things and carries them in his mouth. He wags his tail happily to welcome me home from school. He barks fiercely at nights. I feed him with rice, fish, meat and milk. Everyone in our home loves him dearly.

*U. Pavitra*
*Grade 4*

# ROAD SAFETY

Knowing the traffic rules and signals would be very useful to all. If everyone learns them many accidents can be avoided. Thousands of people are killed daily in road accidents through out the world.

Due to accidents some people die on the spot. Some suffer unlucky fate. They have to live without an arm or stay in bed for the rest of their life.

Reckless speady motorists are very dangerous on the roads. Some drivers don't care about others. They don't bother about the condition of their vehicle. Some young drivers drive their coaches fast exceed the speed limit and meet with accidents very often.

The drivers must concentrate their mind only on driving. They must avoid taking liquor when driving .

The acts of Schools childern and students attending private Education centres are a nuisance to the road users. They don't follow the road rules any signals. They don't ride in Single file. They think the whole road is meant only for them and ride three or four abreast So they must avoid this and follow the traffic rules and signals.

Pedestrians must use the pavement. They must walk on the right hand side of the road. They must use the "zebra crossing" to cross the road. Many accidents are caused by stray cattle and dogs. Hence the people are requested to keep them away from the road.

So to make travel on the road safer we all must observe and follow the road rules and signals.

*R. Nikana*
*Grade 8*

# USES OF TREES

Trees are the best gift of nature to man. Trees support the life of man in many ways. Life on earth directly or indirectly depends on trees.

Trees are the main source of food for both man and animals. Man need to cook food before eating. Trees provide him with necessary fuel for cooking. We extract valuable medcines from the barks, roots, leaves, buds and seeds of plants. They help man to free himself from painful diseases. Different kinds of oils are extracted from the seeds and nuts. We use them to prepare savoury dishes. Trees yield various kinds of sweet nourishing fruits, which we relish round the year. We build houses with timber got from trees. We make transport vehicles such as carts, boats and carriages from wood. we make furniture from timber and use them at homes. office and schools . We make paper and cardboard from the pulp of the trees. Rubber an important product for modern life is obtained from trees.

Trees perform many natural functions too. The roots of the trees prevent soil erosion. Trees cause rain. They give shade and make the air fresh. They make the surroundings cool and beautiful. Trees give us life wealth and beauty. We must look after them tenderly.

***R. Piratheepan***
***Grade 6***

# Proverbs

1. Spare the rod and spoilt the child.
2. Christmas comes but once a year.
3. The mills of god grind slow but sure.
4. Strike while the iron is hot.
5. Make hay while the sun shines
6. Too much of anything is good for nothing.
7. A bird in the hand is worth two in the bush.
8. Look before you leap.
9. Good hammer sometimes nods.
10. Coming events caste their shadow before.

***S. Kamaldas***
***Grade 9***

# MY COUNTRY

My country is a small island called Srilanka. It is surrounded by the Indian ocean. The capital of my country is Sri Jayawardhnapura, Kotte. Many races like Sinhalaese, Tamils, Muslims and Burghers are living in my country. There are rivers, mountains, waterfalls and parks in my island. The Mahaweli is the longest river in Srilanka. Dunhinada is the most beautiful waterful in Srilanka.

The biggest forest is the Sinharaja, Yala, Kumana and Wilpaththu are the national parks. There are beautiful botanical gardens such as Peradeniya. Hakgala and Nuwareliya. Many foreigners come to visit my beautiful country.

The president of my country is Mrs. Chandrika Bandarnayake Kumarathunga. The main crops in Srilanka are tea, rubber, and coconut.

I love my country very much and I wish peace among all the communities.

***K. Kajeepan***
***Grade 5***

# THE GAME I LIKE BEST

I play a number of games such as cricket football, basketball and badminton. Of all these games. I like football best.


There are many reasons why I prefer this game to the others. It is a game which gives me great joy. When we play football every part of the body is properly exercised. It is a very robust game.

We also learn team sprit and the value of united effort. Passing the ball frequently to each other instead of one playing selfishly all the time is known as team sprit. Each player has his own contribution to make. Success in the game is achieved by all the players as one unit. This group sprit will help us in later life. We learn that selfishness is a bad habit and we are trained to believe that united we stand. divided we fall.

***T. Kajeepa***
***Grade 5***




சமாதானக் கழகம்



சுகாதார மன்றம்



2005 இல் நடைபெற்ற கால்கோள் விழாவில்
புதிய மாணவர்கள் வரவேற்கப்படுகின்றனர்.



ஆரம்பப் பிரிவுக் கண்காட்சி நிகழ்வுக்கான ஆயத்தங்களில்
ஆசிரியர்களும், மாணவர்களும் ஈடுபட்டபோது

# THE USES AND ABUSES OF TELEVISION

Television is a great invention. The use and abuse of it is men's own choice. Television has many uses television is the best in the sphere of education . We can learn about other countries, their people, culture traditions, their interests and ideals in the field of science and medicine there is nothing on par with television. Even in the field reporting on sports and games the television leads. If it is used in the right way television is the greatest asset to mankind.


But television can be man's down fall too. There is so much on television that is unsuitble especially the films and episodes of films shown. If this does not stop there will be no salvation of the youths. Too much time spent on television will deprive of our time that should be spent usefully, for example children will deprive themselves of the time they should spend on studying. This will lead to slipshod work and poor attainment.

Therefore, we should understand the use and abuse of television and choose to view only the programmes that will help us to achieve something good.

***V. Pirashanth***
***Grade 9***

## விழாக் குழுவினர்

திரு. சி. மணியம் (அதிபர்)
திரு. அ. துரைராசா (பா.அ.ச. செயலாளர்)
திரு. செ. செல்வரத்தினம் (உதவிச் செயலாளர்)
திரு. க. தர்மலிங்கம் (J.P)
திரு. ச. சுபாஸ்கரன் (பொருளாளர்)
திரு. த. மகேஸ்வரன்
திரு. வே. மகாதேவன்
திரு. ந. சந்திரகாந்தன்
திரு. தா. பாலசுப்பிரமணியம்
(மாகாணக்கல்வி அமைச்சு வ.கி. மாகாணம்)



# ஆபத்தை நோக்கிச் செல்லும் யாழ் மாவட்டக் கல்வி

*திரு. கந்தையா கனகராசா*(M.Ed)
*அதிபர்,*
*யா/வயாவிளான் ம. ம. வி.*

அண்மைக்காலமாக எல்லோராலும் பேசப்பட்டுவரும் விடயம் இதுவாகும். எல்லோருக்கும் பேசுவதற்கு ஒரு விடயம் கிடைத்துவிட்டது என்ற தொனியில் இவ்விடயம் பேசப்படுகின்றது. ஆனால் இந்நிலை ஏன்? எவ்வாறு? ஏற்பட்டது. இதற்கு யார் பொறுப்பு? என்று இதுவரை யாரும் ஆழமாகச் சிந்தித்தது கிடையாது.

பழம் பெருமை பேசுவதில் யாழ்மக்கள் சிறந்தவர்கள். இன்றும் பழம் பெருமை பேசுவதில் காலத்தைக் கழித்துக் கொண்டு அவ்வாறு பேசுவதல் திருப்தி அடைகின்றோம். கூட்டம் கூடிக் கதைக்கின்றோம். இன்னும் கூறப்போனால் முன்னொரு காலத்தில் இந்தநாடு முழுவதற்குமே கல்வியின் சிறந்த தொழில்நுட்பத்தை வழங்கியது யாழப்பாணம். யாழ்ப்பாணத்து ஆசிரியர்களிடம் கற்றால் தான் அது கல்வியாக இருக்கும் என்றிருந்தது ஒரு காலம். ஏனைய தமிழ்பேசும் மாவட்டங்கள் யாழ்ப்பாணத்து ஆசிரியர்களை விரும்பி ஏற்றுக் கொண்டன. அவ்வாறான யாழ்ப்பாணத்துக் கல்விக்கு ஏன் இந்தநிலை. கல்விச் சமூகம் சற்றுச் சிந்தித்துப் பார்க்க வேண்டிய விடயம்.

கல்வி வீழ்ச்சி என்பது கடந்த இரண்டு தசாப்பங்களாக நிகழ்ந்து வரும் ஒரு தொடர்நடவடிக்கையாகும். இது இன்று நேற்று ஏற்பட்ட விடயமாக நாம் கருதி விடமுடியாது. 1983இல் இந்த நாட்டில் பாரிய ஒரு இனக்கலவரம் ஏற்பட்டது. அன்றே வடபகுதிக்கான கல்வி வீழ்ச்சிக்கு அத்திவாரம் இடப்பட்டுவிட்டது எனலாம். எந்தவொரு துறையிலும் வீழ்ச்சி என்பது உடனடியாக ஏற்படக்கூடிய ஒன்றல்ல. அது ஒரு தொடர் நடவடிக்கையாகவே அமையும் என்ற உண்மையை நாம் மறுக்க முடியாது. எனவே இவ்விடயம் பற்றி பின்வரும் உபதலைப்புகளுடாக சுருக்கமாக ஆராயலாம் என்று எண்ணுகின்றேன்.

1. கல்வியில் சமவாய்ப்பு
2. கலைத்திட்ட அமுலாக்கம்
3. போர்ச்சூழல்
4. இயற்கைக் காரணிகள்
5. ஆய்வு அறிக்கைகள்
6. அர்ப்பணிப்புள்ள ஆசிரிய சேவை
7. பெற்றோர் பங்களிப்பு

### 1. கல்வியில் சமவாய்ப்பு :

1946ஆம் ஆண்டு C.W.W கன்னங்கரா அவர்கள் கல்வி அமைச்சராகப் பொறுப்பேற்ற போது அனைவருக்கும் கல்வி, கல்வியில் சமவாய்ப்பு என்ற கோசம் முன்வைக்கப்பட்டது. இன்று அக்கோசம் முன்வைக்கப்பட்டு 59வது வருடம் நடந்து கொண்டிருக்கின்றது. இதுவரை கல்வியில் சமவாய்ப்பு என்பது கேள்விக்குறியாகவே உள்ளது. மேலும் இல்வசப் பாடநூல். இலவச்சீருடை என்று கல்வி கற்பதில் வசதிவாய்ப்புக்கள் விரிவடைந்து சென்றிருந்தாலும் கல்வியில் எதிர்பார்க்கப்பட்ட இலக்கு அடையப்பட்டதா? என்பது கேள்விக்குறியாகவே உள்ளது.

கல்வி உள்ளீடுகள் வழங்கப்படுகின்ற போது அவைகள் சமமாக வழங்கப்படுவதில்லை. பின்தங்கிய பாடசாலைகள் இன்றும் பின்தங்கியதாகவே உள்ளன. நவீனயுகத்தில் கல்விச் சிந்தனையில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. கல்வித் திட்டமிடலில் பாரியமாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. திட்டங்களும், மாற்றங்களும் கூடப் பின்தங்கிய பிரதேசப் பாடசாலைகளைச் சென்று அடையப் பலகாலம் எடுக்கின்றன. அக்கால இடைவெளி பிரதேசத்திற்குப் பிரதேசம் வேறுபட்டுக் காணப்படுகின்றது. கொழும்பில் செய்யப்படும் மாற்றங்கள் யாழ்ப்பாணத்தை வந்தடையப் பலமாதங்கள், சிலவேளைகளில் வருடங்கள் எடுக்கின்றன. பேச்சளவில் பேசப்படும் கல்வியில் சமவாய்ப்பு என்பது செயலளவில் உருப்பெற உடனடி நடவடிக்கை வேண்டும். மாற்றங்கள் ஒரேநேரத்தில் எல்லாப் பிரதேசங்களையும் சென்றடையக்கூடிய நிலை உருவாக வேண்டும்.

## 2. கலைத்திட்ட அமுலாக்கம் :

பாடசாலைத் தொழிற்பாட்டை ஒழுங்குபடுத்தும் ஒரு அம்சமே கலைத்திட்டம். மாணவர்களின் எதிர்காலத்தை நோக்கி அவர்களின் வாழ்வுக்குரிய வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்கும் ஒரு அம்சமாக இக்கலைத்திட்டம் அமைய வேண்டும். அதேபோல பொறுப்புக்களை ஏற்றுக் கொள்ளும் இயல்பை இக்கலைத்திட்டம் உருவாக்க வேண்டும். பாடசாலைக் கலைத்திட்டமானது பிள்ளைகளின் எதிர்காலத் தேவைகளை நிறைவேற்றக்கூடியதாக இருக்க வேண்டும். கலைத்திட்டத்தில் இருந்து நாம் எதிர்பார்க்கும் முக்கியமான விடயம் பொருளாதாரப் பெறுமானம். அதாவது எதிர்காலத்தில் அவர்களது உழைப்பாற்றலை வளர்க்க அக்கலைத்திட்டம் உதவாவிடின் அதனால் பயனில்லை.

இவ்வாறான நிலையில் எமது நாட்டுக் கலைத்திட்டம் காலத்திற்குக் காலம் மாற்றமடைந்து சென்றாலும் இன்னும் நாட்டுக்குப் பொருத்தமான ஒரு கலைத்திட்டம் உருவாகவில்லை என்றே கூறலாம். வெறுமனே பாடங்களும், பாடத்திட்டங்களும் மாறிச் செல்கின்றனவே தவிர பொருத்தமான கல்வி முன்னெடுப்பாக அவை வளரவில்லை. தற்போதைய நிலையில் ஆரம்பக்கல்விக் கலைத்திட்டம் ஓரளவுக்கு சிறப்பானதாக அமைகின்ற போதும் இரண்டாம் நிலை, மூன்றாம் நிலைக் கலைத்திட்டம் வெறுமனே பட்டதாரிகளை உருவாக்கும் கலைத்திட்டமாகவே அமைந்துள்ளது.

1972ம் ஆண்டு உருவாக்கப்பட்ட கலைத்திட்டம் நாட்டுக்குப் பொருத்தமான கலைத்திட்டமாகும். கல்வியியலாளர்களாலும், பொருளாதார நிபுணர்களாலும் வரவேற்கப்பட்ட ஒரு கலைத்திட்டமாக இருந்தபோதும் கூட துர்அதிஷ்டவசமாக அது மறைந்து போய்விட்டது.

கலைத்திட்டங்களும், கற்பித்தல் முறைகளும் மாறிச்செல்லும் போது அதற்கேற்ற வசதிவாய்ப்புக்கள் ஏற்படுத்திக் கொடுக்கப்படாமல் கலைத்திட்டம் அமுலுக்கு வருகின்றது. கலைத்திட்டம் மாறும்போது அதற்கேற்ப ஆசிரியர்களுக்கான பயிற்சி பிந்தியே கிடைக்கின்றது. அதுமட்டுமல்லாமல் யாழ்ப்பாணப் பிரதேசத்திற்கு இவ்வாறான

மாற்றங்களும். பயிற்சிகளும் வந்தடைய நீண்டகாலம் எடுக்கின்றன. சுருங்கக்கூறின் அண்மைக்காலக் கலைத்திட்டம் ஆசிரியர்களை படிவங்கள் நிரப்பும் ஒரு லிகிதராக மாற்றியுள்ளதே தவிர அவர்களை வகுப்பறையில் சிறந்த முறையில் இயங்குவதற்கு சந்தர்ப்பம் அளிப்பதாக இல்லை.

## 3. போர்ச்சூழல் :

இலங்கைத் திருநாடு அழகான, அமைதியான, நாகரிகமான நாடு. பலராலும் விரும்பப்பட்ட நாடு. 1983ஆம் ஆண்டு ஏற்பட்ட குழப்பமான செயற்பாட்டினால், ஒரு பகுதியினரால் ஏற்படுத்தப்பட்ட குரூரச் செயல்களால் இந்நிலை அற்றுப் போய்விட்டது. போர் அரக்கன் தனது கோரமான பற்களைக் காட்டிய வண்ணம் தாண்டவம் ஆடிக்கொண்டிருக்கின்றான். அவ்வரக்கனின் காலடிபட்டு சிதைந்துபோன, அழிந்துபோன வடக்குக் கிழக்குப் பகுதி இன்னும் நிமிரந்து நிற்க முடியாமல் இருக்கின்றது.

யுத்தவடுக்கள் நிறைந்த வடக்கு கிழக்குப் பகுதியின் பொருளாதாரம், அழிக்கப்பட்டது. கல்வி வாய்ப்புக்கள் திட்டமிட்டு அழிக்கப்பட்டன. மறுக்கப்பட்டன. நாட்டின் ஏனைய பகுதியில் அமைதியான, சாந்தமான சூழ்நிலையில் கல்வி முன்னெடுப்புக்கள் நடைபெறுகின்றபோது வடக்குக்கிழக்கில மட்டும் ஏங்கித் தவிக்கும் பிஞ்சு உள்ளங்களின் தவிப்பிலே கல்வி திணிக்கப்படுகின்றது.

தந்தையை இழந்த சிறார்கள், தாயை இழந்த சிறார்கள், இருவரையும் இழந்த சிறார்கள், இவ்வாறு திட்டமிட்டு சிதைக்கப்பட்ட பிஞ்சு உள்ளங்கள் தான் எத்தனை? இவர்களின் உடனடித்தேவை ஆற்றுப்படுத்தலா? கல்வித் திணிப்பா? ஆற்றுப்படுத்தல் உரியகாலத்தில் உரிய சிறுவர்களுக்கு வழங்கப்பட்டதா என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். அப்பிஞ்சு உள்ளங்களுக்குக் கல்வியை எவ்வாறு வழங்கமுடியும் என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். உரிய காலத்தில் வேண்டியவற்றை நாம் செய்யத் தவறிவிட்டோம். அதன் பலாபலன்களைத் தற்போது அனுபவித்துக் கொண்டிருக்கின்றோம். கல்வியில் வீழ்ச்சி ஏற்பட்டுவிட்டது என்று புலம்பித் திரிகின்றோம்.

சிறப்பாக நோக்கினால் 1994, 1995, 1996 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் வடக்குக் கிழக்குப் பகுதி போர்மேகங்களால் சூழப்பட்டிருந்த காலப்பகுதியாகும். குறிப்பாக யாழ்மாவட்ட மக்கள் பாரிய இடப்பெயர்வைச் சந்தித்த காலப்பகுதியாகும். யாழ்மாவட்ட மக்கள் முற்றாகவே அகதிமுகாம்களில் வாழ்ந்த காலப்பகுதியாகும். இன்னும் சிறப்பாகக் கூறினால் வலிகாமத்து மக்கள் முற்றாக இடம்பெயர்ந்த காலப்பகுதி. இக்காலப் பகுதியில் யாழ்மாவட்டத்தின் ஏனைய பகுதிகளான தென்மராட்சி, வடமராட்சிப் பகுதிகள் அகதிமுகாம்களாகக் காட்சியளித்தன. மாவட்டங்களின் இயல்பு வாழ்க்கை முற்றாக ஸ்தம்பிதமடைந்த காலப்பகுதியாகும்.

இக்காலப்பகுதியில் பிறந்த குழந்தைகளே இப்பாதிப்புகளுக்கு உள்ளாக்கப்பட்டார்கள். அதாவது 1995இல் பிறந்த குழந்தைகள் தற்போது ஐந்தாம் தரத்திலும் 1996இல் பிறந்த குழந்தைகள் நான்காம் தரத்திலும் கல்வி கற்கின்றனர். குண்டுச் சத்தங்களின் மத்தியில் பிறந்த குழந்தையின் உள்ளம் எவ்வாறு சிதைந்து நசிந்து போய் இருக்கும் என்பது சிந்திக்க வேண்டிய ஒன்று. இவ்வாறு பாதிக்கப்பட்ட

குழந்தைகளின் கல்வித்தரம் எவ்வாறு இருக்கும் என்று ஒவ்வொரு கல்வியியலாளனும் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இவர்களுக்கு எவ்வாறு கல்வியைப் போதிக்க வேண்டும் என்பதனை சிந்தித்துப் பார்க்க வேண்டும். இவர்களுக்கு கொடுக்க வேண்டியதை உரியநேரத்தில் கொடுத்தோமா? என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

வடக்குக் கிழக்கில் எட்டு மாவட்டங்கள் உள்ளன. தரம் நான்கு மாணவர்கள் மத்தியில் செய்யப்பட்ட தமிழ்அறிவு ஆய்வின்படி யாழ்மாவட்டம் மிகவும் பின்தங்கிய நிலையில் எட்டாவது நிலையில் உள்ளது என்று கூறப்படுகின்றது. இந்நிலையில் குறித்த வகுப்பு மாணவர்கள் 1996ஆம் ஆண்டு பிறந்தவர்கள் என்பதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். அக்காலம் எப்படிப்பட்ட காலம் என்பதையும் மனதில் கொள்ள வேண்டும்.

க.பொ.த. சாதாரண தரத்தில தற்போது கற்றுக் கொண்டிருக்கும் மாணவர்கள் பற்றியும் நாம் சற்றுச் சிந்திக்க வேண்டும். 1995ம் ஆண்டு தரம் ஒன்றில் கல்வி கற்கத் தொடங்கிய பிள்ளைகளே 2004ஆம் ஆண்டு க.பொ.த சாதராணதரப் பரீட்சைக்கு தோற்றினர். அதேபோன்று 1996ம் ஆண்டு தரம் 1 இல் கல்விகற்கத் தொடங்கிய பிள்ளைகளே 2005ஆம் ஆண்டு க.பொ.த. சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ளனர். இவர்களுடைய பரீட்சைப்பெறுபேறு எவ்வாறு இருக்கும் என்பதை நாம் இப்போதே கணிப்பிட்டுக் கொள்ளலாம். இதேபோன்று 1992, 1993, 1994ஆம் ஆண்டு பாடசாலைக் கல்வியைத் தொடங்கிய மாணவர்களை வைத்துக் கொண்டு யாழ் மாவட்டக்கல்வி நிலை பற்றி ஆய்வுகள் நடாத்துகின்றோம். கல்வியில் வீழ்ச்சி என்று கோசம் எழுப்புகின்றோம். ஆனால் அவர்களின் ஆரம்ப சூழ்நிலை பற்றி ஆய்வு செய்யவில்லை. அவர்களின் ஆரம்பக்கல்வியின் போது கொடுக்க வேண்டியதைக் கொடுத்தோமா? என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இன்றும் யாழ் மாவட்டத்தின் வலிவடக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவு முற்றாக இராணுவ ஆக்கிரமிப்புக்குள் சிக்குண்டுள்ளது. அப்பகுதி மக்களில் பெரும்பகுதியினர் முகாம்களிலேயே உள்ளனர். இவர்கள் கல்வி கற்கக்கூடிய வசதிகள் வாய்ப்புகள் எவ்வாறு இருக்கும் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஆகவே இனிமேலாவது நிலைமையை உணர்ந்து நாம் செயற்பட வேண்டும். மாணவர்களுக்கு கொடுக்க வேண்டியதை உரிய காலப்பகுதியில் கொடுக்க முயற்சிக்க வேண்டியதைத் தவிர்த்து கல்வியில் வீழ்ச்சி பற்றிப் பேசுவதில் பலனில்லை.

## 4. இயற்கைக் காரணிகள் :

கல்வியில் நவீன சிந்தனைகள், நவீன தொழில்நுட்பங்கள், நவீன யுக்திகள் பற்றிச் சிந்திக்கின்ற போது கல்விப்பிரதேசத்தின் தன்மை, பிரதேசத்தின் தொழில்கள், மக்களின் வாழ்க்கைத்தரம் என்பன பற்றியும் கவனத்தில் கொள்ள வேண்டும். அவர்களுக்கு ஏற்ற கல்வியை வழங்க முயற்சிக்க வேண்டும்.

இயற்கைக் காரணிகள் என்னும் போது சுனாமி போன்ற இயற்கைப் பேரழிவுகளை நாம் கவனத்திலெடுக்க வேண்டும். போர் அரக்கனின் பிடியிலிருந்து

மீண்டெழும் வேளையில் அதைவிட மோசமான ஒரு இயற்கை அழிவை மக்கள் சந்தித்துள்ளனர். இதில் யாழ்மாவட்டமும் விட்டு வைக்கப்படவில்லை. ஏற்கனவே வீழ்ந்து போயிருக்கும கல்வியை மேலும் ஒரு படி வீழ்த்தியுள்ளது இந்த இயற்கையின் கொடூரம்.

அங்கு ஏங்கித் தவிக்கும் பிஞ்சு உள்ளங்கள் ஏக்கத்தின் சாயல் இன்னும் அவர்களின் முகத்தைவிட்டு அகலவில்லை. இவர்களுக்குத் தேவை உடனடி ஆற்றுப்படுத்தல், மகிழ்ச்சியான சூழல், சீரான கல்வி முன்னெடுப்பு, இன்னும் அவை முழுமையான சீருக்கு வந்துவிட்டது எனக் கூறமுடியாது. யாழ்மாவட்டத்தின் வடமராட்சி கிழக்கு என்பது ஏற்கனவே பின்தங்கிய பகுதி. தற்போது இயற்கை கோரதாண்டவமாடியுள்ளது. இவர்களுக்குத் தேவை சகலதுறையிலுமான விரைவான அபிவிருத்தி.

## 5. ஆய்வு அறிக்கைகள் :

கல்விப்புலத்தில் பல்வேறு ஆய்வு அறிக்கைகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. அதிலும் சிறப்பாக யாழ்மாவட்டக் கல்வி நிலை பற்றிய ஆய்வுகள், அறிக்கைகள் பல வெளிவந்துள்ளன. ஆய்வு செய்யும் போது ஆய்வுக்குட்படும் பிரதேசம் பற்றி ஆய்வாளன் நன்கு அறிந்திருக்க வேண்டும். ஆய்வி விடயம் பற்றி நன்கு அறிந்திருக்க வேண்டும். அதுபற்றி நன்கு பரந்த அறிவைக் கொண்டிருக்க வேண்டும். பிரச்சினைகள் நன்கு இனங்காணப்பட்டிருக்க வேண்டும். நம்பகத்தன்மை கொண்ட தரவுகளைப் பெற்றுக் கொள்வதை உறுதிப்படுத்த வேண்டும். இவை பற்றி ஆய்வாளன் நன்கு சிந்தித்து செயற்பட வேண்டும்.

ஆய்வுக்கட்டுரைகளையோ, விமர்சனங்களையோ வெளிவிடும் போது சம்பந்தப்பட்ட நிறுவனங்களைப் பாதிக்காத வகையில் அவை அமைய வேண்டும். அதில் எமது சுயவிருப்பு வெறுப்புக்களைக் காட்டாத வகையில் மிக அவதானமாகச் செயற்பட வேண்டும். ஒரு விமர்சனத்தை வெளிவிடும் போது அது சம்பந்தப்பட்ட நிறுவனத்தை, அல்லது விடயத்தை மேலும் பாதிக்காத வகையில் பார்த்துக் கொள்வது ஆய்வாளனின் அல்லது விமர்சனம் செய்பவரின் பொறுப்பாகும். ஆய்வுகள் பிரச்சனையை நன்கு இனங்காணப்பட்டவையாக அமைய வேண்டும். ஆய்வுக் காலப்பகுதியின் சூழ்நிலை பற்றி கருத்திற் கொள்ளப்படல் வேண்டும். தீர்வு பரிகாரத்தோடு சேர்ந்த தீர்வாக அமைய வேண்டும்.

## 6. அர்ப்பணிப்புள்ள ஆசிரியர் சேவை :

ஆசிரிய சேவை என்பது பட்டை தீட்டாத மாணிக்கக்கற்களை பட்டை தீட்டி ஒளிரவைக்கும் சிறந்த சேவை. இத்தன்னலமில்லாச் சேவையில் இணைந்த எத்தனை ஆசிரியர்கள் மாணவர்களை மையமாகக் கொண்டு சேவையாற்றுகின்றனர் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட பிள்ளைகள் ஒவ்வொன்றையும் நல்லமுறையில் வளர்த்தெடுக்க வேண்டும் என்பதை மனதில் கொள்ள வேண்டும்.

பாடசாலைக் கல்வியை பல்கலைக்கழகக் கல்வி போல் நாம் முன்னெடுக் முடியாது. ஆனால் பல்கலைக்கழக விரிவுரையாளர் ஒருவர் ஒருமணிநேர விரிவுரைக்கு

முன்னாயத்தம் செய்வதற்காக பலமணி நேரத்தை நூல்நிலையத்தில் செலவிடுகின்றார். ஆசிரியர்களாகிய நாம் ஆரம்பக்கல்வி முதல் இடைநிலைக்கல்வி வரை முன்னாயத்தத்திற்காக எவ்வளவு நேரத்தைச் செலவழிக்கின்றோம் என்று எண்ணிப்பார்த்தல் நன்று. இழந்த கல்வியை வீழ்ந்த கல்வியை மீட்டெழுப்ப வேண்டுமானால் கடமையுணர்வுள்ள, அர்ப்பணிப்புள்ள ஆசிரிய சமூதாயத்தினால் தான் முடியும் என்ற உண்மையை அனைத்து ஆசிரியர்களும் உணர்ந்து எமது சமுதாயம் வளர வேண்டும் என்று பாடுபட்டால் நிச்சயம் கல்வியில் நாம் முன்னேறுவோம்.

## 7. பெற்றோர் பங்களிப்பு :

பிள்ளையின் கல்வி வளர்ச்சியில் கூடியளவு பங்களிப்பை வழங்கவேண்டியவர்கள் பெற்றோர்களே. 24 மணித்தியாலத்தில் பாடசாலையில் ஒரு மாணவன் கழிக்கும் நேரம் 6 மணித்தியாலங்கள் மட்டுமே. மிகுதி 18 மணிநேரமும் பிள்ளை பெற்றோரின் அரவணைப்பிலேயே இருக்கின்றது.

நவீன கல்வியுகத்தில் மாணவர்கள் தாம் கற்றவற்றை மீட்டுப் பார்க்கும் சந்தர்ப்பங்கள் மிகக் குறைவாகவே உள்ளன. பாடசாலை நேரம் தவிர்ந்த ஏனைய நேரத்தில் ஒரு பகுதியை அவர்கள் தனியார் கல்வி நிலையங்களில் கழிக்கின்றனர். பாடசாலைக் கல்வி ஒருபாதையில் செல்கின்றது. தனியார் கல்வி ஒரு பாதையில் செல்கின்றது. இதனால் மாணவர்கள் எதைக் கற்பது என்று திண்டாடுகின்றனர். பாடசாலையில் கற்றுக் கொண்டதை மீட்டுப் பார்க்க நேரம் இல்லாது தவிக்கின்றார்கள். பெற்றோர்கள் பிள்ளையை தனியார்கல்வி நிலையத்திற்கு அனுப்பி வைப்பதோடு தமது கடமை முடிந்துவிட்டது என எண்ணுகின்றனர். பிள்ளைகள் படித்தவற்றை மீட்டுப் பார்க்கின்றனரா என்று எண்ணிப் பார்ப்பதில்லை. பிள்ளையின் கல்வியில் உந்துசக்தி தாமே என்பதை அவர்கள் உணர்த் தவறிவிடுகின்றனர். பிள்ளையின் கல்வியில் கூடின பங்கு தம்பக்கமே உள்ளது என்பதை உணரத் தவறுகின்றனர்.

இறுதியாக நோக்குகின்ற பொழுது கல்வி வளர்ச்சி, கல்வி முன்னெடுப்பு என்பது சமுதாயத்தில் அப்பிரதேசத்திலுள்ள அனைவரினதும் ஒற்றுமையான அர்ப்பணிப்புள்ள சேவையில், உழைப்பில் தங்கியுள்ளது. உண்மையை உணர்ந்து செயற்படுவதில் தங்கியுள்ளது. கடந்த காலத்திலும் நிகழ்காலத்திலும் விட்ட, விட்டுக் கொண்டிருக்கின்ற தவறுகளை உணர்ந்து எமது இளம் சிறார்களின் ஒளிமயமான எதிர்காலத்தை எண்ணி நாம் செயற்பட வேண்டும்.

புதியனவற்றை ஏற்று நடைமுறைப்படுத்தும் மனப்பாங்கு கல்விச் சமுகத்தில் குறிப்பாக ஆசிரிய சமுதாயத்தில் ஏற்பட வேண்டும். காலத்தால் அழியாத கல்வி ஞாலத்திலும் பெரியது என்ற உண்மையை உணர்ந்து ஏங்கி எதிர்பார்த்திருக்கும் எம் எதிர்காலச் சந்ததியினரை வளர்த்தெடுப்பது எமது தலையாய கடமையாகும். ஆபத்து விழிம்பிலிருந்து எம் எதிர்கால யாழ்ப்பாணக் கல்வியைக் காப்பாற்றுவது ஒவ்வொருவரினதும் தலையாய கடமையாகும்.

# நகையும் நங்கையரும்





ஆ. சி. நடராஜா
ஓய்வு பெற்ற அதிபர் V.M.M.V

தமிழ்ப்பெண்கள் ஆபரணங்கள் அணிவதிற் பெருவிருப்புடையவர்கள். உண்ணும் உணவிற்கு மேலாக அவற்றை நேசிப்பவர்களும் உண்டு. அத்தகையோர் உணவை ஒறுத்து நகைகளை வாங்குவதும் உண்டு. பெற்றோர்கள் தமது பிள்ளைகளுக்கு நகை அணிவிப்பதை தமது முக்கிய கடமைகளில் ஒன்றாகக் கொள்கின்றனர்.

அழகுபடுத்துவதே நகைகளை அணிவதற்கு முக்கிய நோக்கமாக இருக்கின்றதெனினும் வேறு பல சமூகக் காரணிகளும் முன் நிற்கின்றன. உறவின் குறியீடாதல், சமூக அந்தஸ்து, செல்வநிலைகளைப் புலப்படுத்துதல், கௌரவத்தைக் காப்பாற்றுதல், ஆன்மீக உணர்வு, தீயசக்திகளிலிருந்து தம்மைப் பாதுகாத்தல், கிரகங்களின் பார்வையிலிருந்து தப்புதல், நோய் நொடிகள், திருஷ்டிகள் ஏற்படாது காத்தல் போன்ற காரணிகளுக்காகவும் ஆபரணங்கள் அணியப்படுகின்றன. மேலும் சொத்துடமையிற் பெருவிருப்புடைய எமது சமுதாயத்தில் மூலதனத்தை முடக்கக்கூடிய இடமாகவும் ஆபரணங்கள் அமைகின்றன. அவசர தேவைகளுக்கு விற்றுப் பணமாக்கவோ, அடைவு வைத்து பணம் பெறவோ முடியுமென்ற சிந்தனையும் உள்ளது. திருமணத்தின் போது பெறப்படும் சீதனத்தில் நகைநட்டுப் பற்றிய பேச்சு முதன்மைபெறுகிறது. "இன்ன நகை இவ்வளவு பவுணிற் தரவேண்டும் தருவோம் - தருவோம்" என்றெல்லாம் பேசப்படுவது சாமானிய மக்கள் மத்தியிற் சகசமானது, மேற்தட்டு வர்க்கத்தினரிடம் இது மௌன உரையாடலாகவே நிகழ்ந்து விடுகிறது. கேளாமலே சிலர் தமது மேலாண்மையைக் காட்டும் ஊடகமாக நகைப்பரிமாற்றம் செய்கின்றனர். குடும்பத் தகராறுகள் கணவன் மனைவியரிடையே அல்லது சம்பந்திகளிடையே ஏற்படும் போது நகைப் பரிமாற்றங்களிற் காணப்பட்ட குறைபாடுகள் அலசப்படுவது சர்வசாதாரணம். எனவே அவ்வாறான கௌரவக் குறைபாடுகள் ஏற்படாது பார்த்துக் கொள்ள முற்கூட்டியே திருமணத்தின் போது ஆபரணங்களை வழங்கலில் உச்சக் கவனம் செலுத்தப்படுகின்றது.

மேற்கூறிய அழகுணர்வு, உறவுநிலை, ஆன்மீக உணர்வு, நம்பிக்கை, பொருளாதாரக் காரணிகளை அடியொற்றிப் பிள்ளைகள் பிறந்த நாளிலிருந்து அவ்வப்போது ஏற்றவகையில் ஆபரணங்கள் அணிவிக்கப்படுகின்றன. வைரம், மணிகள், பிளாஸ்ரிக் போன்றவற்றால் இவ்வாபரணங்கள் செய்யப்படுகின்றன.

சாதாரண வேளைகளில் சொற்ப அளவில் ஆபரணங்களும் விசேட வைபவங்கள், விழாக்கள், சடங்குகளில் கூடியளவு ஆபரணங்களும் அணியப்படுகின்றன. சில

ஆபரணங்கள் சில சடங்குகளின் போதே முதன்முதல் அணிவிக்கப்படுவதும் எமது பண்பாட்டின் முக்கிய அம்சமாகும். அச்சடங்குகளுக்காக அவ்வாபரணங்களா அல்லது அவ்வாபரணங்களுக்காகச் சடங்குகளா என்று பிரித்தறிய முடியாத அளவுக்கு இரண்டும் ஐக்கியப்பட்டுள்ளமைக் காண்கிறோம். எமது பண்பாட்டினை ஆபரணங்கள் புலப்படுத்துமாற்றையும் சடங்குகளில் அவை பெறும் முக்கியத்துவத்தையும் இணைத்து நோக்குவது பொருத்தமுடையதாகும்.

பிள்ளை பிறந்ததும் ஆரோக்கியமாக வளர வேண்டுமென்று பெற்றோர் விரும்புவது இயற்கை. அதற்குத் தெய்வ அனுக்கிரகம் வேண்டப்படுவதுடன் கிரகங்களின் பாதிப்பு ஏற்படக்கூடாது, தீய சக்திகளின் பார்வை தீண்டக் கூடாது என்றெல்லாம் எண்ணப்படுகிறது. எனவே பிள்ளை பிறந்த துடக்குக் கழிவு அன்று ஒரு சடங்கு நடத்தப்படுகின்றது. அந்நிகழ்வின்போது சங்கிலி, காப்பு, அரைஞாண் எனப்பல ஆபரணங்களைத் தகப்பன், மாமன், மாமி, சகோதரர்கள், தாத்தா, பாட்டி முதலான நெருங்கிய உறவினர்கள் அணிவித்து மகிழ்வர். துடக்குக்கழிக்க வரும் குருவிடம் கொடுத்து அவற்றைப் பாலிற்கழுவி, மஞ்சள் குங்குமமிட்டு, சாம்பிராணிப் புகைகாட்டிப் பூசையில் வைத்தபின் நகை அணியப்படுகின்றது. இங்கு நகைகளை அணிவிக்கும் போது தாய்மாமனைக் கொண்டு முதலாவது நகையை அணிவிக்க வேண்டுமென்பது மரபாகும். தாய்மாமன் இல்லாதவிடத்து மாமன் முறையான வேறு ஒருவர் அணிவிப்பார். இதன் பின்புதான் தந்தைக்குக் கூட இடம் கிடைக்கிறது. தீயசக்திகளிடமிருந்து காவல் செய்யச் சங்கிலியில் பஞ்சாயுதம் கோக்கப்படும். அதில் சூலம், நட்சத்திரம், வில்லு, அம்பு, வாள் என்பன காணப்படும்.

துடக்குக்கழிவு அன்று பெரும்பாலும் காதுகுத்துச் சடங்கும் இடம்பெறும். அவ்வாறு நிகழாவிடத்து ஒரு வயது, மூன்று வயது என ஒற்றை எண்ணிக்கை உடைய வயதில் வீட்டில் அல்லது கோவிலில் இந்நிகழ்வு நடைபெறும். சிறிது காலங்களுக்கு முன் குடும்பங்களின் வசதிக்கேற்பக் காது குத்துவதற்கென விசேட சடங்குகள் நடைபெற்றமையும் குறிப்பிடத்தக்கது. காது குத்தாவிட்டால் பிள்ளைக்குத் தோஷம் என்றோர் ஐதீகமும் உண்டு. உரிய காலத்திற் காது குத்தாவிடின் நோய், துன்பம் வருமெனக் கருதுபவர்களுமுண்டு.

சிறிய கம்பி வளையத்துடன் ஆரம்பமாகிப் பிள்ளை வளர வளரத் தோடுகள் மாற்றப்படுகின்றன. தொங்கட்டான், கடுக்கன், பிஞ்சுக்கட்டு, கம்மல், வளையம் எனப் பலவித தோடுகள் பிள்ளையின் முகவெட்டுக்கேற்பத் தெரிவு செய்யப்படுகின்றன. காது மடல்களின் மேலும் நடுவிலும் காதுகுத்தி நகையணியும் மங்கையர்களும் உள்ளனர்.

பிள்ளைகள் வளர்ந்து தவழ்ந்தும் குறுநடை புரிந்தும் வாழுங்காலத்தில் அவர்தம் இடுப்பிலுள்ள அரைஞானில் அரசம் இலைபோன்ற வடிவில் தங்கத்தாலோ அல்லது வெள்ளியாலோ அல்லது பித்தளையாலோ ஒருவித நகையைச் செய்து அணிவிக்கும்

வழக்கம் பிராமணர், பொற்கொல்லர் போன்றோரிடம் காணப்படுகின்றது, இந்நகையை "அரைமுடி கிரி சலங்கை" என அழைப்பர். இது பெண் பிள்ளைகளுக்குரிய ஒரு நாணம் எனப்படுகிறது.

மூக்குக் குத்துவதும் ஒரு சடங்காக இல்லாவிட்டாலும் ஒரு நல்ல நாள் பார்த்தே செய்யப்படுகிறது. பொதுவாகப் பூப்படைந்த பின்பே அழகுக்காக இவ்வாறு செய்யப்படுகிறது. நட்சத்திரம் பிறை, குணுக்கி போன்ற வடிவங்கள் மூக்குக் குத்தியில் இடம்பெறுகின்றன. சிலர் மூக்கின் இரு பக்கங்களிலும் அணிவர். இன்று இவ்வழக்கம் மிக அருகியே காணப்படுகிறது.

பூப்படைந்த பின் துடக்குக் கழிவு செய்யும் போது பெரும் சடங்கொன்று இன்று சர்வசாதாரணமாகிவிட்டது. மங்கல நீராட்டி, ஆடம்பர ஆடைகள் அணிவித்து, பிள்ளை என்னென்ன ஆபரணங்களை விருப்புகிறதோ, பெற்றோர், உறவினர் விருப்பம் எப்படி எப்படியோ அவற்றைப் பொறுத்து ஆபரணங்கள் பலதும் அங்கு அணியப்படுகின்றன.

மங்கைப் பருவம் அடைந்தவுடன் பெண்களின் இயற்கை அழகில் ஒரு கவர்ச்சி ஏற்படுகிறது. அக்காலத்திற் தம்மை ஆடை ஆபரணங்களால் அலங்கரிப்பதிற் பெண்கள் இயல்பூக்கம் பெறுகின்றனர். இதனால் அவர்கள் அணியும் ஆபரணங்கள் அதிகரிக்கத் தொடங்குவதுடன், அவற்றின் அளவு, வடிவம், மூலப்பொருள்கள் என்பனவும் மாறத் தொடங்குகின்றன. தாம் அணியும் ஆடைகளின் நிறங்களுக்கேற்ற நிறங்களையுடைய மணிகள், கற்கள் இழைத்த ஆபரணங்களைக் கூட மாற்றி மாற்றி அணிபவர்களுமுண்டு.

பரதம் படித்த மங்கையர்கள் தமது திறனை வெளிப்படுத்தும் வகையில் அரங்கேற்றம் செய்வதுண்டு. ஆன்மீக உணர்வும், அழகுணர்வும், ததும்பும் இந்நிகழ்வின் போது உச்ச அளவு ஆபரணங்கள் அணியப்படுகின்றன. ஒரு தமிழ்ப் பெண்ணினுடைய ஆபரண அலங்கார முழுமையை அங்கு தரிசிக்கலாம்.

| | | |
|---|---|---|
| தலையில் | - | ராக்கொட்டி, தலைச்சாமான், சுட்டி, சந்திரன், சூரியன், நாகம், சடைநாகம், பின்னலின் நுனியிற் குஞ்சம். |
| முகத்தில் | - | காதில்தோடு, சிமிக்கு மாட்டல் போன்றன. முகத்தில் மூக்குத்தி, நத்து, புலாக்கு |
| கழுத்தில் | - | அட்டியலுடன், முத்துகாரம், மகரகண்டி, மாங்காய் மாலை, காசு மாலை, பதக்கம் - சங்கிலி |
| கையில் | - | வங்கி, வளையல்கள், பட்டைக் காப்பு, விரலில் மோதிரம் |
| இடுப்பில் | - | ஒட்டியாணம் அல்லது மேகலை |
| காலில் | - | சலங்கை, கொலுசு |

முதலானவை நேர்த்தியாக அணியப்படுகின்றன. இவ்வாறு தமிழர் பண்பாட்டைப் பிரதிபலிக்கும் பரதநாட்டிய ஒப்பனையில் ஆபரணங்ள் பூரணத்துவம் அளிக்கின்றமையைக் காணலாம்.

பெண்ணின் வளர்ச்சிக் பாதையில் அடுத்த நிலை திருமணம் ஆகும். அங்குதான் அவளது வாழ்வின் பூரணத்துவத்துக்கு வழியேற்றப்படுகின்றது. தாலியையும் அதனைத் தாங்கும் கொடியையும் மணாளன் பெண்ணின் கழுத்திற் சூட்டுகிறான். நாள் பார்த்து, நட்சத்திரம் பார்த்து, அக்கினி, அருந்ததி, தேவர், மூவர், பூவுலகிலுள்ளோர் சாட்சியாக மங்கள வாத்தியங்கள் முழங்க அந்தணர் அருமறை ஓதச் சபையோர் முன்னிலையில் இந்நிகழ்வு நடந்தேறுகிறது, தன்னையும் காத்துத் தன் கணவனையும் காத்து, தன் குலத்தையும் ஏன் பெண்ணினம் முழுவதையுமே காப்பாள் என்னும் பண்பாட்டு அறைகூவல் அத்தாலியிற் பொதிந்துள்ளது. எனவே தாலி கழுத்தில் ஏறியதும் அப்பெண்ணினது அந்தஸ்து உயர்கிறது.

விக்கினம் தீர்க்கும் விநாயகன் உருவம் தாலியிற் பொதுவாக இடம்பெறும். தாலிப் பொருத்தம் இல்லாதோர், அம்மன், இலட்சுமி, முருகன் முதலானவருள் ஒருவர் உருவைத் தாங்கும் தாலியை அணிவர். தாலியின் பின்புறத்தில் சூலம், நிறைகுடம், அறுகோணயந்திரம் என்பவற்றில் ஒன்று காணப்படும். கிறீஸ்தவர்கள் கைப்பிடித்தல், புறா, குரிசு, பைபிள் போன்ற உருவங்கள் பொறித்த தாலியை அணிவர். தாலியின் இருமருங்கிலும் இராசா, இராணி பொறித்த காசுகளையும் பூட்டுபவருண்டு. பிராமணர், பஞ்சகம்மாளர் 3 கொம்புத்தாலி அணிய ஏனையோர் 2 கொம்புத்தாலி அணிவர்.

திருமணத்தின் போதோ அல்லது அதற்கு முன்னரோ (எழுத்து) மோதிரம் மாற்றும் நிகழ்ச்சியும் நடைபெறுகிறது. உறவின் நெருக்கத்தை அது குறிக்கிறது. பிராமணர்கள் மோதிரம் மாற்றும் நிகழ்ச்சியை, “நிச்சயம் பண்ணுதல்’ என்னும் விமரிசையான சடங்காக திருமணத்துக்கு முன் கொண்டாடுகின்றனர்.

திருமணத்தின் போது பெண்ணின் காலில் கணவன் வெள்ளியிலான மெட்டியை அணிகின்றான். மணமான பெண்ணைத் தாலி மூலம் அறிவது போல மணமான ஆடவனை அறிய அவனே முன்னைக் காலத்தில் மெட்டி அணிந்தான் என்பர் சிலர். இவ்வாறான வழக்கம் மாறி இன்று பெண்ணின் காலுக்கு அது வந்தவிட்டதெனப்படுகிறது. ஆண் இயல்பாகவே பெண்ணை நிமிர்ந்து நோக்குபவன். எனவே தாலியைக் கண்டு அவள் மணமானவள் என்பதைப் புரிந்து கொள்வான். ஆனால் தமிழ்ப் பெண்கள் ஆடவரை நிமிர்ந்து நோக்கா வழக்கம் இருந்து வந்தது. கீழ்நோக்கிப் பார்க்கும் போது ஆடவனின் காலில் மெட்டியிருப்பின் அவன் மணமானவன் என்பதை அவள் புரிந்து கொள்வாள் என்பதற்காகவே இம்முறை இருந்ததாகக் கூறப்படுகிறது. அந்நியப் பண்பாட்டுக் கோலங்கள் உட்புகுந்ததன் விளைவே மெட்டி மாற்றத்துக்குக் காரணம் எனப்படுகிறது.

தாலி கட்டாது வாழும் மணவாழ்வை எமது சமூகம் வெறுக்கிறது. அந்தக் குடும்த்தினரை ஏனையோர் ஓரம் கட்டி விடுதலுமுண்டு. அதேபோல் தோடு காப்புக்களின்றிக் காணப்படும் பெண்ணில் விழிக்கப் பலர் விரும்புவதில்லை. அவள் அவலட்சணப் பொருளாகின்றாள். மங்கலம் மறைந்தோடி விடுகிறது. தாலி கழுத்தில் இல்லையானால் தாரமிழந்தவள் என நினைத்துவிடுகின்றனர். இந்த அவலங்களிலிருந்து தப்புவதற்காக வறியோர் நூலிலோ கயிற்றிலோ தாலியைத் தொங்கவிடுகின்றனர். சமூகப்பாதுகாப்புக் குன்றியுள்ள இற்றைநாளில் பலரும் இவ்வாறு நூல்களிலோ சிறிய சங்கிலிகளிலோ தாலியை மாற்றிக் கொள்வதையும் காண்கிறோம்.

தாலியை விற்கவேண்டியோ அல்லது அடகு வைக்கவேண்டியோ ஏற்படும் போது எந்தஒரு பெண்ணினதும் உளநிலை பாதிக்கப்படாதிருப்பதைக் காணமுடியாது.

பண்பாட்டின் உயர்சின்னம், உறவின் குறியீடென்பதே அதற்குக் காரணம். கணவனின் மரணச்சடங்கிலேயே தாலி கழற்றப்பட வேண்டும் என்பது மரபு. அங்கு இறுதி நிகழ்வாக தாலியைக் கழற்றி மணவாளன் மீது வைத்து மயானம் அனுப்புகிறாள் மனைவி. இவ்வாறு மணநாள் முதல் மரணச் சடங்குவரை பெண்ணின் கழுத்திலிருந்து தாலி நீங்குவதை எமது பண்பாடு அனுமதிப்பதில்லை.

அதேபோலத் தோடு, தொங்கட்டான், சங்கிலி, காப்பு முதலானவற்றைப் பெண்ணானவள் அணியவேண்டும் என்பது எமது பண்பாட்டின் எதிர்பார்ப்பு. நகை அணியாது உலவுவதைச் சமூகம் விரும்புவதில்லை. நாளாந்த வாழ்வில் இயன்றளவு நகைகளைப் பெண்கள் அணிவர். தங்கநகை இல்லையேல் வெள்ளியாலோ, மணிகளாலோ அன்றேல் பிளாஸ்ரிக்காலோ செய்த அணிகளையாவது அணிந்து கொள்வர். விசேட வைபவங்கள், விழாக்களின் போது விசேடமான நகைகளை அணிவர். அவற்றின் தரத்தைப் பணபலம் தீர்மானிக்கின்றது.

விசேட வைபவங்களில் இதனால் பிரச்சினை ஏற்படுகிறது. வசதிபடைத்தோருக்கீடாக ஆபரணங்களை அணியவில்லையே என்று அவளுக்கு மட்டுமல்ல அவளது சுற்றத்தவர்களுக்கும் தாழ்வுச்சிக்கல் ஏற்படுகின்றது. எனவே இரவலாகவோ, வாடகைக்கோ வாங்கி (தமது போல்) அணிந்து நடிப்பது பெருவழக்காகும். சிலர் கச்சிதமாகப் போலி நகைகளையும் சேர்த்து இருப்பவற்றோடு இடங்களை நிரப்பி விடுகின்றனர்.

ஆன்மீக உணர்வுடைய பெண்கள் தமது இஷ்ட தெய்வங்களின் திருவுருவம் பொறித்த பென்ரன்களை அணிகின்றனர். விநாயகர், முருகன், இலட்சுமி, சரஸ்வதி, அம்மன், கிருஷ்ணர் முதலான தெய்வங்கள் பொறித்த தங்கத்தாலான பென்ரன் அல்லது அத்தெய்வங்களின் சித்திரம் வைத்துச் செய்த பென்ரனை அணிகின்றனர். கிறீஸ்தவர்களும் இதேபோல யேசு, மேரி போன்றோர் உருவங்களைச் சேர்க்கின்றனர்.

சோதிடம் - ஐதீகங்களுக்காக ஆபரணங்கள் அணியப்படுதலை இனி நோக்குவோம். இன்ன இராசிக்காரருக்கு இந்த நிறம், இந்த எண்காரருக்கு இன்ன நிறம் என்று வகுக்கப்பட்டுள்ளது, உதாரணமாக சனிக்கு நீலம், செவ்வாய்க்கு சிவப்பு, இன்ன எண்காரருக்கு இன்ன இன்ன நிறங்கள் எனவும் அமைகின்றன. அதேபோல் வருடங்களுக்கும் நிறமுண்டு. கண் திருஷ்டி படாதிருப்பதற்குக் கறுப்பு நிறம் பயன்படுத்தப்படுகிறது. எனவே இவற்றில் நம்பிக்கையுடையோர் அவ்வந் நிறங்களிலான மணிகள் கற்களை மோதிரம், காப்பு, சங்கிலி போன்றவற்றில் இழைப்பித்து அணிகின்றனர். அதேபோல் செல்வத்திற்காக புஸ்பராகத்தையும், ஆரோக்கியத்துக்கு கோமேதகத்தையும் சேர்க்கின்றனர்.


கெட்ட தேவதைகள், கிரகப் பார்வைகளிலிருந்து தம்மை பாதுகாப்பதும் மேலே கண்டவாறு தங்க உருக்களை ஆபரணங்களிற் சேர்ப்பவர் சிலரின் நோக்கமாகும். சிலர் யந்திரத் தகடுகளைச் செய்வித்து அட்சரக் கூட்டில் வைத்து அல்லது பென்ரனில் வைத்து அணிந்து கொள்கின்றனர்.

ஐரோப்பியர் வருகையின் செல்வாக்கு ஆபரணக்கலையிலும் மாற்றங்களை ஏற்படுத்தியது. இதனால் எமது புராதன வடிவங்கள் மாற்றங்களுக்குட்பட்டன. இன்று வெளிநாடுகளிலிருந்தே சில ஆபரணங்கள் வனப்பும் அழகும்மிக்கவை என வரவழைக்கப்படுகின்றன. எனினும் எமது ஆபரணங்களின் மேன்மை தளரவில்லை. எமது பண்பாட்டின் அச்சாணிகளில் ஒன்றாக ஆபரணங்கள் விளங்குகின்றன எனலாம்.

பொது நூலகம்
வலி. தெற்கு சுன்னாகம்
வரவுப் பதிவு எண்
வகுப்பு எண்



ஒழுக்காற்றுக் குழுவினர்



கணித விஞ்ஞான மன்றத்தினர்



தமிழ் மன்றத்தினர்



கிறிஸ்தவ மன்றத்தினர்



ஆங்கில மன்றத்தினர்

# கண்கண்ட தெய்வங்கள்

திரு.ந. குணரத்தினம்
அதிபர், யா/புன்னாலைக்கட்டுவன்
ம. வித்தியாலயம்.

பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களிடம் கடவுளைக் காண்பீர்களா? என வினாவிய பொழுது எல்லோரும் மௌனமாக இருந்தார்கள். தரம் ஒன்றிலேயே "அன்னையும் பிதாவும் முன்னெறி தெய்வம்" என்று ஆசிரியர்கள் கற்பிக்கின்றார்கள். ஔவைப்பாட்டி அருளிய ஆத்திசூடியை பிள்ளைகள் மனனம் செய்கின்றார்கள். பாடசாலை ரீதியில் மட்டும் அல்லாது கோட்டம், வலயம், மாகாணம், மாவட்டம், தேசியம் என மனனம் ஒப்புவிக்கப்படுகின்றது. அன்பு, பாசம், கருணை, தன்னலமற்ற சேவை என்றெல்லாம் பாடப் புத்தகங்களில், தாயைப் பற்றி அன்று தொடக்கம் இன்று வரை சிறந்த கட்டுரைகள், பேச்சுப் போட்டிகள், விவாத மேடைகள் வைக்கப்பட்டு பரிசு பெறுகின்றார்கள், பாராட்டப்படுகின்றார்கள்.

கால ஓட்டத்தால் மாணவர்கள் கல்வி அறிவுமிக்கவர்களாக, ஒழுக்கசீலர்களாக உயர்பதவிகளைப் பெறுகின்றார்கள். இவர்களில் எத்தனை பேர் பெற்றோர்களை கண்கண்ட தெய்வமாக போற்றி வணங்கிக் கடமை செய்து முதுமையில் அவர்களை பராமரிக்கின்றார்கள்?

ஆரம்ப கால இலக்கியங்களில் தாயின் பிரதான பணியாக முனைப்புறுத்தப்படுவது ஈன்று புறந்தருதலாகும் திருவள்ளுவரும் ஈன்ற பொழுது பற்றிப் பேசுகிறார். இது ஒரு முக்கியமான அம்சமாகும். பிற்கால வழக்கிலும் இன்றைய பேச்சு வழக்கிலும் கூட இந்த அம்சம் தன்மைப்படுத்தப்படுகின்றது. தாயைப் பற்றி பேசும்பொழுது வெறுமனே தாயெனக் கூறாமல் பெற்ற தாய் என்று கூறும் மரபு இன்று வரை காணப்படுகின்றது. உண்மையில் பிள்ளை பெறுவது என்பது தாயும் பிள்ளையும் தத்தம் உயிர்நிலைகளைப் பெற்றுக் கொள்வதாகும். தாயின் பிரசவ வேதனையும் அதனால் அவளுக்கு ஏற்படுகின்ற உடல்நிலை ஆபத்துக்களையும் உள்வாங்கியே "ஈன்றபொழுது" என்ற தொடர் பயன்படுத்தப்படுகின்றது.

பிதாவழி ஆதிக்கச் சூழலில் வகுத்தெடுக்கப்பட்ட இறைவன், ஆன்மா உறவு பற்றிய வகைப்பாட்டில் தகப்பன் தாய் உறவுதான் முக்கியப்படுத்தப்படுகின்றது. தாயை இணைத்தே தேவார முதலிகள் முதல் மாணிக்கவாசகர் வரை பாடியுள்ளனர்.

"பால்நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிந்து நீ பாவியேனுடைய ஊனினை உருக்கி உள்ளொலி பெருக்கி உலப்பிலா ஆனந்தமாகி தேனினைச் சொரிந்து புறம்புறம் திரிந்த செல்வமே சிவபெருமானே" என மாணிக்கவாசகர் பாடியுள்ளார். குழந்தைக்கு எப்பொழுது பசிக்கும் என்பது தெரியாது. அவள் நினைத்தே அதனைச் செய்வாள். தாயின் மனநிலையைச் சித்திரிக்கும் இலக்கியப் பாடல்கள் பல உள்ளன.

"தந்தைசொல் மிக்க மந்திரமில்லை" என்ற வகையில் தந்தை தன் வாழ்நாளில் ஏற்பட்ட இன்பதுன்பங்களால் பொருளீட்டுவதில் ஏற்பட்ட பட்டறிவால் தன் பிள்ளைகளுக்கு தான்பட்ட துன்பம் ஏற்படக் கூடாதென எண்ணி அல்லும் பகலும் குடும்பத்திற்காய் உழைக்கிறான். அவனது பிள்ளைகள் வளர்ந்த பின் பொருளாதாரத் தேவையைப் பூர்த்தி செய்வதற்காகப் பலர் தங்கள் காலத்தை செலவழிக்கின்றார்கள். தங்கள் மேல் அளவு கடந்த அன்பைச் சொரிந்த பெற்றோர்களின் உணர்வுகளை எடைபோட முடியாதவர்களாகத் தங்கள் குடும்பச் சுமைகளை பெரியதாக எடுத்துக் கொள்கின்றார்கள். இதனால் இவர்கள் பெற்றோரின் அன்பைப் புரிந்து அவர்களின் காலடியில் இருந்து கடமை செய்யும் பாக்கியத்தை இழந்தவர்கள் ஆகின்றார்கள்.

தனிக் குடித்தனம், தனிபொருளாதார அமைப்பு என கூர்மை அடைந்த இன்றைய சமுதாய அமைப்பில் தாய் தந்தையரின் காலடியில் இருந்து பணிபுரிவது இயலாத காரியம் என இயம்புகின்றனர்.

"தாயிற் சிறந்ததொரு கோவிலுமில்லை" உள்ளத்தில் விளைந்ததனால் பார்க்க முடியாவிட்டாலும் அவளின் நல்லாசிகள் என்றும் கிடைக்கும் எனத் தங்களை திருப்திப்படுத்திக் கொள்வோருமுள்ளனர்.

தாய் தந்தை இருவருமே பிள்ளைகளுக்கு முதற்கண்ட கடவுள்கள். இதனால் வளர்ந்த நாடுகளில் பெற்றோரைப் பார்ப்பதற்கு என்றே ஒருநாளை அரசாங்க விடுமுறையாக்கி, பிள்ளைகள் அழகிய மலர்க் கொத்துக்களை அன்பளிப்பாகக் கொடுத்து பெற்றோரை அகமகிழச் செய்கிறார்கள். கிராமந்தோறும் முதியோர் இல்லங்கள் அமைக்கப்பட்டு எல்லாவித வசதிகளும் அளிக்கப்பட்டு பராமரிக்கப்படுகிறது, அங்கு சந்தோசமாகப் பெற்றோர்கள் வாழ்கின்றார்கள்.

பிள்ளைகளுக்கு பெற்றோர்கள் தெய்வங்கள் என்ற எண்ணம் தானாகத் தோன்றும் வரை வீட்டில் அமைதி தோன்றாது. வீட்டில் அமைதி தோன்றாவிட்டால் நாட்டில் அமைதி தோன்றாது. நாடுகளில் அமைதி தோன்றாவிட்டால் உலகம் கேள்விக்குறியாகிவிடும். எனவே தந்தை தாயைப் பேண வேண்டும், அவர்களே நாம் கண்கண்ட தெய்வங்களாவர்.

# மாணவர் கல்வியும் பெற்றோர் ஆசிரியரின் பங்களிப்பும்

திருமதி.க. வேலாயுதம்
முன்னாள் உபஅதிபர்.

ஒரு மனிதனை முழுமையாக்குவது கல்வியேதான். அக்கல்வியின் மூலமாகத் தனிமனிதன் ஆளுமையை வளர்த்துக் கொள்கிறான். கற்கும் கல்வியானது நாட்டிற்கும் வீட்டிற்கும் நலம் பயக்கும் நற்குடிமகனை உருவாகுவதற்கு உதவவேண்டும். கல்வி மூலம் அறிவுத் திறனை வளர்த்துச் சிறந்த அறிவாளிகளாக சிந்தனைச் சிற்பிகளாக மிளிர வேண்டும். கல்வியை இலகுவாகப் பெற்றுவிட முடியாது. வலிந்து, வலிந்து தான் பெறவேண்டும். இக்கருத்திற்கமையவே கல்வி என்னும் பயிருக்கு ‘‘கண்ணீர் என்னும் மழை வேண்டும்’’ என்று ஆன்றோர் கூறியுள்ளனர்.

மாணவர் கல்வியைப் பற்றி ஆய்வாளர்களாகிய ரூசோ, பிளேட்டோ, ஹோபர்ட் போன்றவர்கள் மாணவர்களுக்குமட்டுமல்லாது ஆசிரியர்களுக்கும் கல்விச் சிந்தனைகளை, கற்பித்தற் திறன்களை எடுத்துக் கூறியுள்ளனர். தாயின் வயிற்றில் இருக்கும் பொழுதே பிள்ளை கேட்டல் விருத்தியைப் பெறுகின்றதென்பது ஆய்வாளர் கருத்து. அக்காலத்தில் தாயானவள் நல்ல சிந்தனையாளரின் கருத்தடங்கிய நூல்களைக் கற்பதுமட்டுமல்லாமல், தனக்குப் பிறக்கும் பிள்ளையின் அறிவுத்திறன் வளர்ச்சி பற்றிய நினைவுடனும் இருக்க வேண்டும். அப்பொழுதுதான் பிறக்கும் குழந்தை நல்ல சிந்தனையுள்ள பிள்ளையாகப் பிறக்கும். நல்லவனாகப் பிறக்கும் குழந்தை பின்னர் நல்லவனாவதும் தீயவனாவதும் அவர்கள் வளர்ப்பிலே தான் தங்கியுள்ளது.

ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு மூலவள அடிப்படையாய் அமைவது கல்வி என்பதுதான் கிரேக்க தத்துவ ஞானியாகிய ‘பிளேட்டோ’வின் கருத்தாகும். கல்விக்கு எல்லை இல்லை. கல்வி என்பது வாழ்க்கை. அதை அடையக் கூடிய ஒரேவழி சுய அனுபவமும், அறிவு சேர்க்கும் ஊக்கமும், தளராத அறிவுத் திறனுமாகும். ஒவ்வொரு தனிமாணவனிடமும் ஏற்படவேண்டிய சிறப்பம்சம் இதுவாகும். தத்துவஞானி ‘‘சோக்கிரட்டீஸ்’’ சாதாரண வறிய குடும்பத்திற் பிறந்தவராக இருந்தாலும் அவரது அறிவுத் திறனால் பார்போற்றும் பெரும் தத்துவஞானியாக இன்றும் விளங்குகின்றார்.

மனிதனிடம் மறைந்து கிடக்கும் பரிபூரணத்தை வெளிப்படுத்துவது தான் கல்வி. அறிவை உபயோகிக்கும் கலையை அறியத் தருவது கல்வியே தான். ஜப்பான் போன்ற நாடுகளெல்லாம் தொழிற்கல்விக்கே முன்னுரிமை கொடுக்கின்றன. தொழிற்கல்வியையும் மாணவர்களுக்கு புகுத்துதல் சிறந்ததாகும். அடிமைத் தளையில் வாடிய இந்தியமக்களுக்கு அகிம்சைமுறையில் விடுதலை வேண்டிக் கொடுத்த காந்திமகானும் தனிமனிதனுக்கு கல்வி அவசியமென்பதை வலியுறுத்தியுள்ளார்.

"கற்கை நன்றே கற்கை நன்றே பிச்சைபுகினும்
கற்கை நன்றே"

என்ற கூற்றுக்கேற்பச் சீரிய கல்வியை சிறப்புறக் கற்று மலைமேல் விளக்கென மாணவர்கள் திகழ வேண்டும்.

மேலும் பிள்ளையின் ஆரம்பகாலத்திலிருந்தே பிள்ளையின் கல்விமீது பெற்றோர்கள் கருத்தாக, விழிப்பாக இருக்க வேண்டியது அவர்களது கடமையாகும். தாயின் அரவணைப்பிலிருந்து பிரிந்து பாடசாலை செல்லும் பிள்ளைக்குப் பாடசாலை பசுஞ்சோலையாக இருக்கவேண்டும். பிள்ளை விருப்பமாகச் சென்று கல்வியைப் பெறக்கூடிய மனநிலையைப் பெற்றோர் கொடுக்க வேண்டும். பாடசாலை சென்றாலும் கூடிய நேரம் பிள்ளையானது பெற்றோருடனேயே இருக்கின்றது. ஆனபடியால் பெற்றோர் பிள்ளையின் படிப்பில் அக்கறை கொள்ள வேண்டும். பிள்ளை அன்றன்று படிக்கும் பாடங்களைப் பற்றி வினாவுவதுடன் மட்டுமல்லாது பிள்ளையின் பயிற்சிகளையும் பார்வையிடுதல் சிறந்ததாகும். பாடசாலைக்குப் பிள்ளையை அனுப்பினால் மட்டும் போதாது. பாடசாலை ஆசிரியருடன் பிள்ளையின் தகமை, செயற்பாடு பற்றி அறிதலும் முக்கியமாகும்.

"ஒருமைக்கண் தான் கற்றகல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப்பு உடைத்து"

பிள்ளை படிக்கின்ற படிப்பு தொடர்ந்து ஏழு பிறப்பும் தொடரும் என்று வான்புகழ் வள்ளுவப் பெருந்தகை கூட எடுத்தியம்பியுள்ளார், தோண்டத் தோண்டக் கேணியில் நீர் ஊறுவது போன்று கற்கக்கற்க அறிவாகிய நீரும் ஊறும். எனவே வற்றாத, அழிவில்லாத சீரிய கல்விச் செல்வத்தைக் கட்டியெழுப்பப் பெற்றோர் முக்கிய பங்குகொள்ள வேண்டும். சில பிள்ளைகளுக்குக் குறிப்பிட்ட சிலகாலங்களில் கற்றலில் ஒருதிருப்புமுனை தோன்றவும் கூடும். அவ்வேளையில் பிள்ளையை அன்பான முறையில் அணுகி அதற்கான வழிவகைகளைக் கையாள வேண்டும். பெற்றோர் ஆசிரியர்

தொடர்பானது மிக முக்கியமானதாகும். பெற்றோர் விழிப்பாக இருந்து பிள்ளையின் கல்வி வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்தாலேதான் சிந்தனையைச் சிதறவிடாது சிறந்த அறிவைப் புகட்டிச் சீரிய செம்மல்களாக விளங்க வைக்கலாம்.

அடுத்ததாக பெற்றோரைப் பொறுத்தமட்டில் தாங்கள் விரும்புவதைத் தான் பிள்ளை படிக்க வேண்டும் என்ற கொள்கையை மாற்றவேண்டும். பிள்ளை விஞ்ஞானம் படித்து டாக்டராக வரவேண்டுமென்று பெற்றோர் விரும்பி வற்புறுத்த பிள்ளைக்கோ கலைத்துறைதான் போகும். இறுதியில் பிள்ளையின் பரீட்சைப் பெறுபேறு இரண்டும் அற்றநிலை. இச்சமயத்தில் பெற்றோர் கருத்தாக இருந்து ஆசிரியருடன் ஆலோசித்து பிள்ளைக்கு ஆற்றலான துறையில் படிப்பைத் தொடரவிடுவதே சிறந்தது.

மேலும் ஆசிரியர் மாணவர் உறவை நோக்குமிடத்து பிள்ளைகளின் வீட்டுச் சூழல், அவர்களின் அறிவுத்திறன், செயற்பாடு என்பவற்றைப் புரிந்து கொள்வது முக்கியமானதொன்றாகும். பலதரப்பட்ட மாணவர்கள் பாடசாலைக்கு வருவார்கள். அன்போடு அவர்களை அணுகி அவரவர் தன்மைகளை அறிய முற்படவேண்டும். அவர்களில் கண்டிப்பானவர்களும் இருப்பார்கள். கனிவானவர்களும் இருப்பார்கள். ஆசிரியர், மாணவர் உறவுமுறை சுமுகமானதாக இருக்க வேண்டும். இனிமை, அன்பு, அரவணைப்பு அவர்கள் மீது காட்டப்பட வேண்டும். அவர்களை நல்வழிப்படுத்தி சான்றோனாக்குவதில் ஆசிரியர் ஒவ்வொருவரும் விழிப்பாக இருக்க வேண்டும். கனிகொடுக்கும் நிழல் விருட்சமாக விளங்கவேண்டும்.

சில மாணவர்களின் வீட்டுச் சூழல் வெறும் பாலைவனமாகவே இருக்கும். அவனுக்கு வீட்டில் கனிவே கிடைக்காது. அவனுக்கு பாடசாலையே பசும் சோலையாகவும் காட்சியளிக்கும். பசுமையான தனது ஆசிரியரையும், பாடசாலை தனது அறிவுப்பசியை ஆசிரியரிடம் தீர்த்துக் கொள்கிறான். ஆசிரியரைத் தெய்வமாக மதித்து தன் எதிர்கால வாழ்விற்கு ஒளியூட்டுகிறான். மாணவர்களது கற்றல் தாகத்திற்கு அறிவென்னும் நீரூற்றில் தளிர்த்துப் பெருவிருட்சமாக விளங்க ஆசிரியர்கள் பெருந்துணையாக இருக்கின்றார்கள்.

எனவே மாணவர்களின் அறிவு, திறன், மனப்பாங்கு வளர்ச்சிக்கும் அவர்களின் எதிர்காலம் சுபீட்சமாக அமைவதற்கும் ஆசிரியர் பங்களிப்புடன் பெற்றோர் பங்களிப்பும் மிகமிக அவசியமாகும்.

# விந்தைகள் செய்த விஞ்ஞானிகள்

திருமதி. ச. பாக்கியநாதன்
ஆசிரியை.

தொடர்ச்சியான சிந்தனையாலும் ஆராய்ச்சியாலும் மனிதர்கள் விஞ்ஞானிகளாகின்றனர். அவ்வாறான விஞ்ஞானியாகிய ஆக்கிமிடிஸ் வாழ்ந்த நாட்டின் அரசனான கீரோவுக்கு தூய பவுணில் முடியொன்று செய்து அணிந்து கொள்ள வேண்டுமென்ற ஆசை ஏற்பட்டது. அரசன் முடிசெய்வதற்குத் தேவையான தூயபவுணை பொற்கொல்லனிடம் கொடுத்தான்.

“இரண்டு வாரத்திற்கிடையில் இந்தப் பவுணைக் கொண்டு நீ எனக்கு அழகான முடியொன்று செய்து தரவேண்டும்” என்று கட்டளையிட்டான். பொற்கொல்லனும் அவ்வாறே முடியைச் செய்து அரசனிடம் சேர்ப்பித்தான். முடியைப் பெற்றுக் கொண்ட அரசனின் மனதில் உள்ளுக்குள்ளே புகைமூட்டமாய் ஒரு சந்தேகம் பிறந்தது. இந்தப் பொன்முடியில் வெள்ளி கலந்திருக்குமோ என்று முடியை நிறுத்துப் பார்த்தான் அரசன். அவன் கொடுத்த பவுணின் நிறையும் முடியின் நிறையும் சமமாகவே இருந்தன. ஆனால் சிறிதளவு பவுணை அகற்றிவிட்டு அதே நிறைகொண்ட வெள்ளியைச் சேர்த்திருக்கலாம் அல்லவா? இதை எப்படிக் கண்டுபிடிப்பது. அரசனுக்கு தலைசுற்றியது. இச்சந்தேகத்தைத் தீர்க்க அந்நாட்டின் பிரபல விஞ்ஞானி ஆக்கிமிஸ்ஸை அழைத்தான் அரசன். “இந்தப் பொன்முடியில் வெள்ளி கலந்திருக்கிறதா என்று நீர் கண்டுபிடித்துச் சொல்ல வேண்டும்” என்று கட்டளையிட்டான். இரவும் பகலும் இதைப்பற்றியே யோசித்தார் ஆக்கிமிடிஸ். ஒரு நாள் தொட்டி நிறைந்த நீரில் குளித்துக் கொண்டிருந்தார். இவரது உடலை ஒரு விசை மேல் நோக்கி தள்ளுவதை உணர்ந்தார்.

பதார்த்தங்ககளின் உண்மையான நிறையையும் அவை நீரில் அமிழ்ந்திருக்கும் போது காட்டும் தோற்ற நிறையையும் கொண்டு, பதார்த்தங்களை இனங்காணமுடியும் என்ற ஒரு உண்மை அவரது மூளையில் தோன்றியது. அரசனுடைய கேள்விக்கு விடை கண்டதால் எல்லையற்ற மகிழ்ச்சியடைந்தார். குளித்துக் கொண்டிருந்தவர் உடை மாற்றக்கூட மறந்து போனார். “உரேக்கா”, “உரேக்கா” என்று கத்திக்கொண்டே தெருவில் ஓடினார். உரேக்கா என்றால் அவர்களது மொழியில் “கண்டுபிடித்துவிட்டேன்” என்பது கருத்தாகும்.

கிரேக்க நாட்டிற்கு ஒருமுறை பிரச்சனையான நேரம் வந்தது. அரசசபையில் ஒரு சிறந்த அறிஞர் இருந்தார். அரசர் அவரை அழைத்தார். “போர் மேகங்கள் எமது நாட்டை சூழ்ந்து வருகின்றன. எதிரி நாட்டுக்கடற்படை நமது கடற்கரையை

அண்மித்துவிட்டது. எமது நாட்டைக் காப்பாற்ற உங்கள் அறிவு உதவுமா?'' என அரசன் கேட்டான். இதற்கு ''ஏன் கவலைப்படுகிறீர்கள்? எதிரியின் கப்பலைத் தடுப்பது என்ன அந்தக் கப்பலை அழித்தே விடுவேன்'' என்றார் அக்கிமிடிஸ். அவர் அறிஞர் தானே, எப்போது போர்ப்பயிற்சி பெற்றார் என ஆச்சரியப்பட்டான் அரசன். ஆயினும் அறிஞரின் திறமையில் நம்பிக்கை இருந்தபடியால் தலையை ஆட்டி ஒப்புதல் தெரிவித்தார். ''அதிகம் படித்துப் படித்து இந்த மனிதருக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது. அரசரும் இந்தப் பைத்தியம் சொல்வதை நம்பிக் கொண்டிருக்கிறார்'' என உரையாடலைக் கேட்டுக் கொண்டிருந்தவர்கள் பேசிக் கொண்டார்கள்.

பளபளப்பான வளைந்த உலோகத் தகடுகளைக் கொண்டு பெரிய குழிவாடிகளை அமைத்தார் அந்த மனிதர். எதிரிக் கப்பல்கள் வந்து கொண்டிருக்கின்றன. குழிவாடியில் சமாந்தரமாய் வந்துபடும் ஒளிக்கதிர்கள் தெறித்துக் கப்பலில் குவியும்படி ஆடியைத் திருப்பினார். கப்பல்கள் திடீரென தீப்பிடித்து எரிந்தன.

சத்தமில்லாமல் கப்பல்கள் எரியத் தொடங்கின. விசித்திரமான இந்த மனிதர் தான் புகழ்பெற்ற கிரேக்க விஞ்ஞானி ஆக்கிமிடிஸ் ஆவர்.

கி.மு.600 இல் தால்ஸ் என்ற கிரீஸ் விஞ்ஞானி ஒரு அம்பர் (Amber) துண்டைக் கொண்டு மின்சாரத்தைக் கண்டுபிடித்தார். முதிர்ந்த 'பைன்' மரத்தில் இருந்து வடியும் 'பால்' கல் மாதிரி இறுகிவிடும். இந்த கல் மாதிரியான அம்பர்த்துண்டைத் தன் போர்வையில் தேய்த்துப் பார்த்தார். அப்போது அதில் உண்டான பொறிகள் அவரை வியப்பில் ஆழ்த்தின. நன்கு ஆராய்ந்து அந்தச் சக்தியானது 'அம்பரில் மட்டுமே இருப்பதாக' முடிவு செய்தார். அதற்கு 'எலக்ரிசிற்றி' என்று பெயரிட்டார். அவர் அதைச் சொல்லி 2000 ஆண்டுகளின் பின்னும் மக்கள் அதைப் புரிந்து கொள்ளவில்லை. அதற்குப் பின்னர் கி.பி 1600 இல் சேர் வில்லியம் கில்போட் என்ற ஆங்கிலேய விஞ்ஞானி அம்பருக்கு மட்டுமன்றி கண்ணாடி, கந்தகம், வைரம் ஆகியவற்றிற்கும் இந்தச் சக்தி இருப்பதை அவதானித்தார். பெஞ்சமின் பிராங்கிகளின் என்ற அமெரிக்க விஞ்ஞானியும் நிலைமின்பற்றிய ஆராய்ச்சிகளை மேற்கொண்டார்.

மைக்கேல் பரடே என்ற ஆங்கில விஞ்ஞானி மின்சாரத்தைப் பிறப்பிக்க உதவும் 'டைனமோ'வைக் கண்டுபிடித்தார். ஏழு வருட ஆராய்ச்சிக்குப் பின்னர் ஒட்டு மின்னை உருவாக்க வல்ல மின்பிறப்பாக்கிகளை அவர் கண்டுபிடித்தார்.மின்காந்தத் தூண்டல் எனும் விளைவை அவர் கண்டுபிடித்தார். இது சாத்தியமாயிற்று. பரடே எந்தப் பல்கலைக்கழகத்திலும் பட்டம்பெறவில்லை. அச்சகம் ஒன்றில் வேலைசெய்து கொண்டிருந்த அவர் ஹம்பிரிடேலி (Humprey Davy) என்ற விஞ்ஞானியின் ஆய்வுகூடத்தில் உதவியாளராகச் சேர்ந்தார். அங்கு தன் சுயமுயற்சியால் ஆராய்ச்சிகள் செய்து மாபெரும் விஞ்ஞானியாக உயர்ந்தார்.

# உளநெருக்கீடும் சிறுவர்களும்

*செல்வி. விஜிதா திருநாவுக்கரசு*
*ஆரம்பக்கல்வி டிப்ளோமா பாடநெறி*

இன்று உலகில் வாழும் அநேக மனிதர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளில் உளநெருக்கீடும் ஒன்றாகும். சிறியோர் முதல் பெரியோர் வரை இப்பாதிப்புக்கு உள்ளாகின்றனர். உள நெருக்கீடு என்றால் என்ன என்பதனைச் சற்றுச் சிந்திப்போம். ஆங்கிலத்தில் Stress என்னும் சொல் உளநெருக்கீட்டைக் குறிக்கப் பயன்படுகிறது. Stress என்ற சொல்லுக்குச் சாதாரணமாக நெருக்குதல், அழுத்தம், இறுக்கம், பிரச்சினை, ஆபத்தான நிலை என்று பொருள்படுகிறது. ஆனால் இதேசொல் உளவியலில் ஒரு சம்பவம் அல்லது பிரச்சினையின் விளைவாக ஒருவரில் உடல், உள ரீதியாலான பாதிப்புக்களை ஏற்படுத்தும். அவரின் நடத்தையில் மாற்றத்தை ஏற்படுத்துவதும் நிலையை "நெருக்கீடு" எனப்படுகிறது. குறித்தவொரு சம்பவம் அல்லது சம்பவங்கள் ஒருவரில் ஏற்படுத்தி தாக்கங்கள் அல்லது நெருக்கீடுகள் அவரின் ஏற்றுஇயைபாகி நடக்கும் ஆற்றலுக்கு அப்பாற்பட்டு எல்லை மீறும் போது அதன் விளைவாக நடத்தைப் பிறழ்வுகளும் மற்றும் உளரீதியான நோய்களும் உருவாகின்றன எனக் கூறலாம்.

இன்று சமூகத்தில் இப்பாதிப்புக்கு உள்ளானவர்கள், உள்ளாகிக் கொண்டிருக்கிறவர்கள் சிறுவர்களேயாவர். சாதாரண காலங்களில் கூட பிள்ளைகள் தமது நாளாந்த வாழ்க்கையில் பல தரப்பட்ட பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கின்றனர். ஆயினும் சிலர் சாதகமாகவே எதிர்கொள்கின்றனர். சிலர் சில நேரங்களில் பெற்றோரின் உதவியுடன் பிரச்சினைகளைக் கையாளுகின்றார்கள். துரதிர்ஷடவசமாகச் சில பிள்ளைகளில் இவ்வாறான உளசமூகப் பிரச்சினைகள், பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றன.

இத்தகைய உளப் பிரச்சினைகள் ஏற்படுவதற்கு ஏதுவாக உள்ள காரணிகளாகப் பின்வருவனவற்றைக் கூறலாம்.

- போர்க்காலச் சூழ்நிலை
- வறுமை
- பெற்றோர் இழப்பு
- பெற்றோருக்கிடையேயான சீரற்ற உறவு
- மதுப்பழக்கத்திற்கு ஆளான தலைவனையுடைய குடும்பம்
- குடும்பத்தில் ஏற்படும் இழப்புக்கள்
- உரிய வயது எய்தும் முன்னரே பெற்றோரின் பொறுப்புக்களை சிறுவர்கள் ஏற்பதற்கு நிர்ப்பந்திக்கப்படுதல்
- இடர்ப்பாடான கல்விச் சூழல்
- பொருத்தமற்ற வீட்டுச்சூழல்
- பாலியல் துஷ்பிரயோகம்
- வன்முறைகள்
- பெற்றோரின் இருதார மணங்கள்
- சுகவீனம்
- போசாக்கின்மை
- இயற்கை அனர்த்தங்கள்
- இடப்பெயர்வு
- போர்க்காலச்சூழல்
- சூழல், சுகாதாரப் பிரச்சினைகள்

இத்தகைய காரணிகளால் உளப் பிரச்சினைகளுக்கு ஆளான பிள்ளைகள் வெளிப்படுத்தும் நடத்தைப் பாங்குகள்.

- சரியான காரணம் இல்லாது அழுதல்
- பயத்தினால் நடுங்குதல்
- முரட்டுத்தனம்
- அமைதியின்மை, பதற்றப்படுதல்
- காரணமில்லாது உரத்துச் சத்தமிடல்
- அளவுக்கு மிஞ்சிய நித்திரை
- பயங்கரக் கனவுகளைக் காணுதல்
- உணவில் அக்கறை இன்மை
- ஒதுங்கியிருத்தல்
- ஞாபக் குறைவு
- மூர்க்கமான சுபாவம்
- படுக்கை நனைத்தல்
- தன்னிலும், பிறரிலும் நம்பிக்கையீனம் கொண்டிருத்தல்
- சேர்ந்து விளையாடாது ஒதுங்குதல்
- ஒழுங்கற்ற பாடசாலை வரவு
- வேலைகளைச் செய்து முடிக்க இயலாமை
- எதிர்காலம் பற்றி எதிர்மறையான எண்ணம் இருத்தல்
- மெய்ப்பாட்டு அறிகுறிகளைக் காட்டுதல் (தலையிடி, முதுகு நோ)
- கற்றலில் ஆர்வம் காட்டாது இருத்தல்


இவ்வாறான நடத்தைப் பாங்குகளை இனம் கண்டு கொண்டால் அவற்றைச் சீர் செய்ய வேண்டும். இதற்கு ஆசிரியர்களே பொறுப்பானவர்கள். ஏனெனில் சமூகமயமாக்கற் காரணிகளில் குடும்பத்திற்கு அடுத்தநிலையில் இருப்பது பாடசாலையேயாகும். பிள்ளைகளின் உள நலத்திற்கும், அவர்களின் கற்றல் செயற்பாடுகளுக்கும் சமூகமயமாக்கலுக்குமிடையே நெருக்கமான தொடர்பு இருப்பதனால் சிறுவர்களின் உளநலத்தில் பாடசாலை ஆசிரியர்களின் பொறுப்பு மிக முக்கியமானதாகின்றது.

அந்த வகையில் உளப் பாதிப்படைந்த பிள்ளைக்கு அதிலிருந்து விடுபடுவதற்கு ஆசிரியர் பின்வரும் வழிகளில் உதவ முடியும்.

- உற்று அவதானித்தல்
- பிள்ளையின் படிமுறை வளர்ச்சியைக் கருத்தில் கொள்ளல்
- தொடர்ந்தும் இவற்றைச் செய்ய வழிப்படுத்தல்
- குடும்பத்தினையும் செயற்பாடுகளில் ஒன்றிணைத்தல்
- செவிமடுத்தல்
- முரண்பாடு தீர்த்தல்
- விளையாட்டு முறை
- தளர்வுப் பயிற்சி
- பிரச்சினை தீர்த்தல்
- ஆடல், பாடல்
- கதை சொல்லல்
- சாந்த வழிமுறைகள்
- ஆதரவளித்தல்
- நடத்தை சிகிச்சை
- சம்பவ விபரிப்பு
- வகுப்பறையைக் கவின்நிலையாக்குதல்
- கோபத்தைக் கையாளுதல்
- வரைதல், ஆக்கச் செயற்பாடுகள்
- நடித்தல்

உளநெருக்கீடு என்றால் என்ன என்பது பற்றியும், அவை ஏற்படுவதற்குரிய காரணிகளையும் இத்தகைய பாதிப்புக்கு ஆளான பிள்ளைகள் வெளிப்படுத்தும் நடத்தைப் பாங்குகளையும், அவற்றை இனங்கண்டவுடன் ஆசிரியர் ஒருவர் எவ்வாறு உதவமுடியும் என்பது பற்றி நோக்கினோம். இத்தகைய பிரச்சினைகளுக்கு தீர்வினை ஏற்படுத்துவதற்கு வழிகாட்டுவதுடன் எதிர்காலத்தில் சவால்களை எதிர்கொள்ளும் வண்ணம் நாட்டுக்கும், வீட்டுக்கும் தேவையான நற்பிரஜைகளை உருவாக்குவதில் ஆசிரியர்களின் கரங்கள் உதவும் கரங்களாக மாறட்டும்.

# மாணவர் உடல் உளச் சுகாதாரம்



*திருமதி. மேரிஜெயந்தினி கிறிஸ்தோப்பல்சில்வா*
*பயிற்றப்பட்ட ஆசிரியர் – விவசாயம்.*

சுகாதாரம் எனும் பொழுது பொதுவாக இது குழந்தை முதல் பெரியோர்வரை ஒவ்வொருவருக்கும் தேவையான ஒன்று. சுத்தமான வாழ்வு சுகமான சந்தோசமான சமூகத்தை உருவாக்கும். பொதுவாக ஒவ்வொரு தனிமனிதனும் சுத்தமாக வாழப்பழகிக் கொள்ளல் வேண்டும். தொடர்ந்து தன் குடும்பமும் தான் வாழும் சமூகமும் சுத்தமாக வாழ வழிவகுத்தல் வேண்டும்.

இவ்வகையில் நோக்கும் பொழுது முதலில் நாம் ஒவ்வொருநாளும் அதிகாலையில் நீராடுதல் வேண்டும். இது உடலிற்கும், உளத்திற்கும் புத்துணர்ச்சியைக் கொடுக்கின்றது. நம்முன்னோர் இதனைச் சிறப்பாகக் கடைப்பிடித்து வந்தனர். மேலும் மாலையிலும் உடலைக் கழுவிச் சுத்தம் செய்தல் வேண்டும்.

"கந்தையானாலும் கசக்கி கட்டு.
கூழானாலும் குளித்துக் குடி"

என்ற முதுமொழிக்கிணங்க வாழப் பழகிக் கொள்ளல் வேண்டும். தோய்த்துலர்ந்த ஆடைகளை அணிதல் வேண்டும்.

மேலும் மாணவர்கள் பாடசாலை வாழ்க்கையிலே சிறந்த ஒழுக்கத்தையும், சுத்தத்தையும், கடைப்பிடித்தல் வேண்டும். கை, கால் நகங்களை வாரந்தோறும் வெட்டித் துப்புரவு செய்தல் வேண்டும். தலைமயிரை ஒழுங்காக வெட்டி வாரம் இரு தடவையேனும் தலை நீராடுதல் வேண்டும். பெண்பிள்ளைகள் தலைசீவிப் பிண்ணி முடிதல் வேண்டும். நாளாந்தம் சீரான முறையில் தலைக்கு எண்ணெய் பூசுதல் வேண்டும். மலசலம் கழித்த பின்னர் கை, கால்களைச் சவர்க்காரமிட்டுக் கழுவிக் கொள்ளுதல் வேண்டும். நமது உடலில் இருந்து வெளியேறும் வியர்வை, கண்ணீர், பீழை, உமிழ்நீர், சளி, மூக்குச் சுரப்புகள், சிறுநீர், ஏனைய சுரப்புகள் வளியுடன் கலந்து தோலின் மீது காணப்படும் பற்றீரியாக்களுடன் தொடர்புபடுவதால் துர்நாற்றமுடைய இரசாயனப் பதார்த்தங்கள் தோற்றுவிக்கப்படலாம். இவ்வாறான சுரப்புகள் எமது உடலில் நீண்ட நேரம் படிந்து கொள்ள இடமளிக்காது உடனுக்குடன்

